விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 23 புதன்கிழமை (06.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 169

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-2812)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# தங்கள் தலைவர் சம்பந்தரையே
# தலை குனிய வைத்த கூட்டமைப்பினர்

## பாராளுமன்றத்தில் பெருத்த அவமானப்பட்ட கூட்டமைப்பின் தலைவர்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சித் தலைவர் இரா.சம்பந்தரை மிகமோசமாக அவமானப்படுத்தி தலைகுனிய வைத்த சம்பவம் நேற்று பாராளுமன்றத்தில் நடந்தேறியது. (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வழியாக ஆஸி.செல்ல முயன்ற நான்கு பேர் கைது

(யாழ்ப்பாணம்)

இராமேஸ்வரத்திலிருந்து - இலங்கை வழியாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியா செல்வதற்காக இராமேஸ்வரம் வழியாக இலங்கைக்கு கள்ளத் 24

## போட்டிப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

எதிர்வரும் 9-ந் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கான போட்டிப் பரீட்சைக்குரிய

மாதிரி வினாத்தாள்

இன்றைய வலம்புரியில் வெளிவரும். உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்...

## விபத்துக்குள்ளான இளைஞன் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)


மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி 10 நாட்களின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் இறுவிலை சேர்ந்த வைகுந்தநாதன் கௌசிகன் (வயது 27) என்ற இளைஞனே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞர் கடந்த 26 ஆம் திகதி தனது நண்பனை பார்ப்பதற்காக இயக்கச்சிக்கு சென்றுள்ளார்.

அன்றையதினம் மாலை நண்பனுடன் மோட்டார் சைக்கி 23

## நாடாளுமன்ற பிரதி சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆனந்த குமாரசிறி தெரிவு



(கொழும்பு)

நாடாளுமன்றின் 29ஆவது பிரதி சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோ பிள்ளை தோல்வியடைந்தார். 23

## கட்டாக்காலி மாட்டுடன் மோ.சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மல்லாவி)

வவுனியா உளுக்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள சூடுவெந்த புலவுப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் நின்ற கட்டாக்காலி மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே குடும்பஸ்தர் ஒருவர் 23

## மாநகர சபை தீர்மானத்தை மீறி இராணுவத்தினருடைய பங்களிப்பில் யாழில் இடம்பெற்ற மரநடுகை நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் மீறி இராணுவத்தினருடைய பங்களிப்பில் இடம்பெற்ற மரநடுகை நிகழ்வில் மாநகர முதல்வர் உட்பட சில உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஆனால் தீர்மானத்துக்கு அமைவாக தனிப்பட்ட ரீதியில் தாம் குறித்த நிகழ்வை புறக்கணித்துள்ளதாக பல மாநகரசபை உறுப் 23

## ஆசிரியை ஒருவர் உயிரிழப்பு நடவடிக்கை எடுக்கக்கோரி கல்வி அமைச்சின் அலுவலகத்தின் முன் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அதிபர் ஒருவரின் தொந்தரவு காரணமாக ஆசிரியை ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி நேற்றைய தினம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தின் முன்பாக பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் அரசியல் கட்சிகள் இணைந்து போராட்டம் 23

## யாழிற்கு போதைப்பொருள் விநியோகிக்கும் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு போதைப்பொருளை விநியோகிக்கும் ஒருவர் கலேவெல பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு - வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது 23

## துன்னாலை தெற்குப்பகுதியில் பட்டப்பகலில் வீடு புகுந்து திருட்டு

(கரணவாய்)

பட்டப்பகல் வேளை வீடு புகுந்த திருடர்கள் அங்கிருந்த பொருட்களை திருடிச்சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

துன்னாலை தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

வீட்டில் இருந்த கணவனும் மனைவியும் வெளியே சென்றிருந்த சமயத்தில் வயோதிப மூதாட்டி ஒருவர் வீட்டில் இருந்ததை சாதகமாக பயன்படுத்திய திருடர்கள் வீட்டினுள் நுழைந்து அங் 23

## கூட்டமைப்பில் தொடர்ந்து நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் உரிய நேரத்தில் பதில் தருவேன்
## முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தொடர்ந்து நீடிப்பதா? இல்லையா? என்பது குறித்து உரிய நேரத்தில் உரிய பதிலை கூறுவேன் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின் தேர்தலில் போட்டியிடுவேன் என்பது தேர்தலுக்கு மூன்று மாத காலத்திற்கு முன்பு 23

நடுவு நிலை தவறா நன்னெறி காத்தும் உங்கள் நாளிதழ்

# யாழ்.பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராக டக்ளஸ் தொடுத்த மானநஷ்ட வழக்கு

## 2 மில்லியன் ரூபாய் செலுத்த நீதிமன்றம் தீர்ப்பு

உண்மைக்கு புறம்பான செய்தியை வெளியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய மைக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் பத்திரிகை நிறுவனம் ஒன்று 2 மில்லியன் ரூபா இழப்பீட்டை அவருக்கு வழங்க வேண்டும் என யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 5 வருடங்களுக்கு முன்னர், பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் பேசாத ஒரு விடயத்தை பேசியதாகத் தெரிவித்து குறித்த பத்திரிகை செய்தி ஒன்றை பிரசுரித்திருந்தது.

குறித்த செய்தி உண்மைக்கு மாறானது எனவும் இச் செய்தி தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்து குறித்த பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராக கடந்த 2013ஆம் ஆண்டு மானநஷ்ட வழக்கு ஒன்றை பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.மாவட்ட நீதிமன்றில் 500 மில்லியன் ரூபாய் நஷ்டயீடு கோரி தாக்கல் செய்திருந்தார்.

யாழ்.மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் விளக்கம் நிறைவடைந்து மனுதாரரின் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

குறித்த தீர்ப்பில் குறித்த பத்திரிகை நிறுவனம் 2 மில்லியன் ரூபா பணத்தை வழக்காளிக்கு வழங்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (ம-9)


### பெண் உதவியாளர் தேவை

கரவெட்டியில் வசிக்கும் வயோதிப தாயொருவரை பராமரிக்க பெண் உதவியாளர் தேவை.

T.P:0771130600 (சு-2828)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி

**உயர்திரு.கலாநிதி S.அமிர்தலிங்கம்**

(இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் I) அவர்களைப்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




30.05.2018 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற அமெரிக்க சர்வதேச பல்கலைக்கழகங்களின் பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப் பட்டத்தைத் தனது 59வது அகவையில் பெற்ற எமது கல்லூரி பீடாதிபதி உயர்திரு. கலாநிதி S.அமிர்தலிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இப்பட்டம் தேசிய கல்வி ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம், வர்த்தக வாணிப அமைச்சர் கௌரவ ரிசாத்பதியுதீன் அவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.

கல்வி சாரா நலன்புரிச்சங்கம்
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி-கோப்பாய் (4297)


# செயற்கை மழைக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

வரட்சியான காலநிலை காணப்படும் பிரதேசங்களுக்கு மற்றும் மின்உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு செயற்கை மழையினை பெற்றுக்கொள்வதற்காக சீனாவுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைக்கு நேற்று அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

குறித்த அமைச்சரவை பத்திரம் அமைச்சர் தயா கமகேவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, சீனாவின் நெங்ஜிங் பல்கலைக் கழகம் மற்றும் முதன்மை கைத்தொழில் அமைச்சின் தலையீட்டில் இந்த வேலைத் திட்டம் செய்ற்படுத்தப்படவுள்ளது. (ம)


## மரண அறிவித்தல்



### திருமதி பொன்மணி சண்முகராசா (பொன்னக்கா)

*துர்க்காபுரம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்மணி சண்முகராசா (பொன்னக்கா) நேற்று (05.06.2018) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற கந்தர் அப்பாக்குட்டி-தையல்பிள்ளை தம்பதிகளின் இளைய புத்திரியும், கேணிக்கரை அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையா சண்முகராசா (G.P.O) இன் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லம்மா, ஆன்மீக அன்னை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் கனகம்மா அப்பாக்குட்டி (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உமாசுதன் (திருமகள் அழுத்தகம்), பாமதி (பொது முகாமையாளர் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்), ரேவதி (ஆசிரியர்-யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்), செந்தூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஞானேஸ்வரன், கணேசலக்சுமி (கணா-யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), சுகன்யா (பிரதேச செயலகம்-உடுவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் செல்வநாயகம், குணரத்தினம், காலஞ்சென்ற சிவபாலன், மகேந்திரபாலன், அருணகிரிநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிருந்தா (WSo2 யாழ்ப்பாணம்), கபிலன் (3ஆம் வருடம் கலைப்பீட மாணவன்-யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், உமையாள் (யா/இந்து மகளிர் கல்லூரி A/L2018), உமைபாரதி, உமைபைரவி (உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள்), சரண்யா (யா/வேம்படி மகளிர் கல்லூரி), சாயிராம் (யா/சைவ சன்மார்க்க வித்தியாலயம்-ஏழாலை) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் துர்க்காபுரம், மல்லாகத்தில் அமைந்துள்ள "தாமரை" இல்லத்தில் இன்று (06.06.2018) முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று ஈமக்கிரியைகள் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.*

**துர்க்காபுரம், மல்லாகம்** (4296) **குடும்பத்தினர்**



# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மண்ணில் 26 - 07 - 1944

விண்ணில் 07 - 05 - 2018



கடந்த 07.05.2018 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த

அமரர் **தியாகராசா பொன்னம்மா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 06.06.2018 புதன்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறவுள்ளது.

நாளை 07.06.2018 வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் கோவிற்கடவை அன்னதான மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**கோவிற்கடவை, துன்னாலை மேற்கு, கரவெட்டி.**

**குடும்பத்தினர்** (C-2827)

# நாடாளுமன்ற சுற்றுவட்டப்பாதைகள் ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றிவளைப்பு



(கொழும்பு)

இருவேறு தரப்பினரால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் காரணமாக நாடாளுமன்ற சுற்று வட்டப் பாதைகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

பிரதி சபாநாயகர் தெரிவு மற்றும் அர்ஜுன் அலோசியஸிடம் பணம் பெற்றவர்கள் போன்ற முக்கிய விவாதங்களுக்காக நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை ஒரு மணியளவில் கூடியது.

இந்நிலையில், நாடாளுமன்ற வீதிகளை இடைமறித்து ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதால் நாடாளுமன்ற சுற்றுவட்ட பாதைகளில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்ற சுற்று வட்டத்தை அண்மித்த வீதிகளில் அமர்ந்தவாறு ஈ.டி.ஐ. வைப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதே வேளை, நீர் விநியோக பணியாளர்கள் பத்தரமுல்லை- பெலவத்தை பகுதியூடான நாடாளுமன்ற வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஊதிய அதிகரிப்பை பெற்றுத்தருமாறு கோரி நாடளாவிய ரீதியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த நீர் விநியோக சபை பணியாளர்கள் நேற்று தலைநகரில் நாடாளுமன்றத்தை அண்மித்த பகுதியில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

# இரு உயரதிகாரிகளின் விளக்கமறியல் நீடிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி மற்றும் அரச மரக்கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் ஆகியோருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி பேராசிரியர் ஐ.கே மஹாநாம மற்றும் அரச மரக்கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவர் பீ.திஸாநாயக்க ஆகியோரை நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே அவர்களை ஜூன் மாதம் 19 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

## பதவி விலகினார் திலங்க



(கொழும்பு)

பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து திலங்க சுமதிபால பதவி விலகியுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

திலங்க சுமதிபால அரசாங்கத்தில் இருந்து விலகியதையடுத்து அவர் பிரதி சபாநாயகர் பதவியிலிருந்தும் உத்தியோகபூர்வமாக விலகியுள்ளதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். (இ-7)

## வெலிக்கடை சம்பவம் கைதான இருவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இருவரையும் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறைச்சாலை ஆணையாளர் எமில்ரஞ்சன் லாமஹேவா மற்றும் பொலிஸ் பரிசோதகர்ரங்கஜீவ ஆகியோரை நேற்று கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

2012 ஆம்'ஆண்டு நவம்பர் மாதம் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 27 கைதிகள் கொல்லப்பட்ட வழக்கில் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நாகர்கோவிலில் கடலட்டை பிடித்த கற்பிட்டியைச் சேர்ந்த மூவர் கைது

(கரணவாய்)

கடலட்டை பிடிப்பதற்கான விதிகளை மீறி நாகர்கோவில் கடற்பரப்பில் கடலட்டை பிடித்த மூவரை தாம் கைது செய்துள்ளதாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர் வடபகுதி கடற்பரப்பில் ரோந்து சென்று கொண்டிருந்த போது நேற்று அதிகாலை ஒளிபாச்சி கடலட்டை பிடிக்கும் படகு ஒன்றினை அவதானித்தனர்.

இதையடுத்து அப் படகினை கைப்பற்றிய கடற்படையினர் அதிலிருந்த கற்பிட்டி பகுதியினைச் சேர்ந்த மூவரை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 112 கடலட்டைகள், இரண்டு சங்கு என்பன மீட்கப்பட்டதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர். (இ-60)

## தொலைக்காட்சிக்கு கேபிள் இணைப்பு வழங்குநர் கைது

(கரணவாய்)

கரணவாய் பகுதியில் தொலைக்காட்சிக்கு கேபிள் இணைப்பு வழங்கிவந்த நபரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த மாதம் கரணவாய் நாவலர் மடத்தடி பகுதியில் தொலைக்காட்சிக்கு கேபிள் இணைப்பு வழங்குநர் பொறுப்பற்ற விதத்தில் வேலி ஒன்றிற்குள் சுற்றி வைத்திருந்த தொலைக்காட்சி இணைப்பு வயரில் பாய்ந்த மின்சாரம் காரணமாக குழை வெட்டச் சென்ற ஜெகநாதன் என்பவர் மின்சாரத் தாக்கத்திற்கு உள்ளானார்.

அவரை காப்பாற்றச் சென்ற மகனும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

தொலைக்காட்சிக்கு கேபிள் இணைப்பு வழங்குநரின் பொறுப்பற்ற செயலால் இச் சம்பவம் இடம்பெற்றது எனவும் வடமராட்சி பகுதியில் ஏற்கனவே இரண்டு சம்பவம் நடைபெற்றதில் இருவர் உயிரிழந்தனர் எனவும் பொது மக்களால் குற்றம் சாட்டப்பட்டு வந்தது.

இந்நிலையில் அப் பகுதிக்கு கேபிள் இணைப்பினை வழங்கிய நபரை நெல்லியடி பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை. கைது செய்தனர். (இ-60)

## இராணுவ அதிகாரிக்கு சொகுசு வீடு இராணுவச் சிப்பாய்கள் 12பேர் கைது

(கொழும்பு)

வட்டுவ பிரதேசத்தில் இராணுவ உயர் அதிகாரியொருவருக்கு சொகுசு வீடொன்றை நிர்மாணிக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த 12 இராணுவச் சிப்பாய்கள், இலஞ்ச- ஊழல் ஆணைக் குழுவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்திலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றிருந்த இராணுவ உயர் அதிகாரியொருவரே, இராணுவ செயற்றிட்டமென தெரிவித்து குறித்த சொகுசு வீட்டினை நிர்மாணிக்க இராணுவச் சிப்பாய்கள் பயன்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலஞ்ச- ஊழல் ஆணைக் குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இராணுவச் சிப்பாய்கள் காலை 8 மணியிலிருந்து இரவு 10 மணிவரையில் குறித்த சொகுசு வீட்டு நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## நான் எந்தச்சந்தர்ப்பத்திலும் அரசியலுக்காக எவரிடமும் பணம் வாங்கியது இல்லை

### அமைச்சர் கபீர் ஹாசிம்



(கொழும்பு)

தேவை ஏற்படின் என்னால் அர்ஜுன் அலோசியஸின் நிறுவனத்திற்கு பணம் வழங்க முடியும் என அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

தான் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியலுக்காக எவரிடமும் பணம் வாங்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்திடம் இருந்து பணம் வாங்கியதாக தற்போது தெரிவிக்கப்படுகின்ற குற்றச்சாட்டு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்திடம் இருந்து பணம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான விபரங்களை சபாநாயகர் வெளிப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பிலுள்ள எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து பணம் பெறவில்லை என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார். (இ-7)

# இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு இலங்கை செயற்படமுடியாது

## இராஜாங்க அமைச்சர் இராதா.சுட்டிக்காட்டு




(கொழும்பு)

இந்தியாவை புறந்தள்ளிவிட்டு இலங்கை எந்தவொரு செயலையும் செய்யமுடியாதென்றும், இந்தியாவும் அவ்வாறு செயற்பட முடியாதென்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கை மற்றும் இந்திய அரசுகளின் உதவிகளை பெற்று மலையக சமூகத்தை முன்னேற்ற வேண்டுமென அவர் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் 14000 வீட்டுத் திட்டத்தில் 250 வீடுகளை தலவாக்கலை மடக்கும்புரை மேல் பிரிவு தோட்டத்தில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு, ஒரு சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமானால் இருப்பிடம், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய நான்கு விடயங்களும் சரியாக அமைய வேண்டும்.

அந்தவகையில், இந்திய அரசாங்கத்தின் வீட்டுத்திட்டம் மலையக மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதெனவும் இலங்கை மற்றும் இந்திய அரசுகளுக்கிடையில் உள்ள நல்லுறவு காரணமாகவே பாரதப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு இந்திய வீட்டுத் திட்டத்தை கையளித்தார் என்றும், இரு நாடுகளின் உறவுகள் அவ்வாறே நீடிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிணைமுறி மோசடி அறிக்கையின் இதுவரையில் வெளியிடப்படாத முக்கிய பாகங்கள் சபாநாயகரிடம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் இதுவரையில் வெளியிடப்படாத பாகங்கள், சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலக அதிகாரிகளால், நாடாளுமன்றத்தில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை குறித்த அறிக்கை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக, சபாநாயகர் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

பிணைமுறி மோசடி குறித்த விசாரணை அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி வெளியிட்டிருந்த போதிலும், குறிப்பிடத்தக்க பகுதி மாத்திரம் வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.


பிணைமுறி மோசடி குறித்து விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் சீ350 முதல் சீ360 வரையான பகுதிகளே இவ்வாறு நாடாளுமன்ற சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து பணம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட வேண்டும் என்று எழுந்துள்ள சர்ச்சையை அடுத்து இந்த அறிக்கை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரெஞ்ச் ஓபன் டெனிஸ்

# ஜோகோவிச் அதிர்ச்சி தோல்வி





பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் காலிறுதியில் செர்பியாவின் ஜோகோவிச் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று நடந்த காலிறுதிப் போட்டியில் ஜோகோவிச், இத்தாலியின் செச்சினாட்டோவை சந்தித்தார். முதலிரண்டு செட்டை ஜோகோவிச் 3-6, 6-7 என பறிகொடுத்தார். பின் சுதாகரித்த இவர் அடுத்த செட்டை 6-1 என வென்று பதிலடி கொடுத்தார். நான்காவது செட்டில் முன்னணியில் இருந்த ஜோகோவிச் தடுமாற, 'டை-பிரேக்கருக்கு' சென்றது. 22 நிமிடம் நீடித்த இதில் 7-6 என செச்சினாட்டோ போராடி வென்றார். முடிவில் ஜோகோவிச் 3-6, 6-7, 6-1, 6-7 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார்.

### தியம் அசத்தல்

மற்றொரு காலிறுதியில் 'நம்பர்-3' வீரரான ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஜிவரெவ், தரவரிசையில் 8ஆவது இடத்திலுள்ள ஆஸ்திரியாவின் டொமினிக் தியம் மோதினர்.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தியம் முதல் செட்டை 6-4 என கைப்பற்றி னார். இரண்டாவது செட்டின் போது, ஜிவரெவ் தொடை பின்பகுதி காயத்தால் அவதிப்பட்டார். இதை பயன்படுத்திக் கொண்ட தியம் இந்த செட்டையும் 6-2 என வசப்படுத்தினார். காயம் காரணமாக மூன்றாவது செட்டில் ஜிவ ரெவ் எவ்வித எதிர்ப்பும் இன்றி சரண் அடைய, தியம் 6-1 என வென்றார். ஒரு மணி நேரம் 50 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில் தியம் 6-4, 6-2, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதன்மூலம், தொடர் ந்து மூன்றாவது முறையாக இத்தொடரின் அரையிறுதிக்குள் நுழைந்தார்.

### மடிசன் வெற்றி

பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் 'நம்பர்-13' வீராங்கனையான அமெரிக்காவின் மடிசன் கீஸ், கஜகஸ்தானின் யூலியா புடின்ட்செவாவை (98வது இடம்) எதிர்கொண்டார். தரவரிசையில் பின்தங்கி இருந்தாலும் புடின்ட்செவா கடும் நெருக்கடி கொடுத்தார்.

முதல் செட்டில் இருவரும் மாறி மாறி புள்ளியை கைப்பற்ற 'ரை- பிரேக்கருக்கு' சென்றது. இதில் போராடிய மடிசன் 7-6 என கைப்பற்றினார். அடுத்த செட்டில் சுதாகரித்த இவர் 6-4 என வென்றார். ஒரு மணி நேரம் 24 நிமிடம் நீடித்த போட்டியின் முடிவில், மடிசன் கீஸ் 7-6, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதன் மூலம், இத்தொடரில் முதல் முறையாக அரையிறுதிக்கு முன்னேறினார்.

### செரினா சந்தேகம்

அமெரிக்காவின் செரினா, பிரெஞ்ச் ஓபன் 4ம் சுற்றில் ரஷ்யாவின் ஷரபோவாவை எதிர்கொள்ள இருந்தார். ஆனால், வலது தோள் பகுதியில் ஏற்பட்ட தசைபிடிப்பு காரணமாக போட்டியிலிருந்து விலகினார். இதற்கிடையே, விம்பிள்டன் (ஜூலை 2-15, லண்டன்) தொடரிலும் இவர் பங்கேற்பது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து அவர கூறுகையில், ''காயததிற்காக எம்.ஆர்ஐ. ஸ்கான் எடுக்க உள்ளேன். இதில கிடைக்கும் முடிவை பொறுத்துதான்,முடிவு செய்ய முடியும், என்றார்.

## 'ஃபிபா' கால்பந்து கவுண்ட்டவுண் 08

# சாதித்த சிவப்பு ரோஜாக்கள்



பத்தொன்பதாவது உலகக் கிண்ண தொடர் தென்னாபிரிககாவில், 2010ல்நடைபெற்றது.

இதில் பங்கேற்ற 32 அணிகள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, 'ரவுண்ட்-ரொபின்' முறையில் போட்டிகள் நடந்தன.

'நடப்பு சம்பியன்' அந்தஸ்துடன் களமிறங்கிய இத்தாலி, பிரான்ஸ், தென்னாபிரிக்க அணிகள் முதல் சுற்றோடு வெளியேறின. நெதர்லாந்துக்கு எதிரான காலிறுதியில் தோற்ற பிரேசிலும் ஏமாற்றம் அளித்தது.

### மறக்க முடியாத மண்டேலா

பரபரப்பான அரையிறுதியில் ஸ்பெயின் அணி, ஜேர்மனியை வீழ்த்தி, முதன் முறையாக இறுதிக்கு முன்னேறியது. மற்றொரு அரையிறுதியில் நெதர்லாந்து, உருகுவேயை வென்றது.

ஜொகனஸ்பேர்க் மைதானத்தில், இறுதிப் போட்டி நடைபெறுவதற்கு முன் நடந்த நிறைவு விழாவில் பங்கேற்ற மறைந்த முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, 'வீல் சேரில்' வலம் வந்து ரசிகர்களை உற்சாகப் படுத்திய காட்சி மறக்க முடியாததாக அமைந்தது.

### நாயகன் இனியஸ்டா

இறுதியில் ஸ்பெயின், நெதர்லாந்து அணிகள் மோதின. நிர்ணயிக்கப்பட்ட ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

பின் கூடுதல் நேரத்தின் 116ஆவது நிமிடத்தில் இனியஸ்டா ஒரு கோல் அடிக்க, ஸ்பெயின் அணி 1-0 என வென்று, முதன்முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.


இத்தொடரில் அதிக கோல் அடித்தவருக்கான 'தங்கக்காலணி' விருதை ஜேர்மனி அணியின் தோமஸ முல்லர் (5 கோல்) வென்றார்.

### ஃபிரி கிக்

இத்தொடரில் சம்பியனான ஸ்பெயின் அணி மொத்தம் 8 கோல்கள்தான் அடித்தது. இதன்மூலம் குறைந்த கோல்கள் அடித்து உலகக் கிண்ணத்தை வென்ற அணிகள் வரிசையில் பிரேசில் (1994), இங்கிலாந்து (1966), இத்தாலி (1938) அணிகளை முந்தி முதலிடம் பிடித்தது. இந்த மூன்று அணிகளும் தலா 11 கோல்கள் அடித்து உலக கிண்ணத்தை கைப்பற்றின.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கல்விமாணி (B.Ed) பட்டம் பெற்ற ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்.



திரு இ.சபேசன்



திருமதி சி.கலாராணி



திருமதி அ.சிவகௌரி



திருமதி கி.பானுஷா

(4402)

முல்லை மண்ணின் முத்துக்களே!
எங்கள் கல்விச்சாலையின் சொத்துக்களே!
கல்விமாமணிகளாய் தரமுயர்ந்தீர்!
எங்கள் கல்வியுலகினில் பெருமை பெற்றீர்!
இன்னும் பல பட்டங்கள் கல்வித்துறையில் பெற்றிடுவீர்!
சென்ற இடமெல்லாம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

Congratulations

ஆசிரியர் நலன்புரி கழகம்
மு/வற்றாப்பளை மகாவித்தியாலயம்


## ஒரு கோல் 10 ஆயிரம் சாப்பாடு

# திட்டம் இரத்து




மெஸ்சி, நெய்மர் அடிக்கும் ஒவ்வொரு கோலுக்கும் சிறுவர்களுக்கு தரப்பட இருந்த உணவு தரும் திட்டம் ரத்து செய்யப்பட்டது.

அமெரிக்காவை சேர்ந்தது மாஸ்டர் கார்ட் நிறுவனம். வரும் உலக கிண்ண தொடர் முதல் 2020 வரை நடக்கும் சர்வதேச கால் பந்து தொடர்களில்; ஆர்ஜென்ரீனாவின் மெஸ்சி, பிரேசிலின் நெய்மர் அடிக்கும் ஒவ்வொரு சர் வதேச கோலு க்கும் தலா 10 ஆயிரம் பள்ளிச் சிறுவர்கள் உணவுக்கு தேவை யான நிதி யை தருவதாக அறிவித்தது.

இலத்தின் அமெரிக்கா மற்றும் கரீபிய மண்ணில் இருக்கும் குழந்தைகள் பயன் பெற இருந்தனர்.

இந்நிலையில் இப்படிப்பட்ட செயல்பட்டால் போட்டியில் வீரர்கள் திறமை வெளிப்படுத்துவதில் பாதிப்பு ஏற்படும் என எதிர்ப்பு கிளம்பியது. இதனையடுத்து உணவு திட்டத்தை ரத்து செய்வதாக மாஸ்டர்கார்ட் அறி வித்துள்ளது.

அந்நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், 'உணவு வழங்கும் திட்டத்தின் காரணமாக வீரர்கள் அல்லது ரசிகர்கள் கவனத்தை சிதறடிக்க விரும்பவில்லை. தவிர குறிப்பிட்ட இரண்டு வீரர்களின் மீது மட்டும் சுமையை அதிகரிக்க எண்ணவில்லை," என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பிலிருந்து வந்த குழுவால்
# வயர்கள் அப்புறப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் இலங்கை மின்சார சபையின் கம்பங்கள் ஊடாக தொலைக்காட்சிக்கு கேபிள் இணைப்பு வழங்கப்பட்ட வயர்கள் அப்புறப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கணவாய் பகுதியில் தொலைக்காட்சிக்கு இணைப்பு வழங்கப்பட்ட வயரில் பாய்ந்த மின்சாரம் காரணமாக தந்தையும் மகனும் மரணமடைந்த நிலையிலும், சட்டவிரோதமான முறையில் வழங்கப்பட்ட இணைப்பினை துண்டிக்குமாறு யாழ்ப்பாண நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையிலும் கொழும்பில் இருந்து வருகை தந்த விசேட குழு ஒன்று இலங்கை மின்சார சபையின் கம்பங்கள் ஊடாக தொலைக்காட்சிக்கு இணைப்பு வழங்கப்பட்ட வயர்களை அகற்றும் நடவடிக்கையை நேற்று செவ்வாய்க்கிழமை காலை வல்லைப் பகுதியில் இருந்து ஆரம்பித்துள்ளது. (இ-60)

## அலோசியஸிடம் பணம் பெற்றதாக
# இணையத்தில் உலாவரும் 118 பேரின் பெயர்ப்பட்டியல்

(கொழும்பு)

அர்ஜுன் அலோசியஸின் பேர்பெச்சுவல் நிறுவனத்திடமிருந்து பணம் பெற்றவர்கள் எனக் கூறப்படும் 118பேரின் பெயர்பட்டியலொன்று இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெலஉறுமய கட்சியின் தேசிய அமைப்பாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான நிசாந்த வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

தன்னுடைய பெயரையும் உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ள இப் பெயர்ப் பட்டியல் போலியானது எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இது குறித்து உரிய விசாரணைகளை முன்னெடுக்கவும் வலியுறுத்தியுள்ளார்.

அர்ஜுன் அலோசியஸின் பேர்பெச்சுவல் நிறுவனத்திடமிருந்து பணம் பெற்றுள்ளவர்களின் பெயர்களை வெளியிடுமாறு கபே மற்றும் மனித உரிமை ஆராய்ச்சி மையத்தின் நிறைவேற்று இயக்குநர் கீர்த்தி தென்னக்கோன் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில் இப் பெயர்ப் பட்டியல் இணையத்தில் உலா வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில்
1942 - 09 - 28

விண்ணில்
2018 - 05 - 10

அமரர்.
## கந்தையா கணேஷ்
(ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் - மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம்)

கடந்த 10.05.2018 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர்.கந்தையா கணேஷ் அவர்களின் பிரிவினால் நாம் துயருற்றிருந்த வேளையில் பல்வேறு வகைகளிலும் எம்முடன் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டு பல வழிகளிலும் எமக்கு உதவி நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரது 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 07.06.2018 வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் 08.06.2018 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரண நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

"கௌரி சங்கர்பதி"
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(4298)

தகவல்:
குடும்பத்தினர்.

# சட்டம் பற்றிய அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் மல்லாகம் பிராந்திய நிலையத்தினால் தேசிய சட்டவாரத்தை முன்னிட்டு சட்டம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த 25ஆம் திகதி யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இடம்பெற்றது. இச் செயலமர்வில் க.பொ.த. உயர்தர மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட 100 பேர்கலந்து பயன்பெற்றனர்.

இச் செயலமர்விற்கு மல்லாகம் பிராந்திய நிலையத்தின் சட்ட உத்தியோகத்தரான ஸ்ரீசண்முகான் கோகுலன் அலுவலக ஊழியர்களுடன் முல்லைத்தீவு சட்ட உதவி ஆணைக்குழுவின் முன்னை நாள் சட்ட உத்தியோகத்தர் நிர்க்குணானந்தன் நிர்த்தனரூபன் மற்றும் சட்டத்தரணிகள் திருமதி. சாருஜா மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# பூனையின் பாசம்



(கொழும்பு)

இலங்கையில் பாசமாக வளர்த்த பூனை ஒன்றின் செயற்பாடு குறித்து சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்பட்டு வருகின்றன.

தனது எஜமானியின் மரணத்தை தாங்கிக் கொள்ள முடியாத பூனை, உடலத்தின் கால்கள் மீது படுத்திருந்த நெகிழ்ச்சியான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

களனி பியகம பகுதியிலுள்ள வீடொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறிவதனா என்ற பெண் பெருமளவு பூனைகளை வளர்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். அவருடன் மிகவும் நெருக்கமான பூனையொன்று இந்த துயரை தாங்கிக் கொள்ள முடியாமல் அவரின் உடலுக்கு அருகில் படுத்திருந்துள்ளது.

இது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், வழிபாட்டால் மகத்துவம் கான வேண்டிய நாள்.

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன நன்மையுண்டு.

**இடபம்:** புதிய முயற்சிகள் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பொல்லாதர்கள் உங்களை விட்டு விலகுவர், திய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்கள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராக வழிவகை செய்வீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | சூரி | சுக், புத |
| சந் | இராசி பலன்<br>கிரகநிலை | | ராகு |
| கேது, செவ் | சந்திராஷ்டமம்<br>ஆயிலியம், மகம் | | |
| சனி | | குரு | |

06.06.2018

வைகாசி 23, புதன்கிழமை

சப்தமி முற்பகல் 8.01 மணிவரை

அட்டமி முற்பகல் 8.02 தொடக்கம்

சதயம் பிற்பகல் 5.21 மணிவரை

சுபநேரம் 4.22-5.52 மணிவரை

இராகுகாலம் 11.52-1.22 மணிவரை

வளவன்

**கடகம்:** குடும்பத்தினரிடையே சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி விலகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**சிம்மம்:** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலை உயரும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும், எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும்.

**துலாம்:** பிள்ளைகளின் கல்வி நலல் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டால் சிறப்படைய வேண்டிய நாள்.


**கன்னி:** கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சயனைட் அருந்தி உயிரை மாய்த்துக் கொண்ட முதல் போராளியான பொன்னுத்துரை சிவகுமாரனின் 44ஆவது நினைவு தினம் நேற்று அவரது சொந்த இடமான உரும்பிராயில் இடம்பெற்றது. கோப்பாயில் வங்கி ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி தமிழீழ போராட்டத்திற்கு நிதி சேகரிப்பதற்கான போராட்டத்திற்கு தலைமையேற்ற சிவகுமாரனை கோப்பாயில் பொலிஸார் சுற்றிவளைத்த போது பொலிஸாரிடம் அகப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக சயனைட் அருந்தி உயிரிழந்தார். ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் சயனைட் அருந்தி தன்னுயிரை மாய்த்தவர் இவரே. இந்த மாவீரனின் நினைவஞ்சலி நிகழ்வில் மாகாண, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:- உ.சாளின்)

# வீட்டுக்கொரு மரம் நாட்டுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்

## சர்வதேச சூழல் தினத்தை முன்னிட்டு வடமாகாண முதலமைச்சர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

மனித குலத்திற்கு ஏற்படக்கூடிய பாரிய தீங்குகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும் என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சூழலை பாதுகாக்கக் கூடிய மரங்களை நாட்டுவது எமது கடமை என்பதால் வீட்டுக்கொரு மரம் நாட்டுவதற்கும் அனைவரும் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச சூழல் தினத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபை, வடமாகாண விவசாய அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் யாழ்.பிரதேச செயலகம் ஆகியன ஒன்றிணைந்து முன்னெடுக்கும் மரம் நடுகை விழா ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் ஐந்தாம் திகதி உலக சுற்றாடல் தினமாக கொண்டாடப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்துள்ளது. ஆகவே சுற்றுச் சூழலைச் சீராக்கவும் சூழலைப் பேணுவதில் விழிப்புணர்வை ஏற்படுத்தவுமே சுற்றாடல் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப, கைத்தொழிற்றுறை வளர்ச்சியின் காரணமாக சூழல் மிகமோசமாக மாசடைந்து வருகின்றது. அளவுக்கதிகமான பொலித்தீன் பாவனை சூழலை மிகமோசமாகப் பாதிப்படையச் செய்துள்ளது. கடல் வாழ் உயிரினங்களுக்கும் நீர்நிலைகளில் வாழும் உயிரினங்களுக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

மனிதன் இயற்கையை அழித்து வாழ முற்பட்டதால் சூழலில் பாரிய மாற்றங்களும் தீங்கான விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு மனித குலத்திற்கு ஏற்படக்கூடிய பாரிய தீங்குகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

கடந்த வருடங்களில் வடமாகாணசபையினால் முன்னெடுக்கப்பட்ட மரம் நடுகை நிகழ்வுகளுக்கு ஒப்பாக இந்த வருடம் ஆளுநர் மற்றும் நகர பிதா ஆகியோரால் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் மரக்கன்றுகளை நாட்டுகின்ற நல்ல நிகழ்வுகள் இடம் பெற இருக்கின்றன.

இவ்வாறு வருடா வருடம் நாட்டப்படுகின்ற மரக் கன்றுகள் அதே நிலையங்களில் திரும்பவும் நாட்டப்பட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தக் கூடாது.

ஆகவே மரம் நாட்டுகை விழாவின் பின்னரும் நாட்டப்பட்ட மரங்கள் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

பொலித்தீன் போன்ற பொருட்களால் கடற்கரையோரங்கள் மிகக்கூடுதலான அளவில் மாசடைகின்றன. இவற்றை மாசடையச் செய்யக் கூடிய நிறுவனங்கள் அல்லது தனி நபர்களின் விற்பனை ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் கழிவுகள் முறையாக அகற்றப்படுகின்றனவா என்பதை மாநகர சபை கண்காணித்தல் வேண்டும். புதிதாக முளைத்துள்ள மாபெரும் நட்சத்திர ஹோட்டல்களும் அவற்றிற்குச் சமமான விடுதிகளும் தமது கழிவுகளை எவ்வாறு அகற்றுகின்றார்கள் என்பது தொடர்பில் கண்காணிப்புக்கள் அவசியமானவை.

அபிவிருத்தி அபிவிருத்தி என்று கூறி அமைக்கப்படும் கட்டடங்களும், ஆலைகளும் எவ்வகையான சூழல் மாசடைவுகளை ஏற்படுத்துவன என்று யோசிக்காமலே நாம் பேராசையால் உந்தப்பட்டு நடவடிக்கைகளில் இறங்குகின்றோம். பேராசை பெருநாசம் என்பதை மறவாதிருப்போமாக.

முன்னைய காலத்தில் சூழலை மனிதன் நேசித்து வாழ்ந்ததால் அல்லது மதித்து வாழ்ந்ததால் சூழலும் மனிதனுக்கு ஏற்றம் மிகுந்த வாழ்வை வழங்கியது. இன்று விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. மனிதன் செவ்வாயில் காலடி வைக்க எத்தனித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இயற்கையின் அழிவைத் தடுப்பதற்கு போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரியது.

சுற்றாடலும் சூழலும் எமக்கு இசைவாக அமையக்கூடிய வகையில் நாம் சூழலை மாற்றி அதனை நேசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

எமது அளவுக்கு மிஞ்சிய தான கிருமிநாசினிப் பாவனை, இரசாயனக்கலவைப் பாவனை ஆகியன எமக்கு உதவக் கூடிய சிறு சிறு பறவை இனங்களையும் பூச்சி, புழுக்கள் இனங்களையும் முற்றாக இல்லாது ஒழித்துவிட்டன. அதேபோன்று கையடக்கத் தொலைபேசிகளில் குறுக்கும் நெடுக்குமாக செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கின்ற நுண் அலை வரிசைகள் சிட்டுக் குருவி போன்ற சிறிய சிறிய பறவை இனங்களை இல்லாது ஒழித்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

எனவே எமது சிறு சிறு சந்தோசங்களுக்காக பயன்படுத்துகின்ற இலத்திரனியல் சாதனங்கள் சூழலில் எவ்வளவு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் இன்று பழைமையான வாழ்க்கை முறைக்கு திரும்ப வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றோம் என்றால் அது மிகையாகாது.

ஆகவே சூழலை பாதுகாக்கக் கூடிய மரங்களை நாட்டுகின்ற கடமைகளை யாவது நாம் விரைந்து செயற்படுத்த வேண்டும். வீட்டுக்கொரு மரம் நாட்டுவதற்கும் அனைவரும் முன்வர வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கல்






(யாழ்ப்பாணம்)

உலக சூழல் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான கருத்தரங்கு நேற்று முன் தினம் 4 ஆம் திகதி செங்குந்தா இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது.

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெய்வேந்திரன் கிரிதரனின் ஏற்பாட்டில் உதயம் கலாசார சங்கம் (கனடா) அனுசரணையுடன் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் பாடசாலை அதிபர் இ.பாலச்சந்திரன் மற்றும் வளவாளர்களாக எஸ்.கஜபதி, விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்கியல் ட.கேதீஸ்வரன், கனடா உதயத்தின் யாழ். கிளைப் பொறுப்பாளர் ரி.நிசங்கன், பிரதேச சபை உறுப்பினர் தெ.கிரிதரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர்.

இதேவேளை அனைத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்தரும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (இ-9)

## விமர்சன நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

சி.கா.செந்திவேல் எழுதிய வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலைய பொது நோக்கு மண்டபத்தில் மூத்த எழுத்தாளர் சாகித்யரத்னா தெணியான் தலைமையில் இடம் பெறும். இந்நிகழ்வில் அறிமுக உரையினை ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.அநாதரட்சகன் நிகழ்த்த மதிப்பீட்டுரையினை ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் வழங்குவார். கருத்துரைகளை ஆசிரியர் சமூக செயற்பாட்டாளர் அருளானந்தம் தர்சன், ஆசிரியர் சமூகச் செயற்பாட்டாளர் சூடாமணி தர்சன் ஆகியோர் வழங்குவர். (இ-60)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு "யாழ்.நகரை பசுமை ஆக்குவோம்" எனும் தொனிப்பொருளிலான வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்.பண்ணை சுற்றுவட்ட பகுதியில் இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்கள் யாழ்.பண்ணை சுற்றுவட்டாரத்தில் மரங்களை நாட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

வடமாகாணசபை, யாழ். மாநகரசபை, வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள், வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கே.சர்வேஸ்வரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆர்னோல்ட், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள், வடக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார், இராணுவத்தினர், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- பொ.சோபிகா)



## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

### இறைச்சிக்கடைகளுக்கான 14.06.2018-31.12.2018 வரையுள்ள காலப்பகுதிக்கான பகிரங்க ஏலக் கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தை இறைச்சிக்கடைகளினை 14/06/2018-31/12/2018 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலம் 13/06/2018 காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை 06/06/2018 தொடக்கம் 13/06/2018 முற்பகல் 10.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

| தொ.இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த ஏலத் தொகை(வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | உடுப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 279030.00 | 100.00 |
| 02 | உடுப்பிட்டி கோழியிறைச்சிக்கடை | 500.00 | 137630.00 | 100.00 |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணத்தினை 2018/06/13ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திரக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப் பணம், VAT,NBT ஆகியவற்றைச் செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

(சி-2825)

க.த.அங்கரன்,
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

## வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் ஐவர் ஆதார வைத்தியசாலையில் அனுமதி

(வாழைச்சேனை)

வாழைச்சேனை - தபால திபர் வீதியில் இயங்கிவரும் அல் ஹிக்மா இஸ்லாமிய நிலையத்தில் நேற்று முன் தினம் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது சில குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் ஐவர் பாதிக்கப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் 2011 ஆம் ஆண்டு தற்காலிக இடத்தில் இயங்கி வந்த இவ் இஸ்லாமிய நிலையம் ஒருவருட காலமாக நிரந்தரமான இடத்தில் இயங்கி வருகின்றது.


அங்கு சிறுவர்களுக்கான குர்ஆன் மத்ரசா, ஆண்கள், பெண்களுக்கான மார்க்க சொற்பொழிவுகள் மற்றும் ஐந்து வேளை தொழுகைகள் போன்றன அப்பிரதேச மக்களின் ஒத்துழைப்புக்களோடு மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்று வந்தன.

இதனை குழப்ப வேண்டும் என்று, குறித்த இஸ்லாமிய நிலையத்தை மூடுமாறும் அதில் எவ்விதமான வணக்க வழிபாடுகளிலும் ஈடுபட வேண்டாம் என்றும் அச்சுறுதல் விடுக்கப்பட்டதையடுத்து குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (இ-7)


நிர்வாக உத்தியோகத்தர்
திரு.ஆறுமுகம் சத்தியமூர்த்தி அவர்களுக்கு
எமது மனமார்ந்த நன்றியும் பாராட்டுதலும்
Congratulations
கடவுளுடைய ஆசியுடன் இனிதே வாழி!

இரவு-பகல் பாராது சேவை செய்து
எமையெல்லாம் பதவியிலே உயர்த்தி வைத்தீர்
அரசபணி யாதென கேட்போர் முன்னே
அட்சரமும் பிசகாது தகைமை சொன்னீர்
அரசமதி உரைகள் நிதிமுறைமை தம்மை
அலுவலக நடைமுறை நிர்வாகம் என்ன
பரவசமாய் அத்தனையும் புகுத்தி எம்மை
பக்குவம் சேர் அலுவலராய் மாற்றி வென்றீர்

உடல் வருத்தம் பாராது உழைப்பு ஒன்றே
உயர்வென்று எம்மவர்க்கு கற்றுத் தந்தீர்
திடத்துடனே ஆற்றிடு நல்சேவை தானே
தேவனுக்குப் புரிந்திடும் பூசை என்றீர்
உடனிருந்து உணர்ச்சியை அள்ளி ஊட்டி
உயர்த்திய நீர் எம்மவர்க்கு ஏணி அன்றோ
கடமையுடன் கற்பித்தல் பணியும் செய்தே
கடவுளுடைய ஆசியுடன் இனிதே வாழி!



லயான்
கே.என்.சுபாதர்சன்
அரச பொது
முகாமைத்துவ
உதவியாளர்.

(4289)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1ஆம் பாதம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/8620 | பிறப்பு: 1989 கிறிஸ்தவம் RC<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc MBA IT பொறியியலாளர்<br>தொ.இ: G/8644 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4 ஆம் பாதம்<br>கி.பா: 33 செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc Dip.in HRM அரசதொழில்<br>தொ.இ: B/8621 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2ஆம் பாதம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA BTHC அரச தொழில்<br>தொ.இ: G/8649 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2 ஆம் பாதம்<br>கி.பா: 49 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:டிப்ளோமா சுவிஸ்PR<br>தொ.இ: B/8623 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4ஆம் பாதம்<br>கி.பா: 39 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: NDAHNDIT படிக்கிறார்<br>தொ.இ: G/8653 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3ஆம் பாதம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/8624 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 2 ஆம் பாதம்<br>கி.பா: 21 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: CIMA HNDA வங்கி ஊழியர்<br>தொ.இ: G/8659 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ‘பிளாஸ்ரிக்கினால் மாசுபடுதலை இல்லாதொழிப்போம்’ வவுனியாவில் உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிப்பு




(குருமன்காடு)

வவுனியா மாவட்ட செயலகம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்குழு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த ‘உலக சுற்றாடல் தினம்” நேற்று மாவட்ட அரசாங்க அதிபரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமைந்துள்ள வளாகத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப்பணிப்பாளர் எஸ். சூரியகுமார் தலைமையில் இடம்பெற்றது.

“பிளாஸ்ரிக்கினால் மாசுபடுதலை இல்லாது ஒழிப்போம்” எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக வவுனியா மாணவர்கள் பிளாஸ்ரிக் குறித்த விழிப் புணர்வுக் கருத்துரைகளை வழங்கியிருந்தார்கள். இவ் வருடம் நாட்டில் உலக சுற்றாடல் தினம் “பிளாஸ்ரிக்கினால் மாசுபடுதலை இல்லாது ஒழிப்போம்” எனும் தொனிப் பொருளில் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் விதான பத்திரன, மேலதிக அரசாங்க அதிபர் த.திரேஸ் குமார், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, செட்டிகுளம் பிரதேச செயலாளர் எஸ்.சிவகரன், மாவட்ட திட்டப்பணிப்பாளர், மாவட்ட கணக்காய்வாளர், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், வவுனியா வளாக பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவர்கள், மாணவிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



நிகழ்வின் இறுதியில் அரசாங்க அதிபர் வாசஸ்தலத்தின் வளாகத்தில் அதிதிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரினால் மரக்கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டன.(2-250)

# கடத்தப்பட்ட முதிரை மரக்குற்றிகள் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு



(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் கடத்தப்பட்ட பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை ஓமந்தைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த முதிரை மரக் குற்றிகள் ஓமந்தை, நொச்சிமோட்டை, சின்னக்குளம் வீதியில் வைத்து நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டுள்ளன.

ஓமந்தைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ஓமந்தை, நொச்சிமோட்டை, சின்னக்குளம் பகுதியில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.ஜே. எஸ். பொன்சேகாவின் வழிகாட்டலில் ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ் த சில்வா தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே சிறியரக பிக்கப் வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்ட 10 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பொலிஸாரின் வருகையையடுத்து அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இது குறித்து ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# மாற்றிகளைத் தேடுவோம்; பிளாஸ்ரிக் பொலித்தீன் பாவனையைத் தடுப்போம்

## உலக சுற்றாடல் தினம் கிளிநொச்சியில்




(கண்டாவளை)

மாற்றிக்களை தேடுவோம் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனைகளை குறைப்போம் எனும் தொனிப்பொருளில் உலக சுற்றாடல் தினமான நேற்று விழிப்புணர்வு பேரணி ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வை தொடர்ந்து அங்கிருந்து கிளிநொச்சி டிப்போச் சந்தி வரை மாணவர்கள் மற்றும் சூழலியலாளர்கள் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்தில் பிளாஸ்ரினால் ஏற்படும் மாசுபாட்டை இல்லாதொழிப் போம், பொலீத்தீன் பாவனையை தடுப்போம், காடழிப்பை தடுத்து சுத்தமான காற்றை சுவாசிபபோம், போன்ற வாசங்கள் எழுதப்பட்ட பதாதைகளும் மாணவர்கள் ஏந்திருந் தனர்.

குறித்த நிகழ்வை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடக்கு மாகாண அலுவலகமும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சும் ஏற்பாடு செய்திருந்தன. (2-315-312)

# புல்லு வெட்டச் சென்ற சிறுவன் வீடு திரும்பவில்லை

(கிளிநொச்சி)

துவிச்சக்கரவண்டியில் புல்லு வெட்டச் சென்ற சிறுவன் நேற்று வரை வீடு திரும்பவில்லையென பெற்றோரால் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று நேற்றுப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இயக்கச்சி சங்கத்தார் வயலைச் சேர்ந்த கி/கிளிநொச்சி கோவில் வயல் சி.சி.த.க. பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்கும் சாந்த குமார் பிரியந்தன் (வயது -14) என்ற சிறுவனையே காணவில்லையென தெரிவிக்கப் படுகின்றது. கடந்த 3 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் மாட்டுக்கு புல்லு வெட்டுவதற்காக வயல் கரைக்குச் சென்ற சிறு வனே நேற்று வரை வீடு திரு ம்பவில்லை.

அனைத்து இடங்களிலும் பிரஸ்தாப சிறுவனை தேடிய போதும் கண்டுபிடிக்கவில்லையென பெற்றோர் தெரிவிக்கின்றனர். (2)

# மருந்துக் களஞ்சியத்தில் தீ!

(குருமன்காடு)

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் அமைந்துள்ள இராசையா மருந்துக் களஞ்சியத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்ட நிலையில், நகர சபை தீயணைப்பு பிரிவினரின் உதவியுடன் தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டது.

நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் தீ விபத்து நடைபெற்றது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வைரவப் புளியங்குளம், இராசதுரை வீதியில் அமைந்துள்ள இராசையா மருந்தகத்தின் உரிமையாளரின் இல்லத்தில் உள்ள மருந்தக களஞ்சியத்திலேயே திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நகர சபையின் தீயணைப்பு பிரிவினருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டதையடுத்து அவர்களின் உதவியுடன், வவுனியா பொலிஸாரும் இணைந்து சுமார் 30 நிமிடங்களாகப் போராடி தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# கல்மடுக்குளம், பிரமந்தனாறுக்குளம் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்மடுக் குளம், பிரமந்தனாறுக் குளம் ஆகியவற்றின் கீழான அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, கடந்த 2017 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் கல்மடுக் குளத்தின் கீழான வாய்க் கால்கள் மற்றும் அதன் கீழான கட்டுமானப்பணிகள் எட்டு மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதேபோல, பிரமந்தனாறுக்குளத்தின் கீழ் காற்றாலையின் உற்பத்தி ஊடாக கிடைக்கப் பெறுகின்ற நிதி யான மீண்டுவரும் செல வீனத்தின் கீழ் ஒரு மில்லியன் ரூபா செலவில் வாய்க் கால் வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் கல்மடுக் குளத்தின் கீழ் நெத்தலியாற்றுப்பகுதியில் காணப்படுகின்ற அணைக்கட்டு உடைந்த நிலையில் காணப்படு கின்றது.

அதை இந்த ஆண்டு மீளப் புனரமைப்பதற்கு 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோல மீண்டுவரும் செலவீனத்தின் கீழ் பிரமந்தனாறுக்குளத்தின் வாய்க்கால் வேலைகளுக்காக 5 இலட்சம் ரூபாவும் கல்மடுக் குளத்தின்கீழ் வாய்க்கால் வேலைகளை மேற் கொள்வதற்கு 1.75 மில்லி யன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மீண்டு வரும் செலவீனத்தின் கீழ் 25 பயனாளிகளுக்கு கிணறுகளை அமைப்பதற்கு 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பயனாளிகள் தெரிவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# சேதமடைந்துள்ள குழாய்க்கிணறுகளை புனரமைத்து மக்கள் பாவனைக்கு விடுங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் மற்றும் கெங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் குடிநீர்த்தேவைகளுக்காக அமைக்கப்பட்டு சேதமடைந்த நிலையில் காணப்படுகின்ற குழாய்க்கிணறுகளை புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட கோணாவில் மற்றும் கெங்காதரன் குடியிருப்பு, கல்மடுநகர், அக்கராயன் ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட குழாய்க்கிணறுகளில் பல கிணறுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு சேதமடைந்த நிலையில் காணப்படுகின்ற குழாய்க்கிணறுகளை பூர்த்தி செய்யுமாறு இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் பல தடவைகள் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்ற போதும் இன்று வரை நிவர்த்தி செய்யப்படவில்லை என இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)



# ‘தேசிய சுற்றாடல் வாரம்’ திணைக்கள உத்தியோகத்தர்கள் சிரமதானப்பணியில்


(கண்டாவளை)

சர்வதேச சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு நடு பூராகவும் வைகாசி மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் ஆனி மாதம் 5 ஆம் திகதி வரை தேசிய சுற்றாடல் வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இவ் வருட தொனிப் பொருளாக “முறையற்ற பிளாஸ்ரிக் பாவனையின் ஊடாக ஏற்படுகின்ற சூழல் மாசடைவதைத் தடுப்போம்'' என்ற தொனிப் பொருளுக்கு அமைவாக அனைத்து நிறுவனாங்களும் அலுவலக சூழலை சுத்தப்படுத்தி சிரமதானத்தை மேற்கொள்ளல் வேண்டும் என்ற ஜனாதிபதி செயலகத்தால் விடுக்கப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைவாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகளில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ-9 வீதியில் இரணைமடு சந்தியிலிருந்து பரந்தன் சந்தி வரையான பகுதியின் இருபக்கமும் காணப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை திணைக்கள ரீதியாக சுத்தம் செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் புகையிரத நிலைய வீதியில் சிரமதானத்தை மேற்கொண்டார்கள். (2-315-277)



# இராணுவ ஜீப் மோதி விபத்து; சிறுவர்கள், இராணுவத்தினர் காயம்



(குருமன்காடு)

வவுனியாவில் இராணுவ ஜீப் வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு சிறுவர்கள், இரண்டு இராணுவத்தினர் ஆகியோர் காயம் அடைந்தள்ளனர்.

ஏ-9 வீதி வவுனியா, ஈரற்பெரியகுளம் பகுதியில் வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இராணுவ ஜீப் வண்டி ஒன்று அதே திசையில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இரண்டு சிறுவர்கள் சமநிலை தடுமாறி வீதியின் குறுக்கே பயணித்த போது சிறுவர்கள் மீது மோதுவதை தவிர்ப்பதற்காக இராணுவ ஜீப் வண்டியை செலுத்திய போது அருகில் இருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இதில் சிறுவர்கள் இருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகிய நிலையிலும் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்த நிலையிலும் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈரற்பெரிய குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# ஆட்டோ-மோட்டார் சைக்கிள் விபத்து இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(மல்லாவி)

மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் மாங்குளம் வெள்ளாங்குளம் வீதியில் உள்ள வன்னி விளாங்குளம் பாடசாலை முன்பாக மாங்குளத்தில் இருந்து மல்லாவி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் இருந்த குழியை விலகிச் செல்ல முற்பட்ட போது பின்னால் பயணித்த ஆட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயம் அடைந்த நிலையில் பொது மக்களால் மீட்கப்பட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இருவரில் ஒருவர் கால் எலும்பு முறிந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றுள்ளது,

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மாங்குளம் நகரப் பகுதியில் இருந்து மல்லாவி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வன்னிவிளாங்குளம் பாடசாலைக்கு அண்மையாக வீதியில் காணப்பட்ட குழியினை விலகிச் செல்ல முற்பட்ட போது, பின்னால் பயணித்த ஆட்டோ மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்டு ஒருவருக்கு கால் எலும்பு முறிந்த நிலையிலும் மற்றையவர் காயங்களுடனும் பொதுமக்களால் மீட்கப்பட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தின் போது, மாங்குளத்தில் உள்ள வீடமைப்பு அதிகார சபையில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரான யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த இராசரட்ணம் - அரவிந்தன் (வயது-30) என்பவர் கால் எலும்பு முறிந்த நிலையிலும், வன்னிவிளாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த பொன்னையா ஆனந்தகுமார் (வயது-50) என்ற குடும்பஸ்தருமே விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# மனித புதைகுழி அகழ்வுப்பணி

## காணாமலாக்கப்பட்டோர் அலுவலக பிரதிநிதிகள் நேரடிப் பார்வை



(மன்னார்)

மன்னார் சதொச விற்பனை நிலைய வளாகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்புகள் அகழ்வுப் பணி நேற்று முன்தினம் திங்கட்கிழமை 6 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், மனித எலும்புக்கூடுகள் அகழ்வுப் பணியை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக பிரதிநிதி மிராக் ரஹீம், குறித்த அலுவலகத்தின் சட்டத்தரணி வருன திசேரம் ஆகிய இருவரும் நேரடியாகச் சென்று அவதானித்துள்ளனர்.

மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் காலை 7.15 மணியளவில் 6 ஆவது நாளாக குறித்த அகழ்வுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக பிரதிநிதி மிராக் ரஹீம், குறித்த அலுவலகத்தின் சட்டத்தரணி வருன திசேரம் ஆகிய இருவரும் "லங்கா சதொச" விற்பனை நிலைய வளாகத்தில் இடம் பெற்று வரும் மனித எலும்புக்கூடு அகழ்வுகளை நேரடியாக அவதானித்ததோடு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளாரும் வருகை தந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக பிரதிநிதி, குறித்த அலுவலகத்தின் சட்டத்தரணி ஆகிய இருவரும் மன்னார் பொது மயானத்திற்கு பின் பகுதியில் சேகரிக்கப்பட்டு அகழ்வுகள் இடம் பெற்று வரும் மண் குவியல்களையும் அங்கு இடம்பெற்று வருகின்ற அகழ்வுகளையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் குறித்த இரு இடங்களிலும் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. (2)

# உலக சுற்றாடல் பாதுகாப்பு தின விழிப்புணர்வு நிகழ்வு மன்னாரில்



(மன்னார்)

மன்னார் சமாதான அமைப்பின் ஏற்பாட்டில் உலக சுற்றாடல் பாதுகாப்பு தின விழிப்புணர்வு நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் நடைபெற்றது.

மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பி.ஏ.அந்தோனி மார்க் தலைமையில் இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் மன்னார் சர்வோதய அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன், மன்னார் நகர சபை உறுப்பினர் என். நகுசீலன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்த னர்.

இதன்போது விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு மக்களுக்கு உலக சுற்றாடல் பாதுகாப்பு தினம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். (2)

# ஆட்டோக்களுக்கு மீற்றர் கருவிகள் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பம்




(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் போக்குவரத்து பணியில் ஈடுபடுகின்ற ஆட்டோக்களுக்கு மீற்றர் கருவிகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் பரந்தனில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபர் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஐம்பது ஆட்டோக்களுக்கு முதற்கட்டமாக மீற்றர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் ஏனைய ஆட்டோக்களுக்கும் மீற்றர் கருவிகள் பொருத்தப்படும். மீற்றர் கருவிகள் பொருத்திய பின்னர் முதலாவது கிலோ மீற்றருக்கு 80 ரூபாவும் அடுத்து வருகின்ற கிலோ மீற்றர் ஒவ்வொன்றுக்கும் 50 ரூபா வீதமும் அறவிடப்படும் எனவும் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (2-312)

# அனுமதியின்றி கொண்டு செல்லப்பட்ட ஐந்து மாடுகள் ஓமந்தையில் மீட்பு





(குருமன்காடு)

அனுமதியின்றி கொண்டு செல்லப்பட்ட ஐந்து மாடுகள் ஓமந்தைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. வவுனியா, ஓமந்தை ஏ-9 வீதியில் வைத்து நேற்றுக் காலை குறித்த மாடுகள் மீட்கப்பட்டுள்ளன.

உரிய அனுமதிப்பத்திரங்கள் எதுவுமின்றி புளியங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி சிறிய கப் ரக வாகனத்தில் ஐந்து மாடுகள் கொண்டு செல்லப்பட்டன. இதனை சோதனை செய்த ஓமந்தைப் பொலிஸார் குறித்த மாடுகளை மீட்டுள்ளதுடன், வாகனத்தையும் கைப்பற்றி அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். (2-250)

# குரங்கின் தொல்லையைக் கட்டுப்படுத்த துப்பாக்கிகள் வழங்கிவைப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் பல பகுதிகளில் குரங்கு மற்றும் மர அணிலின் தொல்லைகள் அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் வீட்டிலுள்ள கோழிகள் உட்பட ஜீவனோபாயம் அனைத்திற்கும் பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதனைக்கட்டுப்படுத்த தென்னைப் பயிர்ச் செய்கை அலுவலகத்தினால் துப்பாக்கிகள் வழங்கி வைக்கப்படுகின்றன.

வவுனியாவில் தேங்காய், மாங்காய் போன்றவற்றிற்கு குரங்கினால் பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டு அழிவும் தொடர்ந்து இடம்பெறுகிறது.

இதனால் குரங்கின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு துப்பாக்கிகள் வழங்கும் நடவடிக்கையினை வவுனியா, மன்னார் பிராந்திய தென்னை பயிர்ச் செய்கை அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. துப்பாக்கி பெற்றுக்கொள்பவர்களுக்கு பயிற்சிகளும் அறிவுறுத்தல்களும் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றன. (2-281)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## அகத்திப்பூ



வேறு பெயர்:-அச்சம், முனி, கரீரம்
தாவரவியல் பெயர்:- Sesbania grandiflora
ஆங்கிலப் பெயர்:-Sesban

(சென்றவார தொடர்ச்சி...)

அகத்தியில் இருவகை உண்டு. அகத்தி, செவ்வகத்தி என்பன வெள்ளைப் பூவுடையது அகத்தி என்றும், செந்நிறப்பூவுடையது செவ்வகத்தி என்றும் வழங்கப்படும்.

**அகத்திப் பூவின் குணம்**

அகத்திப் பூச்சாற்றைக் கண்ணில் பிழிய கண்நோய் போகும். இலையைச் சமைத்துண்பது போல இதன் பூவையும் சமைத்துண்ண வெயிலாதிகளாலும், புகையிலை, சுருட்டு முதலியவைகளாலும் பிறந்த பித்தகுற்றம். உடலிற் தோன்றும், வெப்பு தணியும்.

''புகைப்பித்த மும்மழ
லாற் பூரிக்கும் அந்த
வகைப்பித்த மும்மன
லும் மாறும்-பகுத்துச்
சகத்தி வருந்தாத் தனிய
மிர்தே! நாளும்
அகத்தி மலருக் கறி.''
(அ.கு)

**செவ்வகத்திப் பூவின் குணம்**

இது பார்ப்பதற்குப் பயத்தை விளைவிக்குமாறு மூக்கின் வழியாய் விழுகிற இரத்தப் பெருக்கை விரைவில் நிறுத்துவதுந் தவிர, உள் வெப்பத்தையும் போக்கும்.

''நாடிற் பணிப்பீனும்
நாசிக் கறைக்கதழ்வை
யோடித் துடைத்துள்
ளொளியாற்றும்-பாணுடத்
தவரகத்தி னுந்துணங்
களைத் தண்டா மயிலே!
துவரகத்திப் பூக்காண்''
தி. (அ.கு)
(தேரையர் கரிசல்)

பூவின் இரசத்தால் அப்பிரகம் சுத்தியாம்.

**மருத்துவப் பயன்பாடுகள்**

பித்த குற்றம், உடலிற் தோன்றும் வெப்பத்திற்கு இலையை சமைத்துண்பது போல இதன் பூவையும் சமைத்துண்ண வெயிலாதிகளாலும் புகையிலை சுருட்டு முதலியவைகளா லும் பிறந்த பித்தகுற்றம், உடல் வெப்பம் தணியும்.

250 மி.லீ பசுப்பாலில் 20 மலர்களைப் போட்டுக் கொதிக்க வைத்து காலை, மாலை அருந்தலாம்.

அகத்திப் பூச்சாறு எடுத்து (1மே.க) அத்துடன் 1மே.க தேனையும் கலந்து காலை, மாலை அருந்தலாம். இதனால் மார்ப்புச்சளியும் இருமலும் குணமாகும். பித்த சம்பந்தமான நோய்களையும் போக்கும். அதுமட்டுமன்றி இருதயமும் பலப்படும். புகைப் பிடிப்பவர்கட்கு புற்றுநோயும் ஏற்படலாம். எனவே நீண்ட காலம் புகைப்பவர்கள் இந்தப் பூக்களை எந்த வகையிலாவது சாப்பிட்டுவர அதனால் ஏற்படும் தொல்லைகள் குறையக் கூடும்.

**இருதயப் பலத்திற்கு**

கீரைகளில் இருப்பது போன்ற கல்சியம் என்ற சத்து பூக்களிலும் உள்ளது. இந்தப் பூக்களைச் சேகரித்து சுத்தப்படுத்தி பின் அத்துடன் பருப்புச் சேர்த்து சமைத்துச் சாப்பிடலாம். இதனால் மலச்சிக்கல் குணமாகும். உடல் வலிமைக்கும் நல்லது. இதை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் எலும்புகளும் பற்களும் பலப்படும். அந்த அளவிற்கு கல்சியச் சத்து இதிலுள்ளது. இருதயப் பலவீனம் அல்லது இருதய சம்பந்தமான நோய் நீங்கும். சாதாரணமானவர்கள் சாப்பிட இருதயம் பலப்படும். இருதய சம்பந்தமான நோய் வராமல் பாதுகாத்துக்கொள்ள உதவும்.

**வயிற்றுப் புண்**

வயிற்றில் புண்ணுள்ளவர்கள் தினம் காலையில் வெறும் வயிற்றில் அகத்திப்பூ கீரை சம அளவு எடுத்து இடித்துச் சாறு எடுத்து கால் டம்ளர் (50-100 மி.லீ) அளவு அருந்தி வர மூன்றே நாட்களில் குணமாகி விடும்.

ஒரு கைப்பிடி பூவை 250 மி.லீ நீரில் போட்டுக் காய்ச்சி வைத்து இக் குடிநீரை காலையில் வெறும் வயிற்றில் ஒரு மாதம் குடித்து வர புண் ஆறும்.

**ஒற்றைத் தலைவலிக்கு**

எருக்கன் இலையுடன் சிற்றகத்திப் பூவைச் சேர்த்து 6 மிளகு வைத்து உருட்டி உமித் தணலில் வைத்து வேகவிட வேண்டும். வெந்தபிறகு கரக்கிச்சாறு பிழிந்து வலிக்கும் பக்கத்திற்கு எதிர்ப்புற மூக்கில் காலை, மாலை 3 துளிகள் விட ஒற்றைத்தலைவலி உள்ளிட்ட அனைத்துத் தலைவலியும் அகலும்.

சிற்றகத்திப் பூக்கள் தலைவலி, தலை, மூக்கு, காது சம்பந்தமான நோய்களைக் குணமாக்கும் மருந்தாகப் பயன்படுகிறது. சிற்றகத்திப்பூக்களைச் சுத்தம் செய்து பால் சேர்த்து விழுது போன்று அரைத்து மேல் பற்றாகப் போடலாம். இதனால் ஒற்றைத்தலைவலி, பீனிசத் தலைவலி போன்ற தீராத தலை வலிகளையும் தணிக்கும். மண்டைக்குத்தல் இருப்பினும் நீங்கும்.

**ஜலதோஷத்திற்கு**

நீடித்த ஜலதோசம் நீங்கவும் சிற்றகத்தி உதவும். பூக்களை சுத்தம் செய்து ஒரு கைப்பிடி அளவு எடுத்து அரை லீற்றர் நல்லெண்ணெயில் போட்டு நன்றாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு வாரம் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் எண்ணெய் தேய்த்துக் குளித்து வர தலைப்பாரம், தலைவலி, ஜலதோசம், பீனிசம் போன்ற எல்லாவித தொல்லைகளும் குணமாகும்.

**கண் பார்வைத் தெளிவிற்கு**

கண்களில் அசுத்தம் சேர்ந்து அதனால் பார்வை மங்கல் ஏற்படும். அந்நிலையில் கண்களில் அசுத்தம் நீங்கிப் பிரகாசமடைய இம்மலர்கள் உதவும். காது மந்தம் இருப்பினும் குணமாகும். பொக்களிப்பான் எனும் அம்மை நோய்க்கு செவ்வகத்திப்பூக்கள் பயன் தரும். இப்பூக்களைக் கசக்கி அதன் சாற்றை மேல் பூச்சாகப் பூசி வர வீக்கம் தணிந்து சீக்கிரம் குணமாகும்.

**இடு மருந்து வெளியாக்குவதற்கு**

இடுமருந்து தொல்லைக்கும் செவ்வகத்திப் பூக்களும் கீரைகளும் பயன்படுகின்றன. இரண்டையும் சம அளவாக ஒருகைப்பிடி அளவு எடுத்து வாயிலிட்டு நன்றாக மென்று சிறிதளவு தண்ணீர் அருந்தி வர வேண்டும். இவ்வாறு பதினைந்து இருபது நாட்கள் வரை தொடர்ந்து சாப்பிட்டு வர எத்தனை கொடிய இடு மருந்தாக இருப்பினும் வெளியேறிக் குணமாகும்.

கூடுபிற மேகமும் போங்கூறு. (வே.கு)

**மருத்துவ பயன்பாடுகள்**

**இரத்தபேதியுடன் வயிற்றுக் கடுப்பும் காணில்**

பூவை இடித்துப் பிழிந்து சாறு அல்லது கைப்பிடி பூவிற்கு 4 மடங்கு நீர்விட்டு நாலில் ஒன்றாய்க் குறுக்கிய குடிநீரை வடிகட்டி எடுத்து அதில் 50 மி.லீ பனங்கற்கண்டு 50 கிராம் சேர்த்து தினமும் 3 வேளை சாப்பிட குணமாகும்.

**நாட்பட்ட பேதிக்கு**

உலர்ந்த நெல்லிப்பூ, வெண் குங்கிலியம், கசகசா வகைக்கு 50 கிராம், ஏலம் 10 கிராம் சேர்த்து இடித்து சலித்து எடுத்து வைத்துக் கொண்டு அதில் 10 கிராம் அளவு காலை, மாலை பாலுடன் கொடுக்கலாம்.

**இரத்த மூலத்திற்கு**

உலர்ந்த பூ, கசகசா, வேப்பிசின் வகைக்கு 50 கிராம் சேர்த்து உலர்த்தி பொடி செய்து 10 கிராம் காலை, மதியம், இரவு என மூன்று வேளையும் பாலில் 10-20 நாட்கள் கொடுக்க இரத்த மூலம் மட்டுமன்றி சிறுநீரில் குருதி வெளியாதல்.


**சீதபேதிக்கு**

இலைக் கொழுந்து கைப்பிடி-1, பூக்கள் ஒரு கைப்பிடி அரைத்து கொட்டைப்பாக்களவு தினம் மூன்று வேளையும் கொடுக்கலாம்.

**வாந்திக்கு**

பூ கைப்பிடி, நெல்லிக்காய் 10 இவற்றுடன் நான்கு வேளை நீர்விட்டு நாலில் ஒன்றாய்க்குறுக்கி காலை, மாலை பாதி பாதியாகப் பருகலாம்.

## நெல்லிப்பூ



வேறு பெயர்:-தாத்தாரி, தாத்திரி, ஆமலகம், ஆலகம், ஆம்பல், ஆமரிகம், கோரங்கம், மிறுதுபலா, மீதுந்து.
தாவரவியல் பெயர்:-Phyllanthus emblica
ஆங்கிலப் பெயர்:-Indian Gooseberry, Enblic myrobalon

**குணம்:-** நெல்லிக்காயைப் பகற்போதுண்ணில், வெறி, ஐயநோய், பீனிசம், வாய்நீர்ச்சுரப்பு, வாந்தி, மயக்கம், தலைச்சுழலல், மல பந்தம், பிரமேகம் இவை போம். காமன் போன்ற அழகுண்டாகும். அதன்புளிப்பால் துவர்ப்பால் ஐயமும் நீங்கும்.

''பித்தமன லையம் பீநரம்
வாய்நீர் வாந்தி
மத்தமலக் காடும் மயக்க
முமில்-ஒத்தவுரு
வில்லிக்கா யம்மருங்கா
மென்னாட்கலா லந்தேர்தே
நெல்லிகா யம்மருந் துணி''
(தே.கு)

நெல்லிக்காய்க் குப்பித்
தம் நீங்கு; மதன்புளிப்பால்
செல்லுமே வாதமதிசர்
சேர்துவரால்-சொல்லுமையம்
ஒரு மிதைச் சித்தத்தில்
உன்னா அனலுடனே

**கோளை இருமலுக்கு**

இரு சீரகம், அரமதாகம், திப்பிலி, கராம்பு, வசம்பு, கடுக்காய், நெல்லிக்காய், நெல்லிப்பூ, களாச்சிப் பருப்பு, வேப்பம் நெட்டு, நொச்சியிலை, சமன் கூட்டி உலர்த்தி இடித்து சலித்து வைத்துக்கொண்டு 1/2தே. கரண்டியளவு காலை, மாலை என இரு வேளையும் நல்லெண்ணெய் ஒரு தே.க உடன் கலந்து கொடுக்க வேண்டும்.


**மூளைக்கு வலிமை தருவதற்கு**

ரோசாப்பூ, நெல்லிப்பூ, கோரைக்கிழங்கு, நெல்லிக்காய், சந்தனம், வாதுமைப் பருப்பு வகைக்கு 30 கிராம், கஸ்தூரி 4.2 கிராம், வெள்ளாட்டுப் பால் 1/2 படி, நாரத்தம் பழச் சாறு 1/4 படி, பனைவெல்லம் 1/4 வீசை, தேன் 2 பலம், நெய் 4 பலம் இவைகளை சேகரித்து லேகிய முறைப்படி தயாரித்து உட்கொண்டுவரலாம். நெல்லிக்காய்ப் பிரமாணம் காலை, மாலை 40 நாட்கள் உட்கொள்ளலாம். நெல்லிக்கனி காயகற்பக மூலிகைகளுள் ஒன்றாகும். நெல்லி வற்றலைக் குடிநீர் செய்து கொடுக்க மயக்கம், பிரமேகம் தாகம் ஓங்காளம் இவை நீங்கும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

## மந்தாரைப்பூ



வேறு பெயர்:-பூங்காரம்
தாவரவியல் பெயர்:-Bauhinia Variegata
ஆங்கிலப்பெயர்:-Kancanar

**குணம்:-** இதைடையவரிடத்து மன்னவனும் தன் வழிப்படுவன். உடற்கும் விழிக்கும் குளிர்ச்சியைச் செய்யும். உடல் வெப்பத்தை நீக்கும்.

''மந்தாரப் பூ குளிர்ச்சி
மன்னர் வசியமுமாம்
செந்தா மரைத் திருவே!
செப்பக்கேள்-மந்தாரங்
கண்ணுக்கு மாகுளிர்ச்சி
காணுங் கொதிப்பகற்றும்
மண்ணின்றும் பூவெனவே
வை'' (அ.கு)

வ.கு:-இதை உலர்த்திப் பொடித்து சிறிது சர்க்கரையுடன் கலந்துண்ண கழியச் செய்யும்.

கண்ணுக்குக் குளிர்ச்சியை உண்டாக்கக் கூடிய சில எண்ணெய்களில் இது சேரும்.

பூ மொக்கைக் குடிநீரிட்டுக் குடித்துவர இருமல், குருதிப்போக்கு அடங்கும். பெரும்பாடு நீங்கும்.

**மருத்துவப் பயன்பாடுகள்**

**இரத்த பேதி, இரத்த வாந்திக்கு**

மந்தாரை மொட்டுக்களை சுத்தம் செய்து 50 கிராம் அளவு எடுத்து அரைத்துப்போட்டு 500 மி.லீ நீர் விட்டுப் பாதியாக சுண்டுமளவு கஷாயமாக்கி இருபாகமாக காலை, மாலை இரு வேளை அருந்தி வரலாம். இதனால் இரத்தபேதி, இரத்த வாந்திமட்டுமன்றி இரத்த மூலம் இருந்தாலும் குணமாகும். தொடர்ந்து 3 வாரம் அருந்தி வர இரத்த மூலம் குணமாகும்.

70 கிராம் மந்தாரை மலர்களும் 70 கிராம் மாந்தாரை மரத்தின் பட்டைகளையும் சேர்த்து முறைப்படி குடிநீரிட்டு காலை, மாலை குடித்து வர இரத்த பேதி, இரத்த வாந்தி என்பவற்றுக்கு குறிப்பாக பெரும்பாடு என்னும் பெண்களின் உதிரப்போக்கு நோய்க்கும் மிகச்சிறந்த மருந்து.

**இரத்த மூலத்திற்கு**

மந்தாரைப் பூவை உலர்த்தி சூரணம் செய்து சர்க்கரை கூட்டி 1/2 தே.கரண்டி பிரமாணம் காலை, மாலை சாப்பிட்டு வர இரத்த மூலம் பெரும்பாலும் தணியும்.

**பெரும்பாட்டிற்கு**

மந்தாரை மொட்டுகள் ஒரு கைப்பிடி அளவு எடுத்து அதனை சுத்தம் செய்து ஒன்றிரண்டாக இடித்து 4 குவளை நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி ஆறவைத்து காலை, மாலை பாதி பாதியாக அருந்தி வரலாம்.

**மாதவிடாய்த் தொல்லைகட்கு**

பெண்களுக்கு ஏற்படக் கூடிய மாதவிடாய் தொடர்பான தொல்லைகட்கு மந்தாரை மொட்டுக் கஷாயம் குடிக்கலாம். ஒரு சிலருக்கு நீர்த்தரையில் புண் ஏற்பட்டு எரிச்சலுடன் சிறுநீர் வெளியேறுவதில் சிரமம் இருக்கும். சிறுநீருடன் இரத்தமும் வெளியேறக்கூடும். அவர்கட்கும் கஷாயத்தை தொடர்ந்து 3 வாரம் அருந்தக் கொடுக்கலாம்.

**மலச்சிக்கலிற்கு**

சிவப்பு நிறமான மந்தாரைப்பூக்களை சுத்தம் செய்து வெயிலில் காயவைத்து இடித்து தூளாக்கி சலித்து சூரணமாக்கிக் கொள்ள வேண்டும். மலச்சிக்கலால் அவதியுறும் போது இச் சூரணத்தில் 1/2தே. கரண்டி அளவு எடுத்து அத்துடன் ஒரு தே. கரண்டி தேன் சேர்த்துக்குழைத்து அருந்தி னால் போதும். இதனால் மலச்சிக்கலோடு உஷ்ண சம்பந்தமான தொல்லையும் நீங்கும். இருமல் மட்டுப்படும். கண் எரிச்சல் இருந்தாலும் நீங்கும்.


**தொண்டைப் புண்ணிற்கு**

மந்தாரைப் பூ, இதன் பட்டை, மாதுளம்பூ, வேலம் பட்டை சமனளவு எடுத்து முறைப்படி குடிநீரிட்டு அந் நீரினால் வாய் கொப்புளித்துவர வாய் நீர் ஊறல், தொண்டைப்புண் இவை நீங்கும்.

**கட்டிகள் பழுப்பதற்கு**

மந்தாரை வேர், பட்டை, பூ இம்மூன்றையும் சம எடை சேர்த்து அரிசி கழுவிய நீர் விட்டரைத்து கட்டிகள் மீது பூசிவர கட்டிகள் பழுக்கும். (தொடரும்)





சாவகச்சேரி -கோவிற்குடியிருப்பு சந்தன முதலியார் முருகமூர்த்தி ஆலய மணவாளக்கோல திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. (படங்கள்:-சுபேசன்)

# சுனாமி குடியிருப்பு வீதி எப்போது திருத்தப்படும்?

## மக்கள் காத்திருப்பு



(பொற்பதி)

மருதங்கேணி சுனாமிக் குடியிருப்பு வீதி எப்போது திருத்தப்படும் என்ற எதிர்பார்ப்பில் மக்கள் காத்திருக்கின்றனர்.

மிக நீண்ட காலமாக இவ் வீதியானது திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனைவிட வீதிக்கு போடப்பட்ட கற்கள், சல்லிகள் ஆங்காங்கே வெளிப்பட்டு காணப்படுகின்றன.

இதனால் இந்த வீதியூடாக துவிச்சக்கரவண்டியில் கூட பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இவ் வீதி பருத்தித்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட வீதியாகும். சபை ஆரம்பிக்கப்பட்டு இவ்வளவு நாட்களாகியும் இன்னும் இவ்வீதி திருத்துவதற்கான நடவடிக்கைகள் ஏன் மேற்கொள்ளப்படவில்லையெனவும் மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

மருதங்கேணி கிழக்கு மேற்காக வருகின்ற சுனாமிக்குடியிருப்பு வீதியை விரைவில் திருத்தம் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மருதங்கேணி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-64)

# அகில இலங்கைக் கம்பன் கழகத்தின்

## கம்பன் விழா-2018

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 2018ஆம் ஆண்டிற்கான "கம்பன் விழா" எதிர் வரும் 29ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 1 ஆம் திகதி வரையான மூன்று நாட்கள் யாழ்ப்பாணம் நல்லூரில் நடைபெறவுள்ளது.

இவ்வாண்டுக் கம்பன் விழாவினையும் வழமை போல மிகச் சிறப்பாக நடத்த அகில இலங்கைக் கம்பன் கழகம் ஆவன செய்து வருகிறது.

இவ்விழாவின் காலை நிகழ்ச்சிகள், நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள கம்பன் கோட்ட மேல் மண்டபத்திலும், மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீ துர்க்கை அம்மன் மணிமண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் நம்நாட்டு, தமிழ் நாட்டு அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்க்க உள்ளனர்.

வழமைபோல இவ்வாண்டும் இவ்விழாவில் பட்டிமண்டபம், வழக்காடு மன்றம், கவியரங்கம், கருத்தரங்கம், இலக்கிய ஆணைக்குழு, இலக்கியப் பேருரை, விவாத அரங்கம், கோலஉரையாடல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

விழாவில் கலந்து கொள்ள விரும்புவோர் தனிப்பட்ட அழைப்பிதழைப் பெற வேண்டின் கம்பன் கோட்டம், இல. 300 கோயில் வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு தங்கள் முகவரியை அனுப்பி வைக்கலாம்.

கல்லூரிகள் தமது மாணவர்களை இவ்விழாவில் கலந்து கொள்ள வைக்க விரும்பின் 077 293 5509 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முன் ஒழுங்கு செய்து கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கம்பகாவியத்தினூடு தமிழ் இன்பம் பருகக் காத்திருக்கும் அன்பர்கள் அனைவரையும் 38ஆவது கம்பன் விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி கம்பன் கழகம் அழைத்துள்ளது. (இ-7)

# மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு முடியும் வரை போராடுவோம்

## தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி



(யாழ்ப்பாணம்)

எமது பிரதேச மக்களுக்காக அவர்களது எதிர்பார்ப்புகளுக்காக உண்மையான அர்ப்பணிப்போடு சேவைசெய்து வருவதுடன் அவர்களது பிரச்சினைகளையும் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலில் முடியுமானவரை பெற்றுக்கொடுத்து சாதித்துக் காட்டியவர்கள் நாம்.

அந்த வகையில் தொடர்ந்தும் எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட தயாராக இருக்கின்றோம் என வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச நிர்வாக செயலாளருமான நமசிவாயம் கருணாகர குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நயினாதீவு பிடாரி அம்பாள் சனசமூக நிலையத்தினர் பிடாரி அம்பாள் வேள்வி தினத்தை முன்னிட்டு நடத்திய பொதுஅறிவுப்பரீட்சை மற்றும் விளையாட்டு நிகழ்வின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தீவகப் பிரதேசத்தின் மீள் எழுச்சிக்காக எமது கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா கடந்த காலங்களில் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களையும் கட்டுமானப் பணிகளையும் மின்சாரம், சனசமூக நிலைய கட்டடம், முன்பள்ளி கட்டடம் என பலவற்றையும் பெற்றுத் தந்துள்ளார்.

அத்துடன் இந்த நயினாதீவு பிரதேச மக்களுக்கு தேவையான அனைத்து தேவைப்பாடுகளையும் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் பெற்றுத்தந்து இங்குள்ள மக்கள் இயல்பு வாழ்வு வாழ்வதற்கான பாதையை உருவாக்கியிருந்தோம்.

அந்தவகையில் இனிவரும் காலத்திலும் இப்பிரதேச மக்களின் தேவைப்பாடுகளையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு அவற்றையும் பெற்றுக்கொடுக்க நாம் தயாராகவே இருக்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டபோது தான் வசித்து வந்த சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மேல் மாடியிலிருந்து பார்த்து மாரடைப்பால் காலமாகிய கலாநிதி ஹயசிந் சிங்கராயர் தாவீது அடிகளாரின் 37ஆவது நினைவு தினம் அவர் பிறந்த இடமான தும்பளையில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்றது.





நெல்லியடி நகரப்பகுதியில் அமைந்துள்ள மறைந்த தமிழ்த் தலைவர் முருகேசு சிவசிதம்பரத்தின் சிலைக்கு நேற்றுக்காலை வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், தர்மலிங்கம் மற்றும் கரவெட்டி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலம் , வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் மாலை அணிவித்து ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:-மகாலிங்கம்)



ஓய்வுபெற்ற அதிபரும் சமாதான நீதவானும் சமூக சேவையாளருமான ஐ.மார்க்கண்டனின் ஓராண்டு நிறைவு நூல் வெளியீடும், அவரது நினைவாக "ஞான மார்க்கம் அறமுதல்" அங்குரார்ப்பண நிகழ்வும் அளவெட்டி தெற்கு றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் சைவப்புலவர் செல்லத்துரை தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது, விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், வட மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி சர்வேஸ்வரன் திருவுருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைப்பதையும், நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.




# காவிரி நீர் தொடர்பில் தமிழகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார்

## கர்நாடக முதல்வர் குமாரசாமி தெரிவிப்பு

(சென்னை)

காவிரி விவகாரம் தொடர்பாக தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாகக் கர்நாடக முதலமைச்சர் குமாரசாமி தெரிவித்துள்ளார்.

கர்நாடக புதிய முதலமைச்சர் குமாரசாமியை மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் நடிகர் கமல்ஹாசன் பெங்களூரில் உள்ள கிருஷ்ணா இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து பேசிய பின்னரான ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், காவிரி நதிநீர் பங்கீட்டு விவகாரம் தொடர்பாக கர்நாடகத்திற்கும், தமிழ்நாட்டுக்கும் இடையே பிரச்சினை நீடித்து வருகிறது.

தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட தண்ணீரின் அளவை குறைத்து, அதை பெங்களூரின் குடிநீர் தேவைக்கு வழங்கியது.

இந்த பிரச்சினையில் நடுவர் மன்ற தீர்ப்பை அமுல்படுத்த, உச்சநீதிமன்ற உத்தரவுப்படி மத்திய அரசு காவிரி மேலாண்மை ஆணையத்தை அமைத்துள்ளது என தெரிவித்தார்.

மேலும் காவிரி பிரச்சினையில் கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு இடையே ஒரு இணக்கமான நல்லுறவு ஏற்பட வேண்டும். இரு மாநிலங்களும் இணக்கமான நல்லுறவைத் தொடர வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு என இரு மாநில விவசாயிகளுமே எங்களுக்கு முக்கியமானவர்கள். காவிரி பிரச்சினையில் கர்நாடக விவசாயிகளுக்கு சில கருத்து வேறுபாடுகள் இருப்பது உண்மை தான். இவற்றை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும் எனவும் தெரிவித்தார். (7)

# காவிரி நீர் விவகாரம் கமல் கர்நாடக முதல்வரை சந்தித்தது நல்ல முயற்சி

## ரஜினி வரவேற்பு



(சென்னை)

காவிரி நீர் பிரச்சினை தொடர்பாக கமல்ஹாசன் கர்நாடக முதல்வரை சந்தித்தது நல்ல முயற்சி என்றும் அதில் தவறு இல்லை என்றும் ரஜினிகாந்த் தெரிவித்தார்.

காவிரி நதிநீர் பிரச்சினை தமிழகம்-கர்நாடகா ஆகிய 2 மாநிலங்களுக்கு இடையே நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்த, விவகாரத்தில் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி மத்திய அரசு காவிரி மேலாண்மை ஆணையத்தை அமைத்துள்ளது.

இதன் பிறகாவது கர்நாடக அரசு காவிரி விவகாரத்தில் வீம்பு பிடிக்காமல் தமிழகத்துக்கு தேவையான தண்ணீரை திறந்து விடவேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த நிலையில் காவிரி நீர் விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காண முடியும் என்று கூறி வந்த மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் இப்போது அதற்கான முயற்சியில் இறங்கி உள்ளார்.

இது தொடர்பாக கர்நாடக முதல்வர் குமாரசாமியை கடந்த ஞாயிற்றுக்கிழமை நேரில் சந்தித்து பேசினார். அப்போது காவிரி நீர் விவகாரத்தை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பது குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர்.

இதன் பின்னர் குமாரசாமி, கமல் இருவரும் கூட்டாக பேட்டி அளித்தனர். அப்போது, காவிரி விவகாரத்தில் இணக்கமான நல்லுறவை விரும்புவதாகவும், தமிழக அரசுடன் பேச்சு நடத்த தயார் என்றும் அம்மாநில முதல்வர் குமாரசாமி அறிவித்துள்ளார்.

அவருடன் இணைந்து பேட்டி அளித்த கமலும் 2 மாநிலங்களும் சகோதரத்துவ மனப்பான்மையுடன் காவிரி பிரச்சினையை அணுகி தீர்த்துக் கொள்ள வேண்டும். கர்நாடக முதல்வர் குமாரசாமியின் பேச்சு எனது இதயத்தை நிரப்பி விட்டது என்றும் தெரிவித்தார்.

கமலின் இந்த நடவடிக்கைக்கு தமிழக அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு செயலாளர் பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கமலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் சங்க தலைவர் பி.ஆர்.பாண்டியனும் கமலின் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். காவிரி பிரச்சினையை திசை திருப்பும் நோக்கத்தோடு கமல் செயற்படுவதாக இவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த நிலையில் கமலின் இந்த முயற்சியை ரஜினி வரவேற்றுள்ளார். இது தொடர்பாக சென்னை விமான நிலையத்தில் ரஜினி அளித்த பேட்டி வருமாறு,

கமல்ஹாசன் கர்நாடக முதல்வரை சந்தித்தது நல்ல முயற்சி. அதில் தவறு இல்லை. பேச்சு தொடர வேண்டும். அவர்கள் ஒன்றும் எதிரி இல்லை. பெரிய பெரிய காரியங்கள் கூட பேசித்தான் தீர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (7)

# ட்ரம்ப்-கிம் சந்திப்பு உ

## வெள்ளை மாளிகை அறிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் இடையேயான சந்திப்பு சிங்கப்பூரில் எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவும், வட கொரியாவும் நிரந்தர பகை நாடுகளாக உள்ளன. அமெரிக்காவை அணுகுண்டு வீசி தாக்கப்போவதாக வடகொரிய ஜனாதிபதி கிம்ஜாங் உன் அடிக்கடி மிரட்டி வந்தார். சீனா- தென்கொரியா நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் கார

# நீட்தேர்வில் தோல்வியடை மாடியில் இருந்து குதித்து

(டில்லி)

நீட் தேர்வில் தோல்வி அடைந்ததால் டில்லியைச் சேர்ந்த 19 வயது மாணவர் 8ஆவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா முழுவதும் மருத்துவ படிப்புக்கு என ஒரே தகுதித்தேர்வாக அறிவிக்கப்பட்டது நீட் தேர்வு. இந்த தேர்வு முறை அறிவிக்கப்பட்ட நாள் முதல் பல்வேறு சர்ச்சைகளையும் வழக்குகளையும் சந்தித்து வருகிறது.

மருத்துவ படிப்பை விரும்பிய மாணவர்களின் இலக்கிற்கு மிகப்பெரிய தடையாக அமைந்த இந்த நீட் தேர்வை தடை செய்யுமாறு தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அதையும் மீறி வருடந்தோறும் தவறாமல் நீட் தேர்வு நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டுக்கான நீட் தேர்வு கடந்த மாதம் 6ஆம் திகதி நாடு முழுவதும் நடைபெற்றது. தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.

இந்நிலையில், நீட் தேர்வில் தோல்வியுற்றதால் டில்லியைச் சேர்ந்த பர்னவ் மெஹந்திரட்டா என்ற 19 வயது மாணவர் 8ஆவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் குறித்து பேசிய பொலிஸ் அதிகாரி ஒருவர், கடந்த 2 ஆண்டுகளாக மாணவர் நீட் தேர்வு எழுதி வருவதாகவும், ஆனால் தொடர்ந்து தோல்வியுற்றதால் மனம் உடை

# ஆப்கானில் தற்கொ பலியானோர் எண்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று முன்தினம் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய மனித குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் வன்முறை சம்பவங்களுக்கு அந்நாட்டின் முக்கிய தலைவர்கள் சமீபத்தில் முதன்முறையாக கண்டனம் தெரிவித்திருந்தனர்.

தலைநகர் காபூலில் உள்ள லோயா ஜிர்கா கூடாரத்தில்



# வெளிநாடு



## உறுதியானது

ணமாக கிம் ஜாங் உன் தனது மிரட்டல் போக்கை கைவிட்டு அமெரிக்காவுடன் சமரசமாக செல்ல முன் வந்தார்.

எதிர்வரும் 12ஆம் திகதி சிங்கப்பூரில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், கிம் ஜாங் உன்னும் சந்தித்து பேச உள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அதன் பின்னர் மீண்டும் சில கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் இந்த சந்திப்பு நடைபெறுமா என்பதில் சந்தேகம் நீடித்து வந்தது. இந் நிலையில், திட்டமிட்டபடி எதிர்வரும் 12ஆம் ஆம் திகதி சிங்கப்பூரில் சந்திப்பு நடைபெறும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித் தார்.

இதையடுத்து அவர்கள் சந்திப்புக்கான நேரம் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி மாளிகை அறிவித்துள்ளது. எதிர்வரும் 12ஆம் திகதி சிங்கப்பூர் நேரப்படி காலை 9 மணிக்கு இந்த சந்திப்பு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## அமெ. ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையீடு

## என்னை மன்னிக்கும் அதிகாரம் எனக்கு உண்டு

## ட்ரம்ப் அதிரடி

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யா தலையிட்டது தொடர்பான விசாரணையில் சிக்கியுள்ள டொனால்ட் ட்ரம்ப், நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் என்னை மன்னிக்கும் அதிகாரமும் எனக்கு உண்டு என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை தோற்கடித்து, குடியரசு கட்சி வேட்பாளராக களம் இறங்கிய டொனால்ட் ட்ரம்பை வெற்றி பெறச்செய்வதற்கு ரஷ்யா நேரடியாக தலையிட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இந்த குற்றச்சாட்டை ட்ரம்ப் தொடர்ந்து மறுத்து வருகிறார். ரஷ்யாவும் தொடர்ந்து மறுத்து வருகிறது.

இதுதொடர்பாக அமெரிக்க நாடாளுமன்ற குழு ஒரு விசாரணை நடத்துகிறது. அதே நேரத்தில் ராபர்ட் முல்லர் தலைமையிலான சிறப்பு குழுவின் விசாரணையும் நடத்தப்படுகிறது. இந்த குழு, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு சம்மன் அனுப்பி வரவழைத்து விசாரணை நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

இந்த விசாரணை தொடர்பாக முல்லர் குழுவினருக்கும், ட்ரம்ப் சட்டத்தரணிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்துள்ளது.



ட்ரம்பிடம் விசாரணையின்போது கேட்பதற்காக கேள்விகள் பட்டியலும் தயாரிக்கப்பட்டு உள்ளன.

இதனால், அமெரிக்க ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்துள்ள டொனால்ட் ட்ரம்ப், பிரமாண வாக்குமூலம் அளித்து, விசாரணை குழுவினரின் கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டிய தர்மசங்கடமான சூழல் உருவாகி உள்ளது.

இதற்கிடையே, ஒரு வேளை ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவுடன் சேர்ந்து கொண்டு ஹிலாரியை வீழ்த்த ட்ரம்ப், முன்னர் திட்டமிட்டிருந்தாலும், அமெரிக்க ஜனாதிபதி என்ற முறையில் இந்த நாட்டு குடிமக்களுக்கு பொதுமன்னிப்பு அளிக்கும் அதிகாரம் படைத்துள்ள டொனால்ட் ட்ரம்ப்புக்கு தனக்குத்தானே பொதுமன்னிப்பு அளிக்கும் அதிகாரத்தையும் எங்கள் நாட்டு அரசியலமைப்பு சட்டம் அளித்துள்ளது என ஆளும்கட்சியை சேர்ந்த சில சட்டத்தரணிகளும் சட்ட வல்லுநர்களும் சமீபத்தில் கருத்து தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் என்னை மன்னிக்கும் அதிகாரமும் எனக்கு உண்டு என டொனால்ட் ட்ரம்ப் நேற்று திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், எந்த தவ்றுமே செய்யாத நான் எதற்காக அதை செய்ய வேண்டும்? எனவும் தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். எப்படியாவது இந்த வழக்கில் தன்னை சிக்க வைக்க துடிக்கும் எதிர்க்கட்சியினரையும் அவர் விமர்சித்துள்ளார். (7)

## ...டந்த மாணவன் ...துத் தற்கொலை

ந்த பர்னவ் தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறியுள்ளார்.

மேலும், மாணவர் பிரனவின் அறையில் இருந்த அவரது இறுதி கடிதத்தில், நீட் தேர்வு முடிவுகள் குறித்து பெற்றோரிடம் பொய் கூறிவிட்டதாக குறிப்பிட்டிருந்தார். பிரனவ் மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பாக தூக்கு போட்டுக்கொள்ள முயற்சித்து இருப்பதும் தெரியவந்துள்ளது.

தமிழகத்தில் நீட் தேர்வில் தோல்வியடைந்ததால் பிரதீபா என்ற மாணவி உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

தரமான மருத்துவர்களை உருவாக்கும் என அறிவிக்கப்பட்ட நீட் தேர்வு மரணங்களை உருவாக்கி வரும் நிலையில் அரசு கண்டுகொள்ளாமல் மாணவர் சேர்க்கையில் கவனம் செலுத்தும் நிகழ்வு வேதனையளிக்க கூடியதாகவே உள்ளது. (7)

## நீர்முழ்கிப் போர்க்கப்பல் சோதனை வெற்றி

## சீனா நம்பிக்கை

(பீஜிங்)


சீனாவில் உருவாக்கப்பட்ட ஆழ்கடல் போர்வீரன் என வர்ணிக்கப்படும் (ஷென் ஹை யோங்க்ஷி) நீர்மூழ்கிப் போர்க்கப்பல் சீனத் தென் கடலில் விஞ்ஞான சோதனையினை வெற்றிகரமாக முடித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஹய்னான் நகரிற்குத் திரும்பியுள்ளது.

குறித்த இந்தச் சோதனை கடந்த இரண்டு மாதங்களிற்கும் மேலாக இடம்பெற்று வந்ததாகவும் இதன்போது 3407.7 மீற்றர் ஆழம் வரை நீர்மூழ்கிக்கப்பல் இறங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொடர்ச்சியான இரவும் பகலுமாக சுமார் 19 நாட்கள் வரை இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது. இதில் மிகப்பிரபல புவியியல் நிபுணர் 82 வயதான வாங் பிங்சியன் 1400 மீற்றர் ஆழத்திற்கு மேல் பயணித்துள்ள நிலையில் உலகில் மிகவயதான ஆழ்கடல் சோதனை புரிந்த விஞ்ஞானி எனும் பெயர் பெற்றுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் தென்மேற்கிந்தியப் பெருங்கடலில் இடம்பெறவுள்ள கப்பற் சோதனைக்கு முன்னோட்டமாகவும் தயாராவதாகவும் இடம்பெற்ற இந்தச் சோதனையின் வெற்றி நம்பிக்கையளிப்பதாகக் கூறியுள்ளனர். (7)

## மக்கள் போராட்டத்தின் எதிரொலி; ஜோர்தான் பிரதமர் இராஜினாமா



(அம்மான்)

ஜோர்தான் அரசு சமீபத்தில் அமுல்படுத்திய புதிய வரிவிதிப்பு சட்டம் மற்றும் விலைவாசி உயர்வுக்கு எதிராக நடத்திய 4 நாள் போராட்டத்துக்கு அடிபணிந்த பிரதமர் நேற்று முன்தினம் இராஜினாமா செய்துள்ளார்.

ஜோர்தான் நாட்டில் விலைவாசி உயர்வால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில்,சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கேற்ப வரிவிதிப்பு சட்டத்தில் அரசு மாறுதல் செய்ய தீர்மானித்தது.

இதனால், கொந்தளித்து எழுந்த மக்கள் கடந்த 4 நாட்களாக வீதிகளில் திரண்டு தொடர்ச்சியாக போராடி வருகின்றனர்.

போராட்டம் நடத்திய மக்கள் மீது பொலிஸார், தடியடி மற்றும் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதால் சர்வதேச நாடுகளில் உள்ள ஊடகங்கள் இந்த போராட்டம் தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்து வந்தன.

இதைத்தொடர்ந்து, மன்னரை நேற்று முன்தினம் சந்தித்த ஹனி அல் முல்கி, தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்யும் கடிதத்தை அவரிடம் ஒப்படைத்தார். (7)

## ...கொலைப்படைத் தாக்குதல் ...ண்ணிக்கை 14ஆக உயர்வு



சுமார் 3 ஆயிரம் உலமாக்கள் (மதத் தலைவர்கள்) பங்கேற்ற ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

கூட்டம் முடிந்து அனைவரும் வெளியேறும் வேளையில் (உள்ளூர் நேரப்படி) சுமார் 11.30 மணியளவில் அங்கு வந்த ஒருவன் தனது உடலில் கட்டிவைத்திருந்த குண்டுகளை வெடிக்க வைத்தான்.

இந்த தாக்குதலில் 7 பேர் உடல் சிதறி உயிரிழந்ததாகவும், சுமார் 10 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் முதல்கட்ட தகவல்கள் வெளியாகின. இந்நிலையில், இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்ட செய்தியில் 70 பேர் வரை கொல்லப்பட்டதாக கூறியுள்ளது. சிகிச்சை பெற்று வருபவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (7)

## புயிகோ எரிமலை வெடித்துச் சிதறியதில் பலியானோர் எண்ணிக்கை 70ஆக உயர்வு

(கௌதமாலா சிட்டி)

கௌதமாலா நாட்டின் தலைநகர் கௌதமாலா சிட்டிக்கு 40 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள புயிகோ எரிமலை திடீரென்று வெடித்து சிதறியதில் பல கி.மீற்றர் தொலைவிற்கு செந்நிறத்தில், 700 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் மிகுந்த லாவா வெளியேறி வருகிறது.

இதனால் ஏற்பட்ட கரும்புகை மற்றும் சாம்பல் தலைநகர் மற்றும் பிற பகுதிகளுக்கு பரவியுள்ளன, அங்குள்ள வீடுகள், மரங்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவை சாம்பலால் மூடப்பட்டுள்ளன, பொதுமக்கள் பலர் தங்களது வீடுகளில் இருந்து வெளியேறி வேறு இடங்களுக்கு தப்பி சென்றுள்ளனர்.

தற்போது இதில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 70 ஆக உயர்வடைந்துள்ளதாக ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன,

மேலும் எரிமலையால் சேதமடைந்துள்ள கிராமங்களில் இருந்து மீட்பு பணியாளர்கள் அதிக உடல்களை மீட்டுள்ளனர்.

கரும்புகை மற்றும் சாம்பல் பரவிய நிலையில் மீட்பு பணியில் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. மீட்பு பணியாளர்கள் முக கவசம் அணிந்தபடி எச்சரிக்கையுடன் தாங்களது பணிகளில் ஈடுபட்டு உள்ளனர்.

காற்றில் ஏற்பட்ட மாற்றத்தினால் எரிமலை சாம்பல் தலைநகர் உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் பரவியுள்ளது. (7)



# புதிய அரசு பதவியேற்றதும் 20 வீதத்தால் வரிகுறையும்

## மகிந்த ராஜபக்ஷ வாக்குறுதி



(கொழும்பு)

தனது தலைமையிலான புதிய அரசாங்கம் பதவியேற்றதும், 20 வீதத்தினால் வரியைக் குறைக்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"அதிகளவு வரியினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களால் சரியாகச் சாப்பிட முடியவில்லை. பணத்தைச் சேமிக்க முடியவில்லை. அதிகளவு வரியே இதற்குக் காரணம்.

நாங்கள் அரசாங்கத்தை அமைக்கும் போது, வரியை 20 வீதத்தினால் குறைப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்காவில் இரு முக்கிய பதவிகளுக்கு ஈழத்தமிழர்கள் இருவர் போட்டி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மேரிலன்ட் மாகாணத்தின் இரண்டு முக்கிய பதவிகளுக்கு ஈழத் தமிழர்கள் போட்டியிடுவதாக பால்ரிமோர் மகசின் என்ற ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேரிலன்ட் மாகாண ஆளுநர் பதவிக்கு கிரிசாந்தி விக்னராஜா என்ற பெண் போட்டியிடுகிறார். அவரது சகோதரரான திரு எனப்படும் திருவேந்திரன், அதே மாகாணத்தின் பால்ரிமோர் நகர அரச சட்டவாளர் பதவிக்குப் போட்டியிடுகிறார்.

கிரிசாந்தி முன்னர், வெள்ளை மாளிகையில் மிச்சேல் ஒபாமாவின் கொள்கை பணிப்பாளராக இருந்தவர்.

கிரிசாந்தியும் அவரது அண்ணன் திருவும், குழந்தைகளாக இருந்த போது,



அவரது பெற்றோர், இலங்கையில் இருந்து போரினால் இடம்பெயர்ந்து பால்ரிமோர் நகரில் குடியேறினர்.

இவர்களின் பெற்றோர் பால்ரிமோர் நகர பாடசாலையில் ஆசிரியர்களாக பணியாற்றினர்.

ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்ற திரு, 'ஹவார்ட் லோ ரிவியூ' இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அவரது சகோதரியான கிரிசாந்தி யேல் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் படித்தார்.

இவர்கள் இருவரும் இப்போது மேரிலன்ட் மாகாணத்தின் இரண்டு முக்கியமான பதவிகளுக்காக ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்காவின் கூட்டுப் பயிற்சிக்கு மரைன் கொமாண்டோக்களை அனுப்பியது இலங்கை



(சிட்னி)

அமெரிக்கா நடத்தும், RIMPAC-2018 என்ற பாரிய கடற்படைக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க, இலங்கை கடற்படையின் மரைன் படைப்பிரிவைச் சேர்ந்த 25 கொமாண்டோக்கள் அவுஸ்ரேலியாவுக்குச் சென்றுள்ளனர்.

26 நாடுகள் பங்கேற்கும் RIMPAC-2018 கூட்டுப் பயிற்சி எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து, அமெரிக்காவின் பேர்ள் துறைமுகம், ஹொனொலுலு மற்றும் ஹவாய் ஆகிய இடங்களில் இந்தக் கூட்டுப் பயிற்சி இடம்பெறுகிறது.

இந்த ஆண்டு கூட்டுப் பயிற்சில் முதல் முறையாக இலங்கைக் கடற்படைக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது.

மரைன் படைப்பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் உள்ளிட்ட 25 கொமாண்டோக்கள் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க, கடந்த மே 21 ஆம் திகதி அவுஸ்ரேலியாவுக்கு புறப்பட்டுச் சென்றனர்.

இந்தக் கூட்டுப் பயிற்சி ஈரூடக நடவடிக்கைகள், நகரப் புற நடவடிக்கைகள், சூட்டுப் பயிற்சிகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தகதக்கது. (இ-7)

# ரஷ்யாவுக்கான தூதுவராக தயான் ஜெயதிலக?



(கொழும்பு)

முன்னாள் இராஜதந்திரியான, கலாநிதி தயான் ஜெயதிலகவை, ரஷ்யாவுக்கான தூதுவராக நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவு செய்துள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த முடிவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை என்று, வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கலாநிதி சமன் வீரதுங்கவின் பதவிக்காலம் முடிந்த பின்னர், ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் பதவி பல மாதங்களாக வெற்றிடமாகவுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில், ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவும், பிரான்சுக்கான தூதுவராகவும் தயான் ஜெயதிலக பணியாற்றியிருந்தார்.

அத்துடன் தற்போதைய அரசாங்கத்தின் அரசியல் திட்டங்களை வலுவாக எதிர்க்கும் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான, எலிய அமைப்பின் முன்னணிச் செயற்பாட்டாளராகவும் கலாநிதி தயான் ஜெயதிலக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பேச்சுவாக்கில் வெளிவரும் விடயங்கள்!

அவதியான உலகமிது!

இதனால் பிறர் சொல்லும் விடயங்கள் பலவற்றை நாம் கூர்ந்த கவனிப்பது இல்லை. அதிலும் அவர்கள் சொல்லும் விடயத்தில் நமக்கு சுவாரசியம் இல்லாவிட்டால் காது கேளாதவர்களுக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடுகிறது.

அது மட்டுமல்ல பிறர் பேசும் போது நமக்கு ஒரு குறிப்பிட்ட விடயத்தில் மட்டும் சுவாரசியம் ஏற்பட்டுவிட்டால் மற்றையவை ஏதும் காதில் ஏற மாட்டேன் என்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சில அருமையான நன்மைகளை நாம் பெறத் தவறிவிடுகிறோம்.

ஒரு விடயத்தைச் சொல்ல நேரிடும் போது, மனிதர்கள் தற்செயலாக வேறு சில விடயங்களைத் தங்களையுமறியாமல் உதிர்ப்பார்கள். இவற்றுள் பெரும்பாலானவற்றை நம்மால் அவசியமற்ற விடயங்களாக ஒதுக்கிவிட முடிந்தாலும் எல்லாவற்றையும் இப்படித் தள்ளிவிடக் கூடாது.

உதாரணமாக "சாரி நான் வர லேட்டாயிடுச்சு. வழியில் ஒரு சின்னப் பிரச்சினை. தப்பா எடுத்துக்காதே!" என்பது ஒருவர் சொல்லும் செய்தியானால் பெரும்பாலானவர்கள் நீ என்றைக்கு நேரத்துக்கு வந்திருக்கிறே?" எனக்கென்று ஏதாச்சும் சாக்குக் கிடைக்கும்பா!" என்று பேச்சை திசை திருப்பிவிட்டு அந்தச் சின்னப் பிரச்சினையை விட்டு விடுவார்கள்.

நாம் இந்தத் தவறைச் செய்யக் கூடாது. "அதனாலென்ன பரவாயில்லை. ஏதோ பிரச்சினைன்னு சொன்னியே. அது என்னான்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" என்பதுதான் நம்முடைய அணுகுமுறையாக இருக்க வேண்டும். நீங்கள் கவனித்திருப்பீர்கள். கிராமத்துப் பிள்ளைகள் ஒரு விளையாட்டு விளையாடும். ஒரு குழந்தை மண்ணில் ஒரு குச்சியைப் புதைத்துவிடும். அது எங்கே இருக்கிறது என்று எதிரே உள்ள குழந்தை கையால் அழுத்தி மூடிக்கொள்ளும். மூடிய இடத்தில் அந்தக் குச்சி இருந்தால் வெற்றி.

உரையாடலிலும் இப்படித்தான், ஒன்றைச் சொல்லிக்கொண்டே வரும் போது கிளைச் செய்திகளையும் கப்பென்று அழுத்திக்கொள்ள வேண்டும். அதைப்பற்றி ஆர்வமாக விசாரிக்கவும் வேண்டும். அல்லது மனதிலாவது பதித்துக் கொள்ள வேண்டும்.

மையப்படுத்திச் சொல்லாத விடயங்களைக்கூட நாம் மனதில் வாங்கிக் கொள்வதில் சில நன்மைகள் இருக்கின்றன.

முதலாவதாக நாம் அவர்கள் சொல்வதை ஊன்றிக் கவனிக்கின்றோம் என்கிற மகிழ்ச்சியை மற்றவர்களுக்குத் தர முடியும், அட பேச்சுவாக்கில் சொன்னதை மனிதர் நன்றாக நினைவில் வைத்திருக்கிறாரே என்று பாராட்டுவார்கள்.

இரண்டாவதாக நாம் அவர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதைப் புலப்படுத்த ஒரு நல்ல வாய்ப்பு. உதாரணம் மகளுக்கு முடியலைன்னீங்களே இப்ப நல்லாயிருக்காளா?

மூன்றாவதாக நமக்குப் பயன்படக் கூடிய பல செய்திகள் அதில் இருக்கலாம். செவிச் செல்வத்தை இனி நன்கு பயன்படுத்திப் பார்ப்போமே!

**லேனா தமிழ்வாணன்**

# பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கான போட்டிப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## நுண்ணறிவு

P. Kamalthasan - SLPS
B.A (Cey), MEd (Hons) MA in Eco, PGDE,PGDM, SplTrd com
Deputy Principal (Stanley College)

நேரம் : 1 மணித்தியாலம்

● **பின்வரும் வினாக்களில் "...?..." அடையாளமிடப்பட்ட இடங்களில் வரவேண்டிய எண்களை அருகில் உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1) 118, 199, 226, 235, ...?... (..........)

2) 2, 20, 42, 68, 98, ...?... (..........)

3) 7, 15, 32, ...?... 138, 281 (..........)

4) 123, 234, ...?... 456, 567 (..........)

5) 1/3, 5/8, 11/5, 19/24 ...?... (..........)

6) 3,7, 15, ...?... 63 (..........)

7) 3, 15, 35, ...?...99, 143 (..........)

8) 3, 8, ...?... 24, 35, 48 (..........)

9)

| | | |
|---|---|---|
| 12 | 12 | 9 |
| 15 | 11 | 12 |
| 11 | 22 | ...?... |

(..........)

● **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் ஆங்கில எழுத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ள கணிதஞ்சார் கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஆங்கில எழுத்துக்கள் 1 தொடக்கம் 8 வரையான ஒரு எண்ணைக் குறிப்பிட முடியும். ஒவ்வொரு கூற்றும் சரியாக அமைவதற்காக வெற்றிடத்தினுள் இடமுடியாத எண்ணை அடைப்புக் குறிக்குள் இடுக.**

10. ....... × 4 = B (A - 4) (1) 7 (2) 8 (3) 1 (4) 6 (..........)

11. ....... × 6 = B + A + 9 (1) 2 (2) 3 (3) 1 (4) 4 (..........)

12. ....... × 5 = E + F + 6 (1) 3 (2) 2 (3) 1 (4) 4 (..........)

13. ....... + 29 = A × B (1) 13 (2) 1 (3) 4 (4) 3 (..........)

14. A × B= 3 × ...... (1) 4 (2) 9 (3) 5 (4) 7 (..........)

● **பின்வரும் வினாக்களுக்குரிய மிகச் சரியான விடையினை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

15) கபடிப் போட்டியில் மொத்தம் ஆறு கழகங்கள் பங்குபற்றின. ஒவ்வொரு கழகமும் மற்றைய ஒவ்வொரு கழகத்துடனும் இருமுறை போட்டியிட்டால் நடைபெற்ற மொத்தப் போட்டிகளின் எண்ணிக்கை? (..........)

16) $\sqrt{0.36}$ என்பதனால் குறிக்கப்படும் பெறுமானம் யாது? (..........)

17) பெட்டியில் 4 நீலம், 6 சிவப்பு, 5 பச்சை நிறங்களையுடைய கைக்குட்டைகள் உள்ளன. மூன்றுநிறங்களிலும் ஒவ்வொருகைக்குட்டையைப் பெட்டியிலிருந்து எடுப்பதற்குஆகக் குறைந்தது எத்தனைகைக்குட்டைகளைப் பெட்டியிலிருந்துஎடுக்க வேண்டும்? (..........)

18) அறுகோணி வடிவானகாணியில் ஒவ்வொருபக்கத்திலும் சமதூர இடைவெளியில் 11 தேக்கங்கன்றுகள் நடப்படுகின்றன. மொத்தமாகநடப்பட்டதேக்கங்கன்றுகள் எத்தனை? (..........)

19) சற்சதுரவடிவில் ஒருவரிசையில் ஆறு தோடம்பழங்கள் இருக்கும் வண்ணம் அடுக்கப்பட்டு,பின் இவற்றின் மேல் அடுக்குகளாக பிரமிட் வடிவில் அமைத்தால் இக்குவியலில் இருக்கும் தோடம்பழங்களின் எண்ணிக்கையாது? (..........)

● **பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

நீர் காணி அளவீடு செய்வதற்காகப் பின்வரும் சிலபொருட்களை வாங்குவதற்குப் புத்தகக் கடை ஒன்றிற்குச் சென்று களப்புத்தகம் ஒன்றை எடுத்தபோது அதன் விலை PSRQ எனவும், நாடா ஒன்றை எடுத்தபோது அதன் விலை SKINQ எனவும், பேனா ஒன்றை எடுத்தபோது அதன் விலை KPQM எனவும் குறிப்பிடப்பட்டிருந்தன. இவற்றிற்குரிய விலைகள் முறையே ரூ.18.75, ரூ.84.25, ரூ.41.50 என கடை உரிமையாளரால் கூறப்பட்டது.

20) அவ்வாறாயின் QPSN எனபொருளின் விலை குறிக்கப்பட்டிருந்தால் அதன் விலை யாது? (..........)

21) ஒரு பொருளின் விலை ரூ. 27.48 எனின் அதன் ஆங்கில எழுத்துக் குறியீடு யாது? (..........)

● **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள இரு சொற்களுக்குமிடையே இருக்கும் தொடர்புடைமையை ஒத்த தொடர்புடைமை இருக்கும் சொற்களைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

22) மழை : வெள்ளம்
(1) வரட்சி : பஞ்சம் 3) வெள்ளம் : சுனாமி
(2) காடு : காட்டுத்தீ (4) ஓட்டம் : வெற்றி
(..........)

23) கறையான் : புற்று
(1) கவிஞன் : எழுத்தாணி (3) கட்டுப்பாட்டாளர் :ஊழியர்கள்
(2) எழுத்தாளர் : நூல் (4) மருத்துவர் : நோயாளி
(..........)

24) ஆசிரியர் : மாணவர்
(1) மருத்துவர் : தாதி (3) கட்டுப்பாட்டாளர் : ஊழியர்கள்
(2) பெண் : ஆண் (4) பிக்கு : பிக்குணி

● **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் திருத்தமான விடையை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

25) அகலத்தின் இரு மடங்குநீளமுள்ள செவ்வகக் காணி ஒன்றின் பரப்பளவு $64800m^2$. அதன் நீளம் யாது? (..........)

26) குறித்த எண்ணினால் 1594, 1706, 1810 பிரிக்கப்படும் போது சமமீதி கிடைக்கும். பின்வருவனவற்றுள் அவ்வெண் யாது?
(1) 06 (2) 08 (3) 12 (4) 15 (..........)

27) இரு எண்களின் பெருக்கம் 60 ஆகவும் அவ்விரு எண்களின் கூட்டுத்தொகை 17 ஆகவும், அவ்விரு எண்களின் வித்தியாசம் 7 ஆகவும் இருப்பின் அவ்விரு எண்களும் யாவை? (..........)

28) ஒரு அரை வட்டத்தின் விட்டம் 14cm எனின் அதன் சுற்றளவு யாது? (..........)

29) திரு. வைகுந்தன் என்பவரின் பிறந்தநாள் விருந்தொன்றில் பங்குபற்றியோரில் 1/2 பகுதியினர் கோழி இறைச்சி உண்டனர். 1/3 பகுதியினர் ஆட்டிறைச்சி உண்டனர். 1/5 பகுதியினர் இருவகை இறைச்சிகளையும் உண்டனர். இவ்விருந்தில் பங்குபற்றியவர்களில் கோழி இறைச்சி மட்டும் உண்டோர் தொகையின் பின்னம் யாது? (..........)

● **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு வினாவிற்குமுரிய திருத்தமான விடையைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

ஒரு புகையிரத நிலையத்திலிருந்து ஒருமணித்தியாலயத்திற்கு ஒருதடவை ஒரு புகையிரதமாக A,B,C,D,E,F என்னும் ஆறு புகையிரதங்கள் புறப்படுகின்றன. அவற்றிடையே A,B,C ஆகியன கடுகதிப் புகையிரதங்கள். D,E,F ஆகியன சாதாரண புகையிரதங்கள். ரஞ்சனி, கல்யாணி, யமுனா, ரேவதி ஆகியோர் வெவ்வேறு புகையிரதங்களில் செல்கின்றனர். பின்வரும் நிகழ்ச்சிகள் உண்மையானவை.

- முதற்புகையிரதம் மு.ப 5 இற்குப் புறப்படுகிறது. இறுதிப் புகையிரதம் மு.ப 10 இற்குப் புறப்படுகின்றது.
- ஒவ்வொருபுகையிரதமும் வெவ்வேறுநேரங்களில் புறப்படுகின்றன.
- கடுகதிப் புகையிரதங்கள் ஒற்றை மணித்தியாலயங்களில் புறப்படுகின்றன.
- புகையிரதம் F இற்குப் பின்னர் புகையிரதம் B புறப்படும். அவற்றிற்கிடையே ஒரு புகையிரதம் மாத்திரம் புறப்படும்.
- கல்யாணி செல்லும் புகையிரதம் மு.ப 7 இற்குப் புறப்படுகின்றது. ரேவதி புகையிரதம் E இல் செல்கின்றார். அது மு.ப 10 இற்குப் புறப்படுகின்றது.
- ரஞ்சனியின் புகையிரதம் கல்யாணியின் புகையிரதத்திற்கு முன்பாகப் புறப்படுகின்றது. யமுனாவின் புகையிரதம் கல்யாணியின் புகையிரதத்திற்குப் பின்னர் புறப்படுகின்றது.

30) ரஞ்சினியின் புகையிரதம் புறப்பட்டநேரத்திற்கும் யமுனாவின் புகையிரதம் புறப்பட்டநேரத்திற்குமிடையே இருக்கத்தக்க இடைவேளையாது?

i) 2 மணித்தியாலயம் ii) 3 மணித்தியாலயம் iii) 4 மணித்தியாலயம்
இவற்றில் உண்மையானது.

(1) i மாத்திரம் (3) i, ii மாத்திரம்
(2) ii மாத்திரம் (4) i, ii, iii மாத்திரம் (..............)

31) பின்வருவனவற்றுள் புகையிரதங்கள் தினமும் புறப்படும் திருத்தமான ஒழுங்குவரிசையாது?

(1) C, D, B, F, A, E (3) A, D, B, F, C, E
(2) A, F, B, D, C, E (4) C, F, A, D, B, E (...............)

32) கல்யாணி புகையிரதம் A இல் சென்றால் பின்வருவனவற்றுள் எது உண்மை யாக இருக்கவேண்டும்?

(1) ரஞ்சினி புகையிரதம் C இல் செல்கின்றார்
(2) யமுனா புகையிரதம் B இல் செல்கின்றார்.
(3) D ஆனது மு.ப. 8 இற்குப் புறப்படுகின்றது.
(4) B ஆனதுமு.ப. 9 இற்குப் புறப்படுகின்றது. (..............)

33) மு.ப 6 இற்குப் புறப்பட இயலாத புகையிரதங்கள் அடங்கியதொகுதி

(1) D, F, C (2) D, A, F (3) C, F, E (4) C, A, B, E (...............)

34) நேர அட்டவணையை மாற்றிப் புகையிரதங்கள் புறப்படும் இடைவேளையை 2 மணித்தியாலயங்களாக அமைத்ததால் ரேவதி பி.ப 3 இற்கு இறுதிப் புகையிரதம் E இல் புறப்படுவார். அப்போது மேற்குறித்த எல்லாத் தகவல்களும் அவ்வாறே இருந்தால் பின்வரும் கூற்றுக்களில் ஒன்றைத் தவிர ஏனையவை உண்மையாக இருக்கலாம். பொய்யான கூற்றுயாது?

(1) கல்யாணி புகையிரதம் B இல் செல்கின்றார்.
(2) யமுனாவின் புகையிரதம் மு.ப 9 இற்குப் புறப்படுகின்றது.
(3) யமுனாவின் புகையிரதம் மு.ப. 11 இற்குப் புறப்படுகின்றது.
(4) யமுனாவின் புகையிரதம் பி.ப 1 இற்குப் புறப்படுகின்றது. (...............)

● பின்வரும்வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைஅடிப்படையாகக் கொண்டன. தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் 1 தொடக்கம் 9 வரையுள்ள முழு எண் பெறுமானம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சொல்லிலும் உள்ள எண்களின் கூட்டுத்தொகை சொல்லுடன் தரப் பட்டுள்ளது.

LEAST = 17, TEASE = 19, FEET = 20, ATE = 12
TEAR = 20, SUPEER = 30 RUSE = 22 SEAT = 14


பொருத்தமான கணித்தல்களைப் பயன்படுத்தி தரப்பட்டுள்ள வினாக்களுக் கான விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

35) S எழுத்துக்குரிய எண் பெறுமானம் யாது? (............)

36) L எழுத்துக்குரிய எண் பெறுமானம் யாது? (............)


● பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் வேறுபட்டுக் காணப்படும் உருவின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

37)




(1) (2) (3) (4) (5)
(............)

38)




(1) (2) (3) (4) (5)
(............)

39)



(1) (2) (3) (4) (5)
(............)

● பின்வரும் வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள நான்கு வரிப்படங்கள் மற்றும் அவை தொடர்பானதகவல்களைஅடிப்படையாகக் கொண்டவை



(1) (2) (3) (4) (5)

➢ இங்கே ஒவ்வொரு உருவிலும் உள்ள மூன்று வட்டங்களினால் குறித்த மூன்று தொடைகள் வகை குறிக்கப்படுகின்றன.

➢ அந்த ஒவ்வொரு தொடை மற்றும் வட்டங்களின் பருமன்களிடையே எதுவித தொடர்புகளும் இல்லை.

➢ ஒவ்வொரு உருவத்திலும் உள்ள மூன்றுவட்டங்களும் இடைவெட்டும் முறைக் கேற்ப உரிய மூன்று தொடைகளுக்கிடையிலான தொடர்பு வகை குறிக்கப் படுகின்றன.

● **இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொருவினாவின் கீழேயும் தரப்பட்டுள்ள மூன்று தொடைகளுக்கிடையே காணப்படும் தொடர்பை மிகவும் நல்லமுறையில் வகை குறிக்கக்கூடிய உருவத்தைத் தெரிவு செய்து அதற் குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

40)

41) ஒற்றை எண்கள், மூன்றின் மடங்குகள், முழு எண்கள் (............)

42) ஆசிரியர்கள், தரம் 1 ஆசிரியர்கள், தரம் 3 ஆசிரியர்கள். (............)

● **பின்வரும் வினாக்கள் குறித்தவொருபரீட்சைவினாத்தாள் ஒன்றிற்குப் புள்ளிகள் வழங்கப்படும் முறை தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப் படையாகக் கொண்டவை.**

➢ 50 வினாக்களைக் கொண்டமைந்த நுண்ணறிவு வினாத்தாள் ஒன்றிற்குரிய மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வினாவிற்கும் 3 புள்ளிகள் என்ற வாறு 150 புள்ளிகளாகும்.

➢ அந்த வினாத்தாள்களுக்கு புள்ளிகளை வழங்கும் போது பிழையான விடையை வழங்கும் ஒவ்வொரு வினாவிற்கும் 2 புள்ளிகள் படியும், விடை எழுதாத ஒவ்வொரு வினாவிற்கும் 1 புள்ளிபடியும் குறைக்கப்படும்.

**இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள் ளபுள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

43) எல்லா வினாக்களுக்கும் விடையளித்திருந்த மாணவியொருவர் 7 விடைகளுக்கு தவறாகஅளித்திருப்பின் அந்த மாணவி பெற்றமொத்தப் புள்ளிகள் எவ்வளவு?

(1) 100 (2) 115 (3) 120 (4) 122 (............)

44) இரண்டு வினாக்களைத் தவிர மற்றைய சகல வினாக்களுக்கும் விடையளித் திருந்தம ாணவன் ஒருவன் பெற்ற மொத்தப் புள்ளி 102 எனின் அந்த மாணவன் சரியாக விடையளித்திருந்த வினாக்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(1) 30 (2) 35 (3) 40 (4) 45 (............)

45) 7 வினாக்களுக்கு விடை எழுதாது இருந்த மாணவன் ஒருவன் 8 வினாக்களுக்கு தவறுதலாக விடையளித்து இருப்பின் அந்த மாணவன் பெற்ற மொத்தப் புள்ளிகள் எவ்வளவு?

(1) 75 (2) 78 (3) 80 (4) 82 (............)

● **பின்வரும் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள இரகசியக் குறியீட்டின் தரவுகளுக்கமைய விடையளிக்குக.**

A B C D E F G H I J K L M N O P Q R S T U V W X Y Z
BLACK என்பது 1/13, 6/13, 1/26, 3/26, 11/26 எனவும்
MAIZE என்பது 1/2, 1/26, 9/26, 1, 5/26 எனவும் இரகசியக் குறியீட்டில் எழுதப்படுகிறது.

**வழங்கப்பட்ட குறியீடுகளினடிப்படையில் ஏனைய எழுத்துக்களுக்கான குறியீடுகளை உய்த்தறிந்து விடையளிக்குக.**


46) MANAGEMENT என்பதைக் குறிக்கும் குறியீடு எது?

..........................................................................

47) 8/13, 9/13, 15/26, 11/13, 9/26, 7/13, 31/26, 5/26 என்பதன் சொல் யாது?

..........................................................................

● **பின்வரும் வினாக்கள் சதுரமுகித் தாயக்கட்டையொன்றின் முகங்களுக் கிடைப்பட்ட இலக்கங்களை வேறுவேறு நிலைகளில் காட்டுகின்ற கீழ்வரும் படங்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றினடிப்படையில் அதன் கீழ்க் கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமானவிடையினை அருகிலுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.**




48) எழுத்து C இற்கு எதிர்ப்பக்கத்தில் வரக்கூடிய எழுத்து யாது? (............)

49) எழுத்து B இற்கு எதிர்ப்பக்கத்தில் வரக்கூடிய எழுத்து யாது? (............)

50) எழுத்து A இற்கு எதிர்ப்பக்கத்தில் வரக்கூடிய எழுத்து யாது? (............)

# கோத்தபாயவை சவாலாக கருதவில்லை ரணிலே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்

## ஐ.தே.க.உறுதியான நிலைப்பாடு

(கொழும்பு)

ஐ.தே.கவின் தலைவரையே 2020 ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக களமிறக்குவோம் என தெரிவித்த அக்கட்சியின் செயலாளரும் கல்வி அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் கோத்தபாயவை சவாலாக கருதவில்லை எனவும் தெரிவித்தார்.

ஐ.தே.க.ஊடக மையத்தை ஆரம்பித்து வைக்கும் வகையில் அக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், "ஐக்கிய தேசியக் கட்சி திருடர்களை பாதுகாப்பதாக கூறப்படுகின்றது. ஆனால், எமக்கு அவ்வாறான அவசியம் கிடையாது. அதற்காக, திருடர்கள் என்று நிருபிக்கப்படாதவர்களை திருடர்கள் என்று முத்திரை குத்துவதற்கும் நாம் தயாரில்லை.

ஐ.தே.கவின் தலைவரையே 2020 இல் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது எதிரணி வேட்பாளராக களமிறங்க போவதாக கூறப்படும் கோத்தபாய ராஜபக்ஷவை நாம் சவால் என்ற கருதவில்லை.

2015ஆம் ஆண்டில் பொதுவேட்பாளருக்கு எதிராக களமிறங்கிய வேட்பாளரையும் நாம் சவாலாக கருதவில்லை என்று கூறினோம். அதன்படி தேர்தலிலும் வெற்றி பெற்றோம்." என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 'ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ' சு.க.புதிய செயலர் தடுமாற்றம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய பொதுச் செயலர், ஊடகவியலாளர்களுடனான தனது முதலாவது சந்திப்பின் போது, வாய் தடுமாறி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், கட்சியின் புதிய பொதுச்செயலராக பேராசிரியர் ரோகண லக்ஸ்மன் பியதாஸ நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் ஊடகவியலாளர்களை அவர் சந்தித்த போது, 'ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி புதிய அரசாங்கத்தை அமைக்கும்" என்று, கூறினார்.

பின்னர் தனது தவறை விளங்கிக் கொண்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் என்று திருத்திக் கொண்டார்.

நாட்டின் தேசிய நலன்களை பாதுகாக்கும் தொலை நோக்குடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்னோக்கி நடைபோடும் என்றும் அவர் கூறினார். (இ-7)



நெல்லியடி மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்றுக் காலை நெல்லியடியில் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு பிளாஸ்ரிக் பொருட்களையும் பொலித்தீன் பைகளையும் அகற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

(படங்கள்-பகாலிங்கம்)

# '100 நாள் வேலைத்திட்டம் ஐ.தே.கவினுடையதல்ல'

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டம், ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ் ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட விடயமல்ல எனவும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கிய அனைவரும் இணைந்து உருவாக்கிய ஒரு திட்டமெனவும், ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும், கட்சியின் பிரசார பிரிவின் பிரதானியுமான அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

"மைத்திரியின் தலைமையிலான அரசாங்கம் 100 நாட்களில் புதிய நாடு" என்ற தொனிப்பொருளில் பொது வேட்பாளருக்கு ஆதரவளித்த பொது மற்றும் சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் ஆகியோர் இணைந்து உருவாக்கிய ஒரு விடயமே 100 நாள் வேலைத் திட்டமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் தலைமையகமாக சிறிகொத்தாவில், கட்சியின் ஊடக நடவடிக்கைப் பிரிவை, நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர் "ராஜபக்ஷ குழுவுடன் சிலர் முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தமையால், 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் வழங்கப்பட்டிருந்த வாக்குறுதிகளில் பலவற்றை, நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

எவ்வாறாயினும் தகவலறியும் சட்டம் மற்றும் 19 ஆவது திருத்தச் சட்டம் உள்ளிட்டவை நிறைவேற்றப்பட்டமை மகிழ்ச்சிக்குரியது.

ஐக்கிய தேசியக் கட்சியானது, ராஜபக்ஷ அரசாங்கத்தை 2015 ஆம் ஆண்டில் வெற்றிகொண்டதும் பெருமைக்குரிய விடயமாகும். பொது வேட்பாளரை களமிறக்கிய காரணத்தினால் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதி என்ற கௌரவம் கிடைத்தது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1434

Search for people, places and things Nagendram Home

### அகல்யா

யாரையும் தெருவில் கிடக்கும் காகிதமாக நினைத்துவிடாதே... நாளை



அது பட்டமாகப் பறந்தால் நீயும் சற்று நிமிர்ந்துதான் பார்க்க வேண்டும்...!

### அமுதா

வாழ்க்கையில் தாமாக உயர்ந்தவர் என்று யாரும் இல்லை....



நீ உழைக்கத் தயாராக இருந்தால் சிலர் உதவத் தயாராக இருப்பர்...!

### அன்பழகி

இல்லாதவர்கள் இல்லை எனும் போது கொடுத்தால் நீயும் கடவுள்தான்



கடவுளை கோவிலில் தேடாதே.. உன்னில் உருவாக்கித் தேடு...!

### ஆனந்தி

உன்னைவிட திறமைசாலிக்குக் கை தட்டுவதைவிட



அவனையும் உனக்காகக் கைதட்டச் செய்வதுதான் உண்மையான திறமை

### ஆஷிதா

தந்தையின் நிலையை உணர்ந்த பிள்ளைகள் தான்



தமக்குப் பிடித்தவற்றையும் தியாகம் செய்து வாழ்கின்றனர்

### ஆர்த்திகா

முயல்பவனுக்கு தட்டிக்கொடு! இயலாதவனுக்கு விட்டுக்கொடு



கேட்பவனுக்குச் சொல்லிக்கொடு! வாழ்வில் வீழ்ந்தவனை தூக்கிவிடு!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் இனங்களுக்கிடையில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படலாம்

## அமைச்சர் மங்கள சமரவீர எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் இனங்களுக்கிடையில் நீடித்து நிலைக்கக்கூடிய நல்லிணக்கம் ஏற்படுத்தப்படாவிட்டால் மீண்டுமொரு யுத்தம் ஏற்படலாம் என்று அமைச்சர் மங்கள சமரவீர எச்சரித்துள்ளார்.

கொழும்பு சிங்கள ஊடகமொன்றின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

எமது அரசாங்கத்தின் ஜனநாயகச் செயற்பாடுகள் இலங்கையில் இதுவரை எந்தவொரு அரசாங்கத்திலும் வெளிக்காட்டப்படாத அளவிற்கு சிறப்பாகக் காணப்படுகின்றது.

பொதுமக்கள் சுதந்திரமாக அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர். அது அரசாங்கத்தின் பலவீனம் என்று யாரும் நினைக்கக்கூடாது. ஜனநாயகத்துக்கு அரசாங்கம் மதிப்பளித்து எதிர்க் குரல்களுக்கும் இடமளிக்கின்றது.

ஜனநாயகம் தொடர்பாக இந்த அரசாங்கத்துக்கு 100 இற்கு 100 புள்ளிகளை வழங்கலாம். அந்தளவுக்கு ஜனநாயகம் மற்றும் கருத்து சுதந்திரத்தை பாதுகாத்துள்ளோம்.

அதேபோன்று இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமும் கட்டியெழுப்பப்பட வேண்டும். இல்லையேல் மீண்டுமொரு யுத்தத்தை நாடு எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



கச்சாய் தெற்கு பாதாள வைரவர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. உற்சவங்கள் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும். (படம்:- சுபேசன்)

# ரொஸ்மிட் பிளேஸில் தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு. ரொஸ்மிட் பிளேஸில் உள்ள ஆடை உற்பத்தி நிறுவனத்தில். நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ. கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என. தீயணைப்புச் சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 4:30 மணியளவில். இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. விரைந்து செயற்பட்ட தீயணைப்புப் படைப் பிரிவினர். கடுமையான முயற்சிகளுக்குப் பின்னர். தீயை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். (இ-7)

# மகிந்தவை பிரதமராக்க வேண்டும்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவை பிரதமராக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் இதயமாற்று அறுவைச்சிகிச்சை செய்து கொண்ட பெண்ணுக்கு வீடு வழங்கல்

(கொழும்பு)

இலங்கையில் முதன் முறையாக இதயமாற்று அறுவைச்சிகிச்சை மேற்கொண்ட பெண்ணுக்கு இலவசமாக வீடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி இலங்கை வரலாற்றில் முதன்முறையாக 34 வயது புஷ்பாகுமாரி இதயமாற்று சிகிச்சை செய்து கொண்டார்.



புஷ்பாகுமாரியின் ஆரோக்கியத்தை கருத்திற் கொண்டு சுவாத்தியமான வீடு ஒன்றை வழங்குமாறு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதனடிப்படையில் நாச்சாதுவ பிரதேச செயலர் சரத் விஜேசிங்க. உடனடியாக புஷ்பாகுமாரிக்கு வீடு ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

அதற்கமைய புதிய வீடு ஒன்று புஷ்பாகுமாரிக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக மேற்கொள்ளப்பட்ட இதயமாற்று சத்திர சிகிச்சை வெற்றியளித்தமை. வைத்தியத்துறையில் ஏற்பட்ட பாரிய முன்னேற்றமாக கருதப்படுகிறது. (இ-7)

# இராணுவம் சிரமதானம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மற்றும் பொது மைதான வளாகத்திலும் நேற்று முன்தினம் சாவகச்சேரி 523 ஆவது படைப் பிரிவினரால் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


**எண் 1 (சூரியன்)**
**(ஆளும் வேந்தர்கள்)**

**பெயர் எண் 19**

வயது ஏற ஏற சிகரம் போல வாழ்க்கையில் சிறப்புகளைப் பெறச் செய்யும். என்றுமே அஸ்தமிக்காமல் விண்ணுலகின் இளவரசன் போல வாழச் செய்யும். கருத்தொருமித்த நண்பர்களை உருவாக்கும். வாழ்க்கையில் மேன்மைகள் கூடிக் கொண்டேயிருக்கும். காரிய சித்தி வாய்ந்த எண்ணாகும். பெரிய பிரமுகராக்கிவிடும். நல்ல வாழ்க்கைத்துணை அமையும். உடல் பலத்துடன் முதுமையிலும் இளமையாகக் காட்சியளிப்பார்கள். உழைப்பால் உயரும் உத்தமர்கள். குறையாத செல்வத்துடன் இளைஞரைப் போலவே சுறுசுறுப்புடன் திடமான வாழ்க்கை வாழ்வார்கள். சுகபோக வாழ்க்கையில் நேர்மையே இவர்களின் வெற்றிக்கு ஆதாரம். தமது கடைசிக் காலம் வரை நல்ல ஆரோக்கிய பலத்துடன் வாழ்வார்கள். பிறருக்கு எந்தத் தீங்கும் செய்யாமையும் தீய காரியத்தில் ஈடுபடாதிருத்தலும் மேன்மையைத் தரும். குறையாத செல்வம், குன்றாத போக பாக்கியத்தோடு இயற்கையாகவே நேர்மையான குணத்தோடு வாழ்வார்கள். கட்டுப்பாடுகளுடன் வாழ்வார்கள். பெரும் புகழ் கிட்டும். நல்ல உயர்ந்த பதவிகள் கிடைக்கும். பொதுவாழ்வில் பிரகாசிப்பார்கள். ஆன்மீக சிந்தனையும் அறநெறிக் கொள்கையும் கொண்டவர்கள். பல நண்பர்களைப் பெற்றிப்பார்கள். கட்டுப்பாடு மிக்க வாழ்க்கையில் செல்வ விருத்தியுடன் வாழ்வார்கள்.

**பெயர் எண் 28**

ஆரம்பத்தில் வெகு வேகமான முன்னேற்றத்தைக் கொடுக்கும். முடிவில் சோகமே உருவான வாழ்க்கையாக மாற்றிவிடும். எக்காரியத்தில் ஈடுபட்டாலும் போட்டி, சிரமங்கள், எதிர்ப்புகள் உருவாகிக் கொண்டே இருக்கும். வாழ்க்கையை திரும்பத் திரும்பத் தொடங்கும் நிலை உருவாகும். மிக வேகமான முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவதற்குள் எப்படி இழந்தோம் என்று தெரியாவண்ணம் அனைத்தையும் இழக்கச் செய்யும். அனைத்தையும் ஜப்தி செய்யும் நிலைக்கு ஆளாக்கி விடும். பெருள் இழப்பு நேரும். துன்பங்கள் புடைசூழும். நண்பர்கள், உறவினர்கள் பகையாளிகளாக மாறுவார்கள். நன்மை என்று நினைத்த காரியங்கள் தீமையில் சென்று முடிவடையும். சோகமே உருவாக வாழ்க்கைப் பாதையை திசை திருப்பிவிடும். நம்பிக்கை வீணாகும். நண்பர்களால் தீமையே வந்து சேரும். பெருத்த நஷ்டம் உண்டாகும். வாழ்க்கையில் நீங்காத சோக வடுக்களை நினைத்து நினைத்து ஏங்கும் வண்ணம் உயிர் பறிகொடுத்தலை ஏற்படுத்தும். கெட்ட பெயர், அவமானங்கள் நேரும். சூழ்ச்சிகள் எந்த நேரமும்



**விநாயகராமன்**

கைகோர்த்து நிற்கும். கஷ்டப்பட்டுச் சேர்த்த பொருளையெல்லாம் ஒரே நாளில் காரணமின்றி இழக்க நேரிடும். சொத்துக்கள் அனைத்தும் திவாலாகும். சூழ்ச்சிக்கு அடிபணிய வேண்டி இருக்கும். தீய சக்திகள் ஆட்டிப் படைக்கும் துரதிர்ஷ்ட எண்ணாகும். விரைவான முன் னேற்றம் கண்டு ஏமாற வேண்டாம். இந்த எண்ணின் நன்மையை விட தீமையே அதிகம் மறைந்திருக்கும்.

**பெயர் எண் 37**

மிகுந்த ஜனவசீகரம் மிக்க எண்ணாகும். நடை, உடை, பாவனைகளில் கவர்ச்சிகரமாக காட்சியளிப்பார்கள். பேச்சில் பலம் கூடும். வாக்கு பிரசித்தி பெறும். கலைகளில் மலைபோல உயரச் செய்யும். வசீகரத் தோற்றத்துடன் காட்சியளிப்பார்கள். தனது தகுதிக்கு மீறிய பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும். நண்பர்களால் முதலுடன் தொழில் தொடங்க வாய்ப்புகள் வந்தமையும். சாதாரண மனிதனை மிக வேகமாக முன்னேற்றி சக்கரவர்த்தி ஆக்கிவிடும். உயர்ந்த உன்னதமான நிலைக்குக் கொண்டு செல்லும். அற்புதமான எண்ணாகும் மிக உயர்ந்த அந்தஸ்தான வாழ்க்கை அமையும். காதலில் வெற்றியைக் கொடுக்கும். ஆண், பெண் இருபாலாரிலும் சிறப்பான நண்பர்கள் அமைவார்கள். பெண்ணுக்கு ஆணாலும் ஆணுக்கு பெண்ணாலும் பல நன்மைகள் கிடைக்கும். காதல் மன்னர்கள் என்று பெயர் பெறுவார்கள். காதலுக்கு இலக்கணம் எழுதத் தெரிந்தவர்கள், காதலில் கைதேய்ந்தவர்கள், பெரிய முதலுடன் கூடியவர்கள் தானாக முன்வந்து தொழில் தொடங்க உதவி செய்வார்கள். பலவிதமான முயற்சியாலும் பொன், பொருள் சேரும். சுகமான வாழ்க்கை அமையும். ஆட்சி செய்யும் எண்ணத்தைத் தூண்டும். ஆட்சிபீடத்தில் அமரச் செய்து அழகு பார்க்கும். இளமையில் போராடி இறுதி வாழ்க்கையில் வளமாக வாழச் செய்யும். செல்வச் செழிப்பான, வசதியான வாழ்க்கை அமையும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்டங்களை உருவாக்கும். அதிர்ஷ்டப் பரிசுகள் கிடைக்கும். தொழில் மேன்மை, எதிர்பாராத வெற்றிகள் கிடைக்கும். சாதாரணமானவருக்கு வெற்றியையும் மேன்மையடைந்தவருக்கு தடைப்பட்டு மீண்டும் வெற்றியைக் கொடுக்கும்.

(தொடரும்....)

# உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்–2018

# தேர்தல் முறையின் குறை நிறைகள்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர் (Ph.D) Durham
முன்னாள் துணைவேந்தர்

புதிய கலப்புத் தேர்தல் குறித்து எதிரான, சார்பான கருத்துக் களை இங்கு நோக்குவோமா?

(1) இத்தேர்தல் முறையில் பெரும்பாலான சந்தர்ப்பங்க ளில் எந்தக் கட்சியும் சபை யில் பெரும்பான்மையை பெற முடியாத நிலை இருப்பதால் நிலையான ஆட்சியை வழங்க முடியாத நிலை காணப்படுகி ன்றது என்று கூறப்படுகின் றது. விகிதாசாரத் தேர்தல் முறை யில் ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளுக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் கிடைக்கின் றது. இதுதான் உண்மையான ஜனநாயக நிலை.

பெரும்பான்மை வரக்கூடிய தாக வேறு முறைகள் அமுல் செய்யும் போது ஒரு பிரிவின ரின் உண்மையான பிரதிநிதித் துவத்தைக் குறைத்து பெரிய கட்சிகளுக்கு கூடிய பிரதிநிதி த்துவம் கிடைக்க வழி செய்யப் படுகிறது. புதிய தேர்தல் முறை யில் போனஸ் ஆசனங்கள் இல்லாதிருந்தாலும் பெரிய கட்சிகள் பெற்ற விகிதாசார அங்கத்தவர் எண்ணிக்கையா லும் பார்க்க தொங்கு ஆசனங் கள் மூலம் கூடிய நன்மைக ளைப் பெற்றுள்ளன.

மேலும் உள்ளூர் மட்ட அர சியலில் கூட்டு ஆட்சி வரவேற் கத்தக்கது. இதனால் பல கட்சிகள் ஒன்றிணைந்து தமது பிரதேசத்தை நிர்வகிக்கலாம். அபிவிருத்தி செய்யலாம். அதிக வாக்குகள் பெற்ற கட்சி ஆட்சிய மைக்க வழி செய்யக்கூடிய கட்ட வரைபு தேவையாகவுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலி லும் மாகாணசபைத் தேர்தலி லும் 5 வீதம் வெட்டுப்புள்ளி முறை இருக்கின்றது. அதாவது 5 வீதத்திற்கு குறைந்த வாக்கு கள் பெற்ற கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்களின் வாக்குகள் கவனத்திற்கு எடுக்கப்படுவதில்லை.

மேலும் முன்னைய உள்ளூ ராட்சி தேர்தல் முறையில் கூடிய வாக்குகள் பெற்ற கட்சிக்கு 2 போனஸ் ஆசனங்கள் கொ டுக்கப்பட்டன. மாகாணசபைத் தேர்தலும் கூடுதலாக வாக்குக ளைப் பெறும்கட்சிக்கு 2 போனஸ் ஆசனங்கள் கொடுக்கும் முறையும் இருக்கின்றது.

இத்தகைய செயற்பாடுகள் முதன்மையாக வரும் கட் சிக்கு மேலதிக பிரதிநிதித்து வம் கிடைக்கின்றது. இதன் மூலம் ஸ்திரமான ஆட்சி அமைக்க வழி பிறக்கிறது என்று சொல்லப்பட்டாலும் இது ஜனநாயகம் அல்ல. ஒவ் வொரு கட்சியும் சுயேட்சைக் குழுவும் தாம் தாம் பெற்ற வாக்குகள் எண்ணிக்கைக்கு ஏற்பவே அங்கத்தவர்கள் எண் ணிக்கை இருக்கவேண்டும்.

புதிய கலப்புத் தேர்தல் முழுமையான ஜனநாயகப் பணியைக் கொண்டுள்ளது. இங்கும்கூட வட்டாரங்களில் பெற்ற வெற்றிக்கு ஈடாக விகிதாசார வாக்குகள் இல்லா விட்டால் மேலதிகமான ஆசனங் களை வைத்திருக்க இடமளிக் கப்பட்டுள்ளது. இது முழுமை யான ஜனநாயகம் இல்லை. மேலதிகமான வட்டார அங்க த்தவர்கள் இருக்கும் நிலை ஒரு கட்சிக்குச் சாதகமான நிலை ஏற்படுமாயின் மற்றக் கட்சி கள் பாதிக்கப்படாது அவர்களு க்கும் உரிய பிரதிநிதித்துவம் விகிதா சாரப் பிரிவில் வழங்க வேண்டும்.

வட்டார ரீதியில் அங்கத்த வர்களைத் தெரிவு செய்யப் படும் முறை பிரதேச அபிவிரு த்தியை முன்னெடுக்க உதவும். மேலும் அங்கத்தவர்களின் பொறுப்புக்கூறல் கடமையை உறுதி செய்யும்.

முன்னைய தேர்தல் முறை யில் காணப்பட்ட விருப்பு வாக்கு முறையில் ஒரே கட்சியில் போட்டியிடும் அபேட்சகர்கள் மத்தியில் போட்டி, பொறாமை, சண்டை சச்சரவு ஏற்படுவது தவிர்க்க முடியாது இருந்தது.

இம்முறை நீக்கப்பட்ட பிறகு நடைபெற்ற தேர்தலில் உட்கட்சி பூசல் இடம்பெற வில்லை. எனினும் தேர்தல் முடிந்த பின்னர் விகிதாசாரப் பட்டியலில் இடம்பெற கடும் போட்டிகள் ஏற்பட்டன. இதனால் கட்சிக்குள் கடும் பிரச்சினைகள் எழுந்தன. கட்சிக்குள் குழுக்கள் உருவா கின. கட்சிச் செயலாளர்கள் அதிகாரம் மிக்கவராக மாறி னர். ஒருபக்கத்தில் பாராட்டுக ளும் மறுபக்கத்தில் கடும் விமர்சனங்களும் எதிர்ப்புக் களும் காணப்பட்டன.

விருப்பு வாக்குமுறை ஒழி க்கப்பட்டதால் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டுள்ளது. ஒரு வாக்காளர் தான் விரும்பும் கட்சியைத் தெரிவு செய்யும் உரிமை இருந்த பொழுது தான் விரும்பும் அபேட்சகரை விகி தாசாரப் பட்டியலில் இருந்து தெரிவு செய்ய முடியாதுள்ளது.

கட்சி விகிதாசாரப் பட்டிய லில் முன்னுரிமை அடிப்படை யில் இல்லாதிருப்பதுவும் வட்டாரங்களில் தோல்வியடை ந்தவர்களும் விகிதாசார நியம னங்கள் மூலம் அங்கத்துவத் தைப் பெறக்கூடியதாக இருப் பதுவும் நிலைமை மேலும் சிக்கலாக்கியுள்ளது. கட்சிகள் விகிதாசார முறையில் நியம னம் அங்கத்தவர்களைத் தெரிவு செய்ய நீண்டகாலம் எடுத்தது இதற்குச் சான்றாகவுள்ளது.

மேலும் கட்சிகள் சுழற்சி முறையில் பலருக்கும் பிரதி நிதித்துவம் கொடுப்பதாக வாக் குறுதி அளித்திருப்பதனால் நியமிக்கப்பட்டவர்கள்கூட தங்களுடைய பதவிக் காலம் ஒரு வருடமோ இரண்டு வரு டமோ என எண்ணி சபை நடவடிக்கைகளில் உற்சாகமா கப் பங்குகொள்ளாதும் அபி விருத்தியில் நாட்டம் கொள் ளாதும் இருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

இதனால் அங்கத்தவராக வேண்டும் என விரும்புகிற வர்கள் கட்சிச் செயலாளருக்கு அவரைத் திருப்திப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு தங்களது சுய கௌரவம் மற் றும் கொள்கைகளில் இறுக்க மாக இருக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

விருப்பு வாக்குமுறை சிக்க லாக இருந்தாலும் அதை நீக்கி யது ஒரு பிரஜையின் அடிப் படை உரிமையை பறித்துள் ளது, ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரே கட்சி அபேட்சகர்களு க்கிடையே காணப்பட்ட சிறு பிரச்சினைகளை தீர்க்க எடுத்த விருப்பு வாக்கு நீக்கம் இன்று கட்சிகளுக்குள் பிரச்சினை யைத் தோற்றுவித்ததுடன் கட்சிகளின் செயலாளர்கள் அதிகாரம் மிக்கவர்களாக மாற்றியது ஜனநாயகம் அல்ல. மேலும் மக்களின் அடிப்படை உரிமையை பறித்ததும் ஜனநா யகமல்ல.

விகிதாசாரப் பட்டியலில் வெவ்வேறு துறைகளில் புலமை பெற்றவர்கள் நியமிக்க ப்பட்டிருக்க வேண்டும். திண் மக்கழிவு அகற்றல், வீட்டு வசதி கள், சிறுவர்த்தகம், சந்தை கள், போக்குவரத்து, சமூக வலு வூட்டல், முன்பள்ளி போன்ற துறைகளில் புலமையாளர்கள் விகிதாசாரப் பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலான சபைக ளில் வட்டார ரீதியிலும் விகி தாசாரப் பட்டியல் காணப்ப டும் பெயர்களில் மிகவும் அதிக மானவை. சாதாரண அரசியல் வாதிகள், விகிதாசாரப்பட்டி யல் மூலம் தகுதியானவர்கள், வெவ்வேறு துறைகளில் புல மையானவர்களை பயன்படு த்த வசதி செய்து கொடுத்தும் இவ்வசதியை அரசியல் கட்சி கள் நன்கு பயன்படுத்தவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போதைய உள் ளூராட்சி அங்கத்தவர்கள் எண்ணிக்கையை பொருளா தார ரீதியில் நாடு தாங்காது என் றும் அடுத்த தேர்தலில் இத் தொகை குறைக்கப்பட வேண் டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அங்கத்தவர்க ளின் எண்ணிக்கை 8700 இற்குக் கிட்டியதாக இருக்கின்றது. 1991 ஆம் ஆண்டுக்கு முன்பு மாநகரசபை, நகர சபை, பட் டிண சபை, கிராம சபை ஆகிய நான்கு சபைகளிலும் இருந்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை 8800 ஆக இருந்துள்ளது. ஆனபடியால் இன்றைய 8700 அங்கத்தவர்கள் கூடிய தொகை யெனச் கூறமுடியாது. இல ங்கை இன்று நடுத்தர வருமா னம் கொண்ட நாடு. மேலும் மக்கள் தொகை 22 மில்லிய னாக இருக்கின்றது.

உள்ளூராட்சி சபைகளின் அங்கத்தவர்களை நன்கு பயன் படுத்தினால் கிராம மட்டத்தில் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும். அடிமட்ட மக்களின் தேவைகளை இனங்காணல், அபிவிருத்தி செய்தல், மக்க ளைப் பல்வேறு துறைகளில் விழிப்புணர்வை ஏற்படு த்தல், சமூக வலுவூட்டல் மற்றும் திண்மக் கழிவு, நகர அழகு மேம்பாடு போன்ற துறைக ளில் இவர்களது சேவையை நன்கு பயன்படுத்த முடியும்.

இவர்களை கிராம மட்டத் தில் தலைமைத்துவத்தை வளர் க்க பெரும் பங்களிப்பு செய்ய முடியும். இதன்மூலம் மாவட் டம், மாகாணம், தேசிய மட்ட அரசியலில் பங்களிக்கக்கூடிய தலைவர்கள் உருவாக வழி வகுக்க முடியும். இன்று உள் ளூராட்சி சபைகளில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்கள் எண்ணிக்கை நாட்டிற்கு உயர் வானதல்ல. அவர்களை எவ் வாறு பயன்படுத்த முடியும் என் பதே முக்கிய பிரச்சினையாகும்.

பெண்களுக்குக் கொடுக்கப் பட்ட 25 வீதமான பிரதிநிதித் துவம் முற்போக்கானதும் இன் றைய காலத்தேவையை பூர்த்தி செய்கின்றதென்றும் பலரா லும் பாராட்டப்படுகின்றது.

எனினும் நியமிக்கப்பட்ட பெண்கள் பலர் அரசியல் அல்லது உள்ளூராட்சி செயற்பா டுகளில் அனுபவம் அற்றவர் கள் என்றும் பொதுவாழ்வுக்கு அவர்கள் பயிற்றப்படவில்லை என்றும் கட்சிகள் தேர்தல் சட் டத்தை நிறைவேற்றுவதற்காக தங்களுக்குத் தெரிந்த உடன் பட்ட பெண்களை ஒரு சம்பிர தாய முறையாக நியமித்திருக் கின்றார்கள் என்று குறை கூற ப்படுகின்றது. இதில் ஓரளவு உண்மையிருப்பினும் முதல் முறையாதலால் போதியளவு பெண்கள் வெளிப்படையாக உள்ளூராட்சித் தேர்தலில் பங்குகொள்ள வெளிவராத நிலையில் இத்தகைய தந்தி ரோபாயம் கட்சிகளால் கடைப் பிடிக்க வேண்டியிருந்தது. தேர் தலின் பின்னர் தெரிவு செய் யப்பட்ட, நியமிக்கப்பட்ட பெண் களின் பங்களிப்பு, ஆற்றலை மேம்படுத்த பல நடவடிக்கை கள் மேற்கொள்ள வேண்டியி ருக்கின்றது. உள்ளூராட்சி சபை களுக்கு தெரிவான பெண் அங் கத்தவர்களின் ஆற்றல் மேம் பாட்டை அதிகரிக்க நடவடிக்கை கள் எடுக்கப்பட்டு வருவதா கத் தெரியவருகின்றது. இதனால் இனிவரும் காலங்களில் பெண் களின் பங்களிப்பும் ஆற்றலும் இயற்கையாகவே அதிகரிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தல் முறை யில் தனி அங்கத்தவர் வட் டாரம், பல அங்கத்தவர் வட்டாரம் முதல் முறையாக உருவாக்கப் பட்டது. பல அங்கத்தவர் வட் டாரத்தில் இரண்டு அங்கத்த வர்களை தெரிவு செய்யும் வட் டாரங்களும் மூன்று அங்கத் தவர்களைத் தெரிவு செய்யும் வட் டாரங்களும் உருவாக்கப்பட் டமை சிறுபான்மை சமூகங் களுக்கு பெரும் வரப்பிரசாத மாக அமைந்தது. சிறுபான்மை சமூகங்களுக்கு இது நன்மை யாக இருந்த பொழுதும் வெற்றி பெற்ற கட்சிக்கே முழு ஆசனங்களும் கொடுக்கப்பட் டன. இரட்டை அங்கத்தவர் வட்டாரத்தில் இருவரும் மூன்று அங்கத்தவர் வட்டாரத் தில் மூவரும் வெற்றி பெற்ற கட்சிக்கே கிடைத்தது.

பல அங்கத்தவர் வட்டாரங் கள் பல்வேறு இனக்குழுமங் கள், சமயக் குழுமங்கள், சமூ கக் குழுமங்கள் பிரதிநிதித்து வம் பெற அமைக்கப்பட்டவை.

பல இடங்களில் கட்சிகள் பல அங்கத்தவர்கள் வட்டாரங் களில் ஒரே இனத்தை சேர்ந்த வர்களை அல்லது மதப் பிரிவை சார்ந்தவர்களை நிறுத்தி இரண்டு அல்லது மூன்று ஆசனங்க ளைப் பெற்றுள்ளன. இச் செய ற்பாட்டால் ஒரே இனத்தை சேர்ந்தவர்களை அல்லது மதப் பிரிவை சார்ந்தவர்களை நிறு த்தி இரண்டு அல்லது மூன்று ஆசனங்களைப் பெற்றுள் ளன. இச் செயற்பாட்டால் சிறு பான்மை சமூகம் தங்களுக்கு ரிய உரிமையை கொடுக்கப் பட்ட சந்தர்ப்பத்தை பெற முடி யாதுள்ளது. இதனால் பல அங் கத்தவர்கள் வட்டாரத்தில் குறி த்த இலக்கை அடைய கூடிய திருத்தம் ஏற்படுத்த வேண்டும்.

இன்றைய கலப்பு தேர்தல் முறை முன்னைய தேர்தல் முறைகளிலும் பார்க்க பல சிறப்பு அம்சங்களைக் கொண் டுள்ளன. இத் தேர்தல் முறை மூலம் எல்லோரையும் முழுமை யாக உள்வாங்கிய ஜனநாயக பிரதிநிதித்துவத்தைப் பெறக் கூடியதாக இருக்கின்ற பொழு தும் விருப்பு வாக்குமுறை ஒழி க்கப்பட்டது மக்களின் அடிப் படை உரிமை மீறும் செயலாகும்.

இன்றைய தேர்தலில் காண ப்படும் குறைபாடுகள் சட்ட ரீதியாகக் காணப்படும் குறைபா டுகள் நீக்கப்படுமாயின் இன் றைய கலப்புத் தேர்தல் முறை பல வழிகளிலும் ஜனநாயக வலிமை பெற்றுள்ளது. பெரிய கட்சிகளுக்கு மாத்திரமல்ல சிறிய கட்சிகளும் தங்களுக்குரிய பிரதி நிதித்துவத்தைப் பெற்று ஜன நாயகப் பங்களிப்பைச் செய்ய முடியும். (முற்றும்)

# வடக்கு-கிழக்கு இணைப்பை த.தே.கூ. ஏற்றுக்கொண்டுள்ளதா?

## பிள்ளையானின் கட்சி கேள்வி



(ஏறாவூர்)

நாங்கள் பல இடங்களிலும் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம். பிரிந்த வடக்குக் கிழக்கிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஏனைய கட்சிகளும் தேர்தலில் களமிறங்கின.

இணைந்த வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் களமிறங்கவில்லை. அதுபோன்று பிரிந்த வடக்கு- கிழக்கில்தான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தேர்தலில் களமிறங்கியிருந்தது என அக் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கு இணைப்பு தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

வடக்குக் கிழக்குப் பிரிப்புத் தொடர்பில் 2005 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அதனால்தான் வடக்கு- கிழக்கு பிரிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட கட்சியின் மேதினக் கூட்டத்தில்தான் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் கலந்து கொண்டிருந்தார்.

அவ்வாறானால் வடக்கு, கிழக்கு இணைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளதா? அல்லது இவ்வாறு நீதிமன்றம் சென்ற மக்கள் விடுதலை முன்னணிக் கட்சியின் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

வட மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தை ஒப்பிடும் போது வடக்கு மாகாணத்திலுள்ள சூழல் வேறு, கிழக்கு மாகாணத்திலுள்ள சூழல் வேறு, அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் எல்லோரும் ஒரு குடையின் கீழ் வருகின்ற போது, நல்லதொரு எதிர்காலம் அமையும் என்பது தான் எமது தலைவரினதும் தூரநோக்கிய சிந்தனையுமாகும்.

இதனை மக்களுக்கும் ஆரம்பத்தில் எடுத்துரைத்துள்ளோம். உண்மையில் கிழக்கு மாகாணத்தில் புத்திஜீவிகள் முன்வர வேண்டும். அவ்வாறு முன்வருகின்ற போதுதான் 63 வருடகாலமாக மிகப்போலித்தனமான பத்திரிகை அரசியலைச் செய்து கொண்டிருக்கின்ற, மக்களுக்கும் எதுவும் செய்யாமல் தங்களது ஆசனங்களைச் சூடாக்கிக் கொண்டிருக்கின்ற சில அரசியல் தலைமைகளின் மறுபக்கம் வெளிவரும் என அவர் தெரிவித்தார். (இ-7)

# அரசை மக்கள் விமர்சிப்பது ஏன்?

## விளக்குகிறார் அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

அரசின் உள்ளகப் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதிலேயே ஊடகங்கள் அதிகம் கவனம் செலுத்துகின்றன். அதனால் அரசின் அபிவிருத்திப் பணிகளை வெளிக்கொண்டு வருவதில் ஊடகங்களின் ஆர்வம் குறைந்துள்ளது. இதுவே இந்த அரசாங்கத்தை மக்கள் விமர்சிப்பதற்கும் அரசாங்கம் என்ன செய்துள்ளது என்று மக்கள் கேட்பதற்கும் காரணமாகும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஆனமடுவ ஒருங்கிணைந்த நீர்வழங்கல் திட்டத்தின் ஆரம்ப வேலைகள் நேற்று முன்தினம் அமைச்சர் ஹக்கீமின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்ததன் பின்னர் அங்கு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டின் மிக முக்கிய பிரச்சினையாக குடிதண்ணீர்ப் பிரச்சினை திகழ்கிறது. சுத்தமான குடிதண்ணீரை பொதுமக்களுக்கு வழங்குவதில் நாங்கள் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவ்வாறான சவால்கள் வந்தபோதிலும் அவற்றை தைரியமாக எதிர்கொள்ளும் திராணியும் சக்தியும் எம்மிடம் உள்ளன.

எனவே, நீர்வழங்கல் திட்டங்களில் அவ்வப்போது ஏற்படுகின்ற தொய்வுநிலையைத் துரிதமாக சரிசெய்து அத்திட்டாங்களை விரைவில் முடித்து மக்கள் பாவனைக்கு குழாய் வழியாக தூய்மையான குடிதண்ணீரை வழங்கி வைக்கும் தார்மீகப் பொறுப்பை உணர்ந்தவர்களாகவேநாங்கள்செயற்படுகிறோம்

அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள உள்ளக முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் வெளியே கொண்டு வருவதிலேயே இப்போது ஊடகங்கள் அதிகம் ஆர்வம் செலுத்துகின்றன. இதனால் இந்த அரசாங்கம் நேர்மையாக மேற்கொள்கின்ற அபிவிருத்திப் பணிகளை மக்களுக்கு வெளிப்படுத்துவதில் ஊடகங்கள் ஆர்வம் காட்டுவதில்லை.

ஆனால், எமது பணியை நாங்கள் எந்த விளம்பரங்களையும் எதிர்பார்க்காமல் செய்து கொண்டு தான் இருக்கிறோம்.

இந்த அரசாங்கம் பல்வேறு அபிவிருத்திப் பணிகளைமேற்கொள்கிறது. ஆனால் பொதுமக்கள் அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டே இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் பொதுமக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று கூறுகிறார்கள்.

பொதுமக்களின் இந்தக் கருத்திற்கு என்ன காரணம்? பதில் இதுதான்.

எனது அமைச்சுக்குக் கீழுள்ள நீர்வழங்கல் திணைக்கள ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமை தொடர்பிலும் இங்கு பேசப்பட்டது. நான் அமைச்சைப் பாரமெடுத்த உடனேயே 30% சம்பள உயர்வு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அதன்பின்னர் தற்போது 20% சம்பள உயர்வுக்கான திறைசேரி அனுமதியைப் பெற்றுள்ளோம். அதாவது, இந்த மூன்று வருடத்திற்குள் மொத்தமாக 50% சம்பள உயர்வை நாங்கள் பெற்றுக்கொடுத்தும் அதனை ஏற்றுக்கொள்ளாமல் வெறுமனே இன்னும் 3% சம்பள உயர்வை அதிகரிக்க வேண்டும் என்று வேலைநிறுத்தத்தை தொழிற்சாங்காங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இந்தத் தொழிற்சங்கங்களில் அனைத்து கட்சிகளைச் சேர்ந்த ஆதரவாளர்களும் இருக்கிறார்கள். இவர்களின் வேலை நிறுத்தம் தொடர்பில் வேறு அரசியல் தலையீடுகள் இருக்கின்றனவா? என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

எது எவ்வாறாயினும் இந்தத்தொழிற்சங்கங்கள்உண்மை நிலையைப் புரிந்து செயலாற்ற வேண்டும். இன்னும் நீர்க் கட்டணம் உயர்த்துவது தொடர்பில் நாங்கள் தீர்மானம் எடுக்கவில்லை. இப்போதும் நீரை சுத்திகரித்து குழாய் வழியாக பொதுமக்களுக்கு வழங்குவதற்குப் பாரிய செலவு ஏற்படுகின்றது.

ஆனால், நாங்கள் மிகக் குறைவான கட்டணத்தையே அறவிடுகிறோம். எனவே, எமது இந்தச் செயற்பாடுகளுக்கு தொழிற்சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எமது திணைக்களத்தில் உள்ளவர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவர்கள் என்பது நான் அறிந்த விடயம். இந்த விடயத்தில் அவர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகின்றேன்.

ஆனமடுவ ஒருங்கிணைந்த பாரிய நீர்வழங்கல் திட்டமானது புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டத்தில் வசிக்கின்ற ஒரு தொகுதி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்.

இத்திட்டத்தை எமது இந்த அரசின் கால எல்லைக்குள் முற்றாகப் பூர்த்திசெய்து மக்கள் பாவனைக்கு கையளிக்கத் திட்டமிட்டுள்ளோம். இது தொடர்பில் திட்ட முகாமையாளர் பத்மா குணவர்தன உட்பட்ட அதிகாரிகளுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்திலுள்ள 91 கிராமசேவகர் பிரிவுகளிலும் குருநாகல் மாவட்டத்திலுள்ள 34 கிராம சேவகர்கள் பிரிவுகளிலும் வசிக்கின்ற பொதுமக்கள் இதன்மூலம் தூய குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

36 மாத கால எல்லையில் பூர்த்தி செய்ய உத்தே




சிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் 81,741 பொது மக்கள்பயனடையவுள்ளார்கள்.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த ஸ்பெயின் அரசாங்கம் 4,633 மில்லியன் இலங்கை ரூபாவை கடனாக வழங்கியுள்ளது. இது தவிர, ஹற்றன் நேஷனல் வங்கி 2,050 மில்லியன் ரூபாவையும், இலங்கை அரசாங்கம் 1,942 மில்லியன் ரூபாவையும் வழங்குகின்றன, ஒட்டு மொத்தமாக இதற்கான மொத்தச் செலவானது 8,625 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நான் ஒரு சல்லிக்காசும் பெற்றுக்கொள்ளவில்லை

## கம்மன்பில சத்தியக்கடதாசி




கேலிச்சித்திரம்

(கொழும்பு)

பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்திடம் தான் ஒரு சதமேனும்வாங்கியதேஇல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் தொடர்புடைய பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியஸிடம் 118 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணம் பெற்றுக் கொண்டுள்ள விபரம் அண்மையில் தெரிய வந்தது. இந்தப்பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவும் உள்ளடங்கியிருப்பதாக சமூக வலைத் தளங்களில் தகவல்கள் பரவி வருகின்றன.

ஆனால், பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனம் அல்லது அர்ஜுன் அலோசியஸுடன் தொடர்புடைய நபர்களிடமிருந்தோ அல்லது எந்தவொரு நிறுவனங்களிடமிருந்தோ தான் ஒரு சல்லிக் காசும் பெற்றுக் கொள்ளவில்லை என்று உதய கம்மன்பில மறுத்துள்ளார். இது தொடர்பாக சமாதான நீதவான் ஒருவர் முன்னிலையில் அவர் சத்தியக் கடதாசியொன்றில் கையொப்பமிட்டுள்ளார்.

மேலும், அர்ஜுன் அலோசியஸ், அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்டவர்களுடன் தொடர்புடைய எந்தவொரு நபருடனும் எந்தவொரு கட்டத்திலும் தான் தொலைபேசியில் கூட உரையாடியது கிடையாது என்றும் அவர் தன் சத்தியப் பிரமாணத்தில் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 140 | 120 | 110 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 85 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 140 | 120 | 200 | 140 |
| தக்காளி | 150 | 150 | 160 | 130 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 150 | 140 | 120 | 60 | 120 | 140 |
| கரட் | 200 | 350 | 280 | 200 | 320 | 150 |
| பூசணி | 40 | 20 | 30 | 20 | 40 | 30 |
| புடோல் | 100 | 100 | 120 | 80 | 120 | 100 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 160 | 180 | 120 | 160 | 130 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 85 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 150 | 240 | 110 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 80 | 70 | 80 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 60 | — | 100 | 60 |
| பயற்றங்காய் | 60 | 100 | 80 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 250 | 400 | 320 | 240 | 350 | 250 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 70 | 120 | 100 |
| கறிமிளகாய் | 150 | 180 | 200 | 80 | 200 | 180 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 120 | 100 | 80 | 180 |
| போஞ்சி | 250 | 400 | — | — | 280 | — |
| சுந்தரிதம்பள்ள | 80 | 60 | — | — | 140 | 80 |
| கீரை-1பிடி | 40 | 30 | 40 | 30 | 50 | 50 |
| தேசிக்காய் | 160 | 130 | 180 | 150 | 240 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 40-80 | 70 | 25-65 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | — | 200 | 190 |
| வெங்காயப்பூ | 250 | 400 | 280 | — | 280 | 250 |
| முள்ளங்கி | 100 | 120 | 140 | 35 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 10 | 40 | 35 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | 100 | 80 | — | 100 | 50 |

எழுந்து நடந்தால் இமயமலையும் நமக்கு வழி கொடுக்கும்..
உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் நம்மை சிறை பிடிக்கும்..
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பளையில் குடியேற்றுவதை உடன் நடைமுறைப்படுத்துங்கள்

காணி இல்லாதவர்களுக்கு பளைப் பிரதேசத்தில் காணிகளை வழங்கி அவர்களைக் குடியமர்த்த முடியும் என்ற தகவலை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று முன்தினம் யாழ்ப்பாண செயலகத்தில் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்த யோசனைக்கு இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்களும் தனது உடன்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

காணி இல்லாதவர்களுக்கு பளையில் காணி வழங்க வேண்டும் என்ற சிறீதரன் எம்.பியின் முன்மொழிவு மிகவும் யதார்த்தமானது என்பதுடன் இப்படியான யோசனைகளை முன்வைத்து அதனை நடைமுறைப்படுத்துவதே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இலக்காக இருக்க வேண்டும்.

அந்த இலக்கு மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் பேசுபடுபொருளாகியிருப்பது மனதுக்கு ஆறுதலைத் தருகிறது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பளைப் பிரதேசம் நிலவளம், நீர்வளம் நிறைந்த இடம்.

தென்னைச் செய்கைக்கு மிகவும் உகந்தது என்று கூறப்பட்டாலும் பொதுவில் விவசாயத்துக்கு உகந்த நிலமாக பளைப் பிரதேசத்தைக் கூறமுடியும்.

ஒரு காலத்தில் ஏக்கர் கணக்கில் தென்னந் தோட்டங்கள் இருந்த இப்பிரதேசம் இன்று காடுபத்திக் கிடப்பதைப் பார்க்கும்போது இதயம் கருகிக் கொள்ளும்.

கொடிய யுத்தம் தமிழர்களின் பொருளாதாரத்தை எவ்வாறு அழித்தொழித்தது என்பதற்கு பளைப் பிரதேசம் தக்க சான்று.

யுத்தத்தால் அழிந்த பளைப் பிரதேசத்தில் மீண்டும் தென்னந்தோட்டங்களை உருவாக்கும் முயற்சிகள் நடப்பது மனதுக்கு ஆறுதலைத் தருகிறது.

கூடவே புலம்பெயர்ந்த எம் தமிழ் உறவுகளுக்குச் சொந்தமான பல ஏக்கர் காணிகள் இன்னமும் திருத்தியமைக்கப்படாத நிலையில் இருப்பதையும் காணமுடிகிறது.

இதுதவிர, தமிழகத்து கோயில்களுக்குச் சொந்தம் என்று அடையாளப்படுத்தக் கூடிய நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் பளைப் பகுதியில் இருப்பதான தகவல்களும் உண்டு.

யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடைப்பட்ட பிரதேசமாகவும் நன்னீரும் குளங்களும் நிறைந்த பகுதியாகவும் தொழிற்சாலைகளும் நகர வசதிகளும் ஏற்படக்கூடியதும் உயர் கல்விப் பீடங்கள் அமையக்கூடியதுமான பளைப் பிரதேசத்தில்,

எங்கெல்லாம் அரச காணிகளும் தமிழகத்துக் கோயில்களுக்குச் சொந்தமான காணிகளும் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பெற்று அதனைக் காணியற்ற எம் மக்களுக்கு வழங்க வேண்டும்.

இதைச் செய்வதன் மூலம் எங்கள் நிலங்கள் எங்கள் மக்களுக்கே என்ற புதிய கோசத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

எனவே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை விரைந்து அமுலாக்க வேண்டும்.

## பிணைமுறி மோசடிக்கு அரசு நிரந்தர தீர்வு தராது

### கூட்டு எதிரணி தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பேர்பெச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் நிதியினை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பறிமாற்ற வேண்டும் என தெரிவித்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தேசிய அரசாங்கம் பிணைமுறி மோசடிக்கு ஒருபோதும் நிரந்தர தீர்வினை தராது எனவும் குற்றவாளிகள் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

வஜிராஷ்ரம விகாரையில நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிணைமுறி கொடுக்கல் வாங்கல் மோசடியுடன் தொடர்புபட்டவர்கள் யார் யார் என்ற விடயம் தற்போது புரியாத புதிராகவே காணப்படுகின்றது. 118 பேர் அர்ஜுன் அலோசியஸிடமிருந்து பணம் பெற்றுள்ளதாக வெளியிடப்பட்ட தகவல்களை தொடர்ந்து தற்போது மக்கள் மத்தியில் அனைத்து அரசியல்வாதிகளும் நம்பிக்கையற்றவர்களாகவே காணப்படுகின்றனர். அரசாங்கம் 118 பேர்களின் முழுமையான விபரங்களை அறிவிக்காமல் மக்களின் அரசியல் சிந்தனைகளை திசை திருப்பி விடுகின்றது.

அரசாங்கம் வெகுவிரைவில் குறித்த மோசடியுடன் தொடர்புபட்டவர்களை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும். இவ்விடயம் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் இழுக்கினை ஏற்படுத்தும் செயலல்ல. சபாநாயகர் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தி மோசடிக்கு துணைபோனவர்களின் விபரங்களை வெளிப்படுத்த வேண்டும்.

அரசாங்கம் பிணைமுறி விவகாரம் தொடர்பில் இதுவரை காலமும் மந்தகரமாகவே செயற்பட்டு வருகின்றது. மோசடியில் ஈடுபட்டுள்ளவர்கள் விசாரணை குழுக்களில் உறுப்பினர்களாக காணப்படும்போது விசாரணைகள் மந்தகரமாகவே இடம்பெறும். பெர்பெச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனம தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் கோப் குழுவினர் பொறுப்பற்ற விதமாகவே அரசாங்கத்திற்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் பிணைமுறி விவகாரம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஒருபோதும் தேசிய அரசாங்கம் நிறைவேற்றாது. முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை அரசாங்கம் ஒருபோதும் நாட்டுக்கு மீளழைத்து வராது. முழுமையான அரசாங்க மாற்றத்தின் பின்னரே இவற்றிற்கு முழுமையான தீர்வுகாண முடியும்.

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் அனைவரும் மக்களின் பிரதிநிதிகள் மக்கள் தற்போது பாரிய வாழ்க்கைச் செலவுகளை எதிர்கொண்டுள்ள நிலையில் அரசாங்கத்தின் குறித்த யோசனை மக்களை மேலும் பாதிப்பிற்குள்ளாக்கும். எனவே அரசாங்கம் மக்களின் வாழ்க்கைச் செலவுகள் குறித்து கவனம் செலுத்துவதை விடுத்து அமைச்சர்களை தன்பக்கம் சேர்த்துக் கொள்ள சூழ்ச்சிகளை பிரயோகித்து வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கடலில் படகு விபத்து; நீந்திக் கரைசேர்ந்த மீனவர்கள்

(குருநகர்)

குருநகர் கடற்கரையிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை கடலுக்குச் சென்ற மீன்பிடிப் படகு கடும் காற்று காரணமாக மாதகல் முனைக் கடற்பரப்பில் அலையுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதனால் படகு, வலைகள் சேதமடைந்ததோடு படகில் பயணித்த மீனவர்கள் மூவரும் நீந்திக் கரை சேர்ந்தனர். (இ-105)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### தூய்மை காப்போம்



✦ இளமையான மூங்கிலை எளிதில் வளைக்க முடியும். அதுபோல, இளம் வயதிலேயே மனதை கடவுள் பக்கம் திருப்பி விடுங்கள்.

✦ மனித மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. உலகவிடயத்தில் ஈடுபட்டு சிதறி நாலாபுறமும் ஓடினால் ஒன்று சேர்ப்பது எளிதல்ல.

✦ பேசுவது யாருக்கும் எளிமையானது. ஆனால், அதைப் பின்பற்றி நடப்பது மிகவும் கடினமானது.

✦ மனமே கடவுள் குடியிருக்கும் வீடு. எப்போதும் அதன் தூய்மை காப்பது அவசியம்.

✦ தன்னைத் தானே ஒருவன் திறமைசாலி என்று கருதிக் கொள்வது முட்டாள்தனமான செயல்.

## மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் இன்று

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து தங்கியுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை உடனடியாக வெளியேற்றுமாறு கோரி மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மருதங்கேணி பிரதேச செயலகத்தின் முன்பாக இடம் பெறவுள்ளது.

இன்று புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இப் போராட்டம் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து கடலட்டை பிடிப்பவர்களால் அப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பெரும் சுகாதார சீர்கேடும் ஏற்பட்டுள்ளது.

எவ்வித அனுமதியும் இன்றி நாகர்கோவில், குடாரப்பு, செம்பியன்பற்று, தாளையடி பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து தங்கியுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த கடலட்டை பிடிப்பவர்களை உடனடியாக வெளியேற்றுமாறு கோரியே இக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இப் போராட்டத்தில் வடமாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச, நகர சபைகளின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள், கடற்றொழிலாளர்கள், விளையாட்டுக்கழகங்கள், இளைஞர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ம-௭௦)

## சமுர்த்தி உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று

2017ஆம் ஆண்டு சமுர்த்தி வங்கிகளின் தரப்படுத்தலில் தேசிய ரீதியில் 1ஆம், 2ஆம் இடங்களைப் பெற்ற உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட இணுவில் மற்றும் சுன்னாகம் சமுர்த்தி உத்தியோகத்தர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 2 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் மற்றும் நிறைவேற்றுச் சபை, இணுவில், சுன்னாகம் சமுர்த்தி வங்கிகளின் கட்டுப்பாட்டுச் சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. (ம-78)

## குவைத்திலிருந்து கொண்டுவரப்பட்ட 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சிகரெட்டுக்களுடன் நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில்வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை குவைத் நாட்டிலிருந்து வந்த சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரிடம் 14 இலட்சத்து 98 ஆயிரம் ரூபா பெறுமதியான 29,960 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு, கொலன்னாவ பகுதியை சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### எல்லோருக்கும் இறையருள் கிடைக்குமா?

எந்தவொரு கிரகப் பிழையும் இல்லாமல் இறைவனைத் துதிப்பவனுக்கு அவன் யாராக இருந்தாலும் இறையருள் கிடைக்கும். தங்களது சுகபோகத்திற்காக இறைவனை வணங்குபவர்களுக்கும் இறைவன் அருள்பாலிக்கிறான். இறுதியில் முக்தியடைச் செய்கிறான். அவர்களது விருப்பங்கள் நிறைவேறும். அதாவது ஒருவன் விரும்பாவிட்டாலும் அவனது மனதறிந்து அவனுக்கு வேண்டியதை இறைவன் கொடுப்பான். பக்தி ஒன்றுமட்டும் போதும் இறையருள் கிடைப்பதற்கு.

கிருஷ்ணன் மீது அன்பு கொண்டதால்தான் கோபியர்களுக்கு முக்தி கிடைத்தது. அவர்களின் மனது எந்த நேரமும் கிருஷ்ணனையே நினைத்துக் கொண்டிருந்தது. அதனால் கோபியர்களின் பக்தி என்றும் சிறந்ததாகும். மனதானது எந்தநேரமும் இறைவனையே நினைத்துக் கொண்டிருக்கும் பக்தி நமக்கு கிடைக்க வேண்டும். அனைத்தையும் கிருஷ்ணனுக்கு அர்ப்பணித்துத்தான் கோபியர்கள் தொண்டு செய்திருந்தார்கள்.

எனவே தான் நமது பெரியவர்களும் மதகுருமார்களும் நமக்கு சிறிதளவாவது பக்தி வேண்டும். அது இருந்தால் தான் முக்தி கிடைக்கும் என்று கூறியது. (தொடரும்)

# கம்பஹாவை காலி செய்து சம்பியனாகியது யாழ். மாவட்டம்



தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்ற யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்ட அணி. தேசிய இளைஞர் சேவை மன்றத்தின். 30 ஆவது விளையாட்டு விழாவின் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி அம்பலாங் கொடையில் நடைபெற்றது.

இதில், யாழ்.மாவட்ட அணி, அரையிறுதியில் 46:36 என்ற புள்ளிகள் அடிப்படையில் காலி அணியை வென்றது. இறுதிப் போட்டியில் கம்பஹா மாவட்ட அணியைச் சந்தித்தது.

முதல்கால்பாதியாட்டம் முடிவில் யாழ்.மாவட்ட அணி. 18:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது கால்பாதியாட்ட முடிவில் 30:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். மாவட்ட அணி முன்னிலையில் இருந்தது. தொடர்ந்து மூன்றாவது கால் பாதியாட்ட முடிவில் 44:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். மாவட்ட அணி முன்னிலையில் இருந்தது. நான்காவதும் இறுதியுமான கால்பாதியாட்ட முடிவில் 54:31 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று தேசிய சம்பியனாகியது.

இந்தக் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் தொடர்நாயகனாக யாழ்.மாவட்ட அணியின் கமலினி மில்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.(க-26)



ஊர்காவற்றுறை யா/ புனித அந்தோனியார் கல்லூரியின் கல்லூரித் தினத்தை முன்னிட்டு பழைய மாணவர்களுக்கும் மாணவர்களுக்கும் இடம்பெற்ற மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி அண்மையில் நடைபெற்றது.


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது
076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு
அனுப்பிவையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**


# யங்கம்பன்சின் துடுப்பாட்ட போட்டி காலிறுதியில் திக்கம் இளைஞர் வி.க



யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சுப்பர் 8 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. சுப்பர் 8 போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. விறுவிறுப்பாக நடை பெற்ற போட்டியில் 02:01 என்ற கோல் கணக்கில் திக்கம் இளை ஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று கால் இறுதிக்குத் தகுதி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் வெற்றிக்கு காரணமான நிஷாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (க)



விளையாட்டுத்துறை அனுசரணையில் கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விளையாட்டு விழா மற்றும் உடல் நல மேம்பாட்டு தேசிய வார நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.
(படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# நொதேர்ன் எலைட்- தமிழ் யுனைட்டட் மோதல்

## சமநிலையில் முடிவாகியது

வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின். லீக் சுற்றின் போட்டியொன்று 3 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற போது. நொதேர்ன் எலைட் அணியை எதிர்த்து தமிழ் யுனைட்டட் அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் ஒன் கோல் மூலம் தமிழ் யுனைட்டட் அணிக்கு கோல் ஒன்று கிடைத்தது. அந்தக் கோலுடன் முதற்பாதியாட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில், தமிழ் யுனைட்டட் அணியின். மரியதாஸ் யூட் அற்புதமான கோல் ஒன்றை அடித்தார். இதன் பின்னர் நீண்டநேரம் கோல்கள் பதிவு செய்யப்படாமல் ஆட்டம் இழுபறியில் இருந்தது. தமிழ் யுனைட்டட் அணியின் யூட் அடித்த பந்து ஒன்று. கோல் கம்பத்தில் பட்டு திரும்பியது. இரண்டாவது பாதியாட்டத்தின். இறுதி தறுவாயில். நொர்தேன் எலைட் அணியின் அலெக்ஸ் கோல் ஒன்றைப் பதிவு செய்தார். அந்த கோலை சற்றும் எதிர்பார்க்காமையால், குழம்பிய தமிழ் யுனைட்டட் அணி இதனைச் சாதகமாக்கிய நொதேர்ன் எலைட் அணி, இரண்டாவது கோலைப் போட்டது. அதனை அவ் வணியின் பிரகாதன் அடித்தார்.

ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தமையால், ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (க-26)





## கூட்டமைப்பில் தொடர்ந்து...

தான் தெரியும். எனவே அது அது அந்தந்த நேரத்தில் நடந்துள்ளது எனவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.பொது நூலக மண்டபத்தில் தமிழ் மக்கள் பேரவையின் இளைஞர் மாநாடு தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன் போது அங்கு முதலமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கும் போதே இதனை தெரிவித்தார். இந்நிலையில் முதலமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மேலும் அவர் பதிலளித்திருப்பதாவது,

**கேள்வி:**தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாடுகள் கடந்த காலங்களில் மந்த கதியில் இடம்பெறுவதாக பொதுவாக கூறப்பட்டதே இந்நிலையில் தற்போது இளைஞர் மாநாடும் வெறுமனே கருத்துருவாக்கமாக மாத்திரமாகவா இருக்கும்.

**பதில்:**இதுவரை காலமும் எம்மோடு பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள் நடைமுறைப்படுத்தியிருந்தார்கள். எனவே அவர்கள் தமது பணிகளையும் கவனித்துக் கொண்டு இவற்றை செய்ய வேண்டியிருந்தது. ஆனால் தற்போது கூடிய நேரத்தை தம்மிடம் வைத்திருக்க கூடியவர்கள் எம்மோடு இணைந்து நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ளார்கள். எனவே கூடிய விரைவில் நடவடிக்கை எடுப்போம்.

**கேள்வி:** வடக்கு மாகாண சபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற, வடக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள குடியேற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டத்திற்கு நீங்கள் செல்லவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளதே.

**பதில்:**அக் கூட்டத்திற்கு கடைசி வரை நான் போவதாக இருந்தேன். ஆனால் எனது தனிப்பட்ட காரணங்களுக்காக என்னால் அங்கு செல்ல முடியவில்லை. எனினும் அது தொடர்பாக அவைத் தலைவருக்கு கடிதம் எழுதியிருந்தேன். அதாவது நீங்கள் முடிவுகளை எடுங்கள் அவற்றுக்கு செயல் வடிவம் கொடுக்கும் போது நான் முதலமைச்சர் என்ற வகையில் அனைத்தையும் செய்வேன் என குறிப்பிட்டிருந்தேன்.

**கேள்வி:**யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் இராணுவத்தின் செயற்பாடு இருக்க கூடாது என யாழ்.மாநகர சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருந்தது. அத்துடன் மாகாண சபையிலும் இது தொடர்பாக பேசப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் நேற்றைய தினம் மர நடுகை நிகழ்வின் போது இராணுவத்தோடு இணைந்து நீங்கள் அதில் பங்குபற்றியுள்ளீர்களே.

**பதில்:**அது வடக்கு மாகாண ஆளுநர் யாழ். மாநகர சபை மேயர் இராணுவத்தோடு சேர்ந்து இந் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இந்த நேரத்தில் அதனை புறக்கணித்தால் அது எங்கள் மக்களை தான் பாதிக்கும்.

மேலும் எல்லா விடயங்களையும் நாம் அரசியல் ரீதியாக பார்க்கக் கூடாது. எமக்கு வருகின்ற நன்மைகளையும் நாம் பார்க்க வேண்டும். அத்தோடு இராணுவமே மரங்களை வெட்டியது. எனவே அவர்களே அதனை நாட்டி தரட்டும்.

எனினும் இச் செயற்திட்டமானது என்னிடம் பேசப்பட்டு எங்களூடாக செய்யப்பட்டிருந்தால் நான் நிச்சயம் இதற்கு இடம்கொடுத்திருக்க மாட்டேன்.

**கேள்வி:**நீங்கள் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்க போவதாக பரவலாக பேசப்படுகின்றதே ?

**பதில்:**நானும் அவ்வாறு தான் கேள்விப்பட்டேன். அந்தளவே எனக்கும் தெரியும். எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி:**தமிழ் மக்கள் பேரவை அடுத்த மாகாண சபை தேர்தலில் போட்டியிடுமா?

**பதில்:**பேரவை சார்பில் ஒருவரையும் நியமிக்க மாட்டோம். ஆனால் பேரவையின் அனுசரணையில் யாராவது முதலமைச்சர் வேட்பாளராக வரக்கூடும்.

**கேள்வி:** நீங்கள் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பான முன்னேற்றம் இடம்பெறுவதாக கூறப்படுகின்றதே ?

**பதில்:**முன்னேற்றம் ஒன்று நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றது. ஆனால் அது கட்சி ரீதியானது என நான் பார்க்கவில்லை.

**கேள்வி:**அடுத்த மாகாண சபை தேர்தலில் நீங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுவீர்களா ?

**பதில்:**2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின் தேர்தலில் போட்டியிடுவேன் என்பது அதற்கு மூன்று மாத காலத்திற்கு முன்பு தான் தெரியும். எனவே அது அது அந்தந்த நேரத்தில் நடந்துள்ளது.

இந்நிலையில் தற்போது இது தொடர்பாக உறுதியாக எதனையும் கூற முடியாது. எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அடுத்த மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பது தொடர்பாக உரிய நேரத்தில் உரிய பதிலை கூறுவேன் என்றார்.(ம-4)

## கட்டாக்காலி...

பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக உளுக்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

சூடு வெந்தபுலவு பகுதியில் சபாரி மோட்டார் சைக்கிளில் தச்சு வேலை செய்வதற்காக சென்ற தொழிலாளியான துரைச்சாமி திருநாவுக்கரசு-53 வயது என்ற குடும்பஸ்தர் வீதியில் நின்ற கட்டாக்காலி மாட்டுடன் மோதுண்டு விபத்துக் குள்ளாகி சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபமாகஉயிரிழந்துள்ளார்.

இவருடன் மோட்டார் சைக்கிளில் கூடப் பயணித்த பொன்னம்பலம் ஜெயக்குமார் வயது 48 என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் பொது மக்களால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற உளுக்குளம் பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதுடன், விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-15.250)

## ஐக்கிய தேசிய கட்சி...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால பிரதி சபாநாயகர் பதவியைத் துறந்தார். அதனால் நாடாளுமன்றில் பிரதி சபாநாயகருக்கு வெற்றிடம் ஏற்பட்டது.

அந்தப் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சுதர்சினி பெர்ணான்டோபிள்ளையும் முன்மொழியப்பட்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பிரதி சபாநாயகர் பதவியை வழங்குவதே பொருத்தமானது என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் சபையில் யோசனை முன்வைத்தார்.

எனினும் பிரதி சபாநாயகர் பதவிக்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்துவது என அறிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மகிந்த ஆதரவு கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் வாக்கெடுப்பில் பங்கேற்காது வெளியேறினர்.

இரகசிய வாக்கெடுப்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி 97 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்ணான்டோபிள்ளை 53 வாக்குகளையும் பெற்றனர்.

அதனடிப்படையில் 29ஆவது பிரதி சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி தெரிவானார்.

சபாநாயகர் கரு ஜயசூர்ய ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## விபத்துக்குள்ளான...

ளில் அங்கிருந்து பேருந்து தரிப்பிடத்துக்கு வந்துள்ளார்கள்.

வரும் வழியில் மாட்டுக் கூட்டம் வீதியால் வந்துள்ளது. எதிரே வந்த மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவரும் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலதிக சிகிச்சைக்காக குறித்த இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

## நடவடிக்கை எடுக்கக்...

ஒன்றை முன்னெடுத்திருந்தன.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நல்லூர் கிட்டு பூங்கா முன்பாக ஒன்று கூடிய ஆசிரியர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கிருந்து ஊர்வலமாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்திற்கு சென்று அங்கு அமைதி வழியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

தொடர்ந்து அலுவலகத்தில் அமைச்சர் இல்லாத காரணத்தால் அங்கிருந்து பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரிடம் அமைச்சருக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-4)

## தாங்கள் தலைவர்...

பாராளுமன்றம் நேற்றுக் கூடிய போது பிரதி சபாநாயகர் பதவிக்கான தெரிவு இடம் பெற இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்தகுமாரசிறியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோவும் போட்டியிட்டனர்.

வாக்களிப்பதற்கு முன்னதாக பாராளுமன்றத்தில் உரைகள் நிகழ்ந்தபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தர் தனது உரையில்,

பிரதி சபாநாயகராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரையே நியமிக்க வேண்டும். அவருக்கே பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனை பிரதிசபாநாயகராக முன்மொழிந்தபோது அதனை எதிர்ப்போம் என்று கூறிய நீங்கள் இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரே பிரதிசபாநாயகராக இருக்க வேண்டும் எனக் கூறுவது சரியா? எனக் கேட்டார்.

எனினும் பிரதி சபாநாயகர் பதவி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே கிடைக்க வேண்டும் என்பதால், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சுதர்சினி பெர்னாண்டோவுக்கே வாக்களிக்க வேண்டும் என சம்பந்தர் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தர் கூற, அவரது தலைமையிலான கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களில் மாவை சேனாதிராஜா தவிர்ந்த ஏனைய அத்தனை பேரும் ஒரேநேரத்தில் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறினர்.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தன் சொல்லுக்கு மதிப்பளிக்காமல் வெளியேறியதால் இரா.சம்பந்தர் தலைகுனிந்த படி ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

சிறிது நேரத்தின் பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா சம்பந்தரின் காதில் ஏதோ கூறிவிட்டு அவரும் வெளிநடப்புச் செய்தார்.

இந்நிலையில் எதுவும் செய்ய முடியாத கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் வாக்களிப்பின்போது தானும் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறினார்.

இவ்வாறு அவர் வெளியேறும் போது அங்கிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் சிரிப்பொலி தமிழர்களின் ஒற்றுமையீனத்தை கேலி செய்வதாக அமைந்திருந்தது.

இனிமேல் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரின் சொல்லைக் கேட்கப்போவதில்லை என்பதை நிரூபிக்கவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே எங்கள் ஆதரவு என்பதை வெளிப்படுத்தவுமே கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு வெளிநடப்புச் செய்தனர் என அரசியல் ஆய்வாளர்கள் கருத் துரைத்துள்ளனர்.

எதுஎவ்வாறாயினும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தனது அரசியல் வாழ்வில் இப்படியொரு பெருத்த அவமானத்தை ஒருபோதும் சந்தித்திருக்கமாட்டார் என சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவர் விமர்சித்துள்ளார். (ம)

## இராணுவத்தினருடைய...

பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசிய மரம் நடுகை தினத்தை முன்னிட்டு மரநடுகை நிகழ்வு பண்ணைப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த மரம் நடுகை திட்டத்தில் இராணுவத்தினர் செயற்படுகிறார்கள் என்றும் அவர்கள் யாழ் மாநகரில் சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும் தெரிவித்து யாழ் மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் இராணுவத்தினர் பங்கு கொள்ளும் செயற்பாட்டில் மாநகரசபை உறுப்பினர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும் குறித்த தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையில் மாநகரசபை உறுப்பினர்கள் இந்த நிகழ்வை புறக்கணித்திருந்த போதிலும் மாநகர முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் மற்றும் ஒரு சில உறுப்பினர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## யாழிற்கு போதைப்பொருள்...

செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 25 கிராம் 240 மில்லி கிராம் ஹேரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு வாழைத் தோட்டத்தைச் சேர்ந்த குறித்த சந்தேகத்துக்குரியவர், மற்றுமொருவரின் வழிநடத்தலுக்கு அமைய, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு போதைப்பொருளை விநியோகிப்பதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த நபர். போதைப்பொருளை பயன்படுத்தியவாறு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு போதைப்பொருளை கொண்டு சென்று, மற்றொருவரின் வழிகாட்டலில், யாழ்ப்பாணத்தில் போதைப்பொருளை விநியோகித்து மீண்டும் கொழும்பு திரும்புவார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தொலைபேசி ஊடாக மற்றொருவரின் வழிகாட்டலில் அவர் இந்த போதைப்பொருள் விநியோகத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் நேற்று யாழ்ப்பாணத்திற்கு பேருந்தில் சென்ற அவரிடம் தொலைபேசி இல்லாத காரணத்தினால், அவர் கலேவை நகரில் பேருந்திலிருந்து இறங்கியுள்ளார்.

இதையடுத்து, குறித்த போதைப்பொருள் விநியோகம் தொடர்பில் கலேவெல பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொண்ட விசாரணைகளில் குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## துன்னாலை தெற்குப்...

கிருந்த இரண்டு மோதிரம்,

இரண்டு தொலைபேசி மற்றும் கடவுச் சீட்டு என்பவற்றை திருடிச்சென்றனர்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ம-60)

## பதவி வெற்றிடங்கள்

O/L, A/L படித்தவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு... யாழ் மண்ணில் ஒரு தசாப்தகாலமாக வெற்றிகரமாக இயங்கிவரும் D.N.M.C இன் வடக்கு மற்றும் கிழக்கில் திறக்கப்படவிருக்கும் புதிய கிளைகளுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர். வயதெல்லை 18-30. தகுதிக்கேற்ப சிறந்த வருமானம்

தொடர்புகளுக்கு 0766668385

(4401)

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

(C-2810)

## INFORMATION TECHNOLOGY Park

Jaffna, Srilanka
Under the purview of the Ministry of Telecommunication & Digital Infrastructure

ITP

OFF.NO :- 021 222 3641 FAX.NO :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் நிகழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

**Diploma Cources** (06 Month)
Dip.in Microsoft Office
Dip.in Desktop Publishing
Dip.in Information Technology
Dip.in Computer Programming

**Online Cource** (06 Month)
Dip.in PC Application & Office Management

**Workshop** (20 Hours)
Internet & e-mail
Webpage Designing & Development

**Languages** (06 Month)
VB.net PHP
C Sharp Java

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 14.06.2018
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 16.06.2018

127, K.K.S.Road, Jaffna, Srilanka - Executive Officer -

## இலங்கை வழியாக...

தோணியில் தப்பிச் செல்ல முயன்றவெள்ளையைச் சேர்ந்த கமல் (26), லோகிதாஸ் (19) கங்கா (21) குழந்தை சைனி (5) உள்ளிட்ட நான்கு பேர் இராமேஸ்வரம் தனியார் தங்கும் விடுதியில் வைத்து நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

விசாரணையின் போது குறித்த நபர்கள் இலங்கை வழியாக அவுஸ்ரேலியா செல்ல திட்டமிட்டதாக தெரியவந்துள்ளது.

மேலும் அவர்களிடம் தீவிரவிசாரணை நடைபெற்று வருகிறது. (ம-9)

## வீடு வாடகைக்கு உண்டு

இல.30/1 சபாபதிப்பிள்ளை வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள 2 1/2 பரப்புடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு:- 077 738 9970

(4200)

## தேவை

PharmaCeutical Distributers ஒன்றுக்கு அனுபவம் உள்ள விற்பனை பிரதிநிதியும் (Sales Representative) பயிலுநர் விற்பனை பிரதிநிதியும் தேவை.

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

Hot Line:- 076 441 2866

(4285)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## துரித தபால்கள் பொதிகள் சேவை

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Canada | -850/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா.

Hotline -0777554528

(C-2831)

## எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கை

- அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
- அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.

**அருள்**

சாவகச்சேரி
இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

நெல்லியடி
இல. 01 பெற்றோல் செற் லேன், நெல்லியடி.
076 443 1576

கிளிநொச்சி
இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
(வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்)
076 443 1576

(C-1813)

## கிளிநொச்சியில் வேலை வாய்ப்பு

எமது கிளிநொச்சி கிளைக்கு அலுவலக நிர்வாகிகள் தேவைப்படுகின்றார்கள்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

வயது :-18-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 15000/-

V2 TRAVELS

A9 வீதி, கிளிநொச்சி 0768226241 v2vacancies@gmail.com

(C-2832)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg

DELIVERY IN 3-5 DAYS

மானிப்பாய் 0768226240
யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-2765)

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9888

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – கன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

(C-2811)

## இறுதிக்கருத்தரங்கு

வடமாகாண ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சை
முற்றிலும் எதிர்பார்க்கை வினா விடைகள் உள்ளடக்கம்

BY: P.கமல்தாசன்

வியாழன், வெள்ளி } 02.30pm - 06.00pm

நாவலர் கல்வி நிறுவனம், ஆனைப்பந்தி

077 469 6695

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல சேவை நிறுவனம் ஒன்றிற்கு கிளை உதவியாளர் (ஆண்) தேவை.

**தகைமைகள்**

- A/L சித்தி.
- ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
- வயது எல்லை 18-30 வரை.
- கிளிநொச்சி நகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

T.P:- 076 690 8976, 076 376 0022

## வேலைவாய்ப்பு

- சர்வதேச நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பு
- எல்லையற்ற வருமானம்
- ஐரோப்பிய நாடுகளுக்கான வெளிநாட்டுப் பயணங்கள்
- வாகன கடன் வசதி
- வீட்டு கடன் வசதி
- மேற்படிப்பை தொடர்வதற்கான நிதியினை திரட்டும் வசதி ஓய்வூதியம்

**பதவி வெற்றிடங்கள்**

- நிதி திட்டமிடலாளர்
  - O/L சித்தியடைந்திருத்தல்
- நிதி திட்டமிடல் முகாமையாளர்
  - A/L சித்தியடைந்திருத்தல் * ஒருவருட வேலை அனுபவம்.
- முகாமையாளர்
  - நிதி திட்டமிடல் துறையில் 2 வருட அனுபவம்



நிதி நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
62/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
076 528 9947

(4299)

ஹொட்டேல்துறை அனுபவமுள்ளவர்களுக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான

## செங்கன் விசா

ஏற்பாட்டுடன் உடனடி வேலைவாய்ப்பு

சம்பளம் ரூ. 126,000/-

Waiters 100 பேர் – Commis
உணவு விநியோகஸ்தர் – வயதெல்லை 35 – சமையல் உதவியாளர்

நட்சத்திர தர ஹொட்டேல் அல்லது உயர்தர உணவகங்களில் பணியாற்றிய அனுபவம், ஆங்கில தொடர்பாடலில் அவசியம்

அனுபவம் இல்லாதவர்களுக்கு 3 - 4 மாத விசேட

ஹொட்டேல் பயிற்சி

& ஆங்கில தொடர்பாடல் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு, விசா ஏற்பாடு

O/L or A/L எடுத்த மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

அரச அங்கீகாரம் பெற்ற வடக்கின் ஒரே வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

தொடர்புகளுக்கு: 0777 324 004, 077 36 16 798

SIKARAM ACADEMY – Emerald Isle

221 - 1/1, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
021 - 222 00 11
www.sikaram.lk

077 60 38 205, 077 55 46 966, 021 221 9221

(C-2259)

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட் யாழ்ப்பாணம்

**கருத்தரங்கு**

இந்து நாகரிகம்

A/L 2018

ஆசிரியர்:- ப.ஜோதீஸ்வரன்
(B.A.PG Dip.in Edu.M.A S.L.T.S-1)

காலம்:- 17.06.2018
நேரம்:- 03.00 am

Note
01. கருத்தரங்கிற்கான காலம், நேர அட்டவணையை பொருளியற் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
02. 17.06.2018ற்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளவும்.
03. வெளி மாணவர்களும் உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

-நிர்வாகம்

(C-2815)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.